


## வெற்றிகரமான 120-வது வருடத்தின் தொடக்கம்




புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மத்திய அலுவலகம், 23 & 24 டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்.

# 119வது ஆண்டு அறிக்கை

## 2022-2023

## கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம் - 612 001.
CIN : U65991TN 1903 PLN 001246. Ph : 0435 - 2401548
Fax : 0435 - 2431682 Website : www.kmbf.co e-mail : kmbf@kmbf.co

**இந்தியாவில் NDH4 அங்கீகாரம் பெற்ற முதல் நிதி நிறுவனம்**

KMBF NIDHI LIMITED

# மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியின் அங்கீகார சான்றிதழ் (NDH-4)

सत्यमेव जयते

## GOVERNMENT OF INDIA
### MINISTRY OF CORPORATE AFFAIRS

Registrar of companies, Chennai
Block No. 6, B' Wing, 2nd Floor Shastri Bhawan 26, Chennai, Tamil Nadu, India, 600034

Corporate Identity Number: U65991TN1903PLN001246

**SECTION 406(1) OF THE COMPANIES ACT, 2013**

Certificate pursuant to declaration of Nidhi

Given under my hand at Chennai this Nineteenth day of May Two thousand twenty-two

DS MINISTRY OF CORPORATE AFFAIRS 15

Deepak Persoya

Registrar of Companies
Registrar of companies, Chennai

---

Mailing Address as per record available in Registrar of Companies office:
**KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI**
**145,BIG STREET, KUMBAKONAM, THANJAVUR DISTT, Tamil Nadu, India, 612001**

1903-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட நமது கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனம் கம்பெனிகள் சட்டம் 1956, பிரிவு 620-A ன்படி "நிதி" என்ற அங்கீகாரத்துடன் செயல்பட்டு வந்தது.

திருத்தப்பட்ட கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 406(1)-ன்படி மத்திய அரசின் அனைத்து சட்ட திட்டங்களையும் முறையாகப் பின்பற்றி **NDH-4** படிவம் சமர்ப்பித்து கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகத்தின் அறிவிப்பின்படி "நிதி" என்ற அங்கீகாரத்தை தமிழ்நாட்டில் பெற்ற முதல் நிதி நிறுவனம் நமது

**"KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI LIMITED"**

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## 118 - வது ஆண்டு பேரவைக் கூட்டம் - 28.09.2022




## கும்பகோணம் பஜார் கிளை புதிய கட்டிட திறப்பு விழா



# ஜெயங்கொண்டம் கிளை இடமாற்றம்



# குத்தாலம் கிளை திறப்பு விழா



## இயக்குநர்கள் குழு



திரு. **S.கல்யாணசுந்தரம்** M.P.,
தலைவர்



திரு. **S.இராமலிங்கம்** B.A.,MP.,
துணை தலைவர்



திரு. **PR.P.வேலப்பன்** B.A.,
மேலாண் இயக்குநர்



டாக்டர். **G.அன்பழகன்** MLA.,
இயக்குநர்



திரு. **B.பிரகாசம்** B.Com.,
இயக்குநர்



திரு. **S.ஹரிஹரன்** B.Com.,FCA.,
இயக்குநர்



திரு. **G.துரைராஜ்**
இயக்குநர்



திருமதி. **E.அம்பிகா**
இயக்குநர்



திரு. **M.குரு பிரசாந்த்** B.E., Mech.,
இயக்குநர்

## நிர்வாகிகள்

**திரு.R.சுபாஷ்**
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

| | | | |
|---|---|---|---|
| திரு. **C.திருஞானசம்பந்தம்**<br>உதவி பொது மேலாளர் | திரு. **P.கருணாநிதி**<br>உதவி பொது மேலாளர் | திரு. **S.சண்முகம்**<br>உதவி பொது மேலாளர் | திரு. **S.வெங்கடேசன்**<br>உதவி பொது மேலாளர் |

## சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| M/s.**G.நடேசன் & கோ.,**<br>பட்டய கணக்காளர்கள்<br>FRN.002424S | M/s.**சண்முகம் & அசோசியேட்ஸ்**<br>பட்டய கணக்காளர்கள்<br>FRN.006655S | M/s.**சாஸ்திரி & ஷா**<br>பட்டய கணக்காளர்கள்<br>FRN.003643S | M/s.**G.S.சீனிவாசன் & கோ,.**<br>பட்டய கணக்காளர்கள்<br>FRN.012043S |

## கம்பெனி செயலர்

CS. **V.விஜயகுமார்**
கம்பெனி செயலர்
M.No. ACS69164
பாண்டிச்சேரி - 605 001.

## சட்ட ஆலோசகர்கள்

| | | |
|---|---|---|
| திரு. **K.சக்கரபாணி** B.A., B.L.,<br>வழக்கறிஞர், கும்பகோணம். | திரு. **P.R.ஜெயக்குமார்** M.Com., B.L.,<br>வழக்கறிஞர், கும்பகோணம். | திரு. **I.ஆணையப்பன்** B.Com., B.L.,<br>வழக்கறிஞர், திருச்சி |

## ராயா மஹால் செல்லும் வழி



எங்களது நிறுவனம் 120 -வது ஆண்டில் வெற்றிகரமாக அடி எடுத்து வைக்கிறது

# 119-வது வருடாந்திர பேரவை கூட்ட அறிவிப்பு

நிதியின் பங்குதாரர்களின் **119-வது வருடாந்திர பேரவை கூட்டம் நாளது 2023-ம் வருடம், செப்டம்பர் மாதம் 29-ம் தேதி, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்** கீழ்காணும் பொருள்கள் குறித்து விவாதித்து தீர்மானிக்க **ராயா மஹால், 73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம்-612 001** என்ற முகவரியில் நடைபெறும் என்று கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு 96 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

## நிகழ்ச்சி நிரல்

**சாதாரண அலுவல்கள் (Ordinary Business)**

1. மார்ச் 31, 2023-ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளையும் இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர் குழுவின் அறிக்கைகளையும் பெறுதல், பரிசீலித்தல் மற்றும் ஏற்றுக்கொள்வது.
2. 2022-23 ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத்தொகையை அறிவித்தல்.
3. சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர் திரு.M.குரு பிரசாந்த் (DIN:09359770) அவர்கள் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல், இவர் மீண்டும் தேர்வு பெற தகுதியுடையவர். மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார்.
4. சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர் திருமதி.E.அம்பிகா (DIN : 09353335) அவர்கள் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல், இவர் மீண்டும் தேர்வு பெற தகுதியுடையவர். மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

**சிறப்பு அலுவல் (Special Business)**

5. **நிதியின் அமைப்பு முறையேட்டில்** (Memorandum of Association) **திருத்தம் செய்வது**

மேற்படி தீர்மானத்தை பரிசீலித்து தகுதியுடையது என கருதினால் திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இன்றியோ சிறப்பு தீர்மானமாக (Special Resolution) நிறைவேற்றுதல்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் ஏதுமிருப்பின் அவற்றை அனுசரித்து (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்ட பூர்வ திருத்தங்கள் அல்லது மறு அமலாக்கம் உள்பட) மற்றும் தேவையான ஒப்புதல், அனுமதிகள் மற்றும் தடைகளுக்கு உட்பட்டு சட்டபூர்வ அதிகாரம் மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து விதிகள் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் ஏதேனும் இருந்தால் அவற்றை அனுசரித்து பின்வரும் திருத்தத்தை செயல்படுத்துவதற்கு நிதியின் உறுப்பினர்களால் இதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**நிதியின் அமைப்பு முறையேட்டில் (MoA) பின்வரும் உட்பிரிவில் மாற்றம் செய்தல் :**

நிதியின் பதிவு அலுவலகம் 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம் - 612 001 என்ற முகவரியில் அமைக்கப்படும்.

மேற்கூறிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான, அவசியமான மற்றும் சரியானது என கருதப்படும் ஆவணங்களிலும் மின் படிவங்களிலும் கையொப்பமிட்டு கம்பெனிகள் துறை பதிவாளருக்கு தாக்கல் செய்ய இயக்குநர்களில் ஒருவர் / கம்பெனி செயலர் ஆகியோருக்கு அங்கீகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது.

இயக்குநர் அவையின் உத்தரவுப்படி
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

இடம் : கும்பகோணம்
நாள் : 24-08-2023

CS.**V.விஜயகுமார்**
கம்பெனி செயலர்

**குறிப்புகள் :**

1. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 91-ன் படி, பங்கு பரிமாற்றங்களின் நோக்கத்திற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 23 செப்டம்பர், 2023 முதல் 29 செப்டம்பர், 2023 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்பட்டிருக்கும்.

2. கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கத் தகுதியுள்ள ஒரு உறுப்பினர் தனக்குப் பதிலாக கலந்துகொள்ளவும், வாக்களிக்கவும் ஒரு பதிலியை (Proxy) நியமிக்கவும் உரிமையுண்டு. அத்தகைய பதிலி நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலி படிவங்கள் பயனுள்ளதாக இருக்க, கூட்டம் தொடங்குவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக முறையாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் அவை பதிவு செய்யப்பட வேண்டும்.

3. உறுப்பினர்களின் சார்பாக ஒரு நபர் பதிலாளராக செயல்பட வேண்டுமெனில், அவர் ஐம்பது நபருக்கு மிகாமல் மற்றும் நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் 10%க்கு மிகாமல், வாக்களிக்கும் உரிமையை வைத்திருக்கலாம். வாக்கெடுப்பு மூலம் வாக்களிக்கும் பட்சத்தில் பங்குதாரர்களின் மொத்த வாக்குரிமையில் 5%க்கு மேல் எந்த உறுப்பினரும் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தக்கூடாது.

4. எந்தவொரு உறுப்பினரும் ஒரே மாதிரியான பெயர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட Folios வைத்திருந்தால், தயவு செய்து நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு எழுதலாம், இதனால் அவர்களின் பங்குகள் ஒரே Folio-வாக ஒருங்கிணைக்கப்படும்.

5. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 125(2) (C)-ன் படி, 2014-2015 நிதியாண்டிற்கான செலுத்தப்படாத ஈவுத்தொகை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது மற்றும் கடந்த ஏழு வருட காலத்திற்கு உரிமை கோரப்படாமல் இருக்கும் (F.Y 2015-16க்கான) ஈவுத்தொகை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) மாற்றப்படும்.

6. உறுப்பினர்கள் தங்கள் முகவரிகளில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

7. உறுப்பினர்கள் kmbf@kmbf.co என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. உறுப்பினர்களின் வசதிக்காகவும், கூட்டத்தை முறையாக நடத்துவதற்காகவும், கூட்ட அரங்கிற்குள் நுழைவதற்கு இந்த ஆண்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள வருகை சீட்டு மூலம் ஒழுங்குபடுத்தப்படும். உறுப்பினர்கள் வருகை சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கையொப்பமிட்டு, அதை கூட்டம் நடைபெறும் இடத்தில் உள்ள பதிவு கவுண்டரில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**செயலக தரநிலை - 2-ன்படி நியமிக்கப்பட்ட இயக்குநர்களின் விபரகுறிப்புகள் :**

| | |
|---|---|
| பெயர் மற்றும் கல்வி தகுதி | திரு.M.குரு பிரசாந்த் B.E., |
| வயது | 25 வருடங்கள் |
| அனுபவம் / சிறப்பம்சம் | நிதி நிறுவனம் தொடர்பான வணிக அனுபவம் |
| நியமன விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & ஊதிய விபரங்கள் | இயக்குநர் - சுழற்சி முறை நியமனம் |
| முந்தைய பெறப்பட்ட ஊதியம் | ரூ.4,73,422/- |
| நியமன தேதி | 08-11-2021 |
| 31 மார்ச் 2023 வரை பெற்றுள்ள பங்கு உரிமை | 500 - சம உரிமை பங்கு |
| இயக்குநர்கள்/KMP இவர்களுடனான உறவு முறை | இல்லை |
| கலந்துகொண்ட இயக்குனர் அவை கூட்ட எண்ணிக்கை | 13 |
| மற்ற நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பு | இல்லை |
| இதர குழுவின் உறுப்பினர்/தலைவர் பொறுப்பு | இல்லை |

| | |
|---|---|
| பெயர் மற்றும் கல்வி தகுதி | திருமதி.E.அம்பிகா |
| வயது | 50 வருடங்கள் |
| அனுபவம் / சிறப்பம்சம் | நிதி நிறுவனம் தொடர்பான வணிக அனுபவம் |
| நியமன விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & ஊதிய விபரங்கள் | இயக்குநர் - சுழற்சி முறை நியமனம் |
| முந்தைய பெறப்பட்ட ஊதியம் | ரூ.4,73,422/- |
| நியமன தேதி | 08-11-2021 |
| 31 மார்ச் 2023 வரை பெற்றுள்ள பங்கு உரிமை | 520 - சம உரிமை பங்கு |
| இயக்குநர்கள்/KMP இவர்களுடனான உறவு முறை | இல்லை |
| கலந்துகொண்ட இயக்குனர் அவை கூட்ட எண்ணிக்கை | 12 |
| மற்ற நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பு | இல்லை |
| இதர குழுவின் உறுப்பினர்/தலைவர் பொறுப்பு | இல்லை |

**கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 102ன்கீழ் அளிக்கப்படும் விளக்க அறிக்கை சிறப்பு அலுவல்**

**5. நிதியின் அமைப்பு முறையேட்டில் (MoA) திருத்தம் செய்வது :**

கம்பெனிகள் சட்டம் 2013. பிரிவு 13ன்படி மெமோராண்டம் ஆஃப் அசோசியேஷன்-ல் (MoA) திருத்தம் செய்வதற்கு நிதியின் உறுப்பினர்களின் ஒப்புதலை சிறப்பு தீர்மானம் மூலம் நிறைவேற்ற வேண்டும். பொருள் எண் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதியின் மெமோராண்டம் ஆஃப் அசோசியேஷன்-ல் (MoA) திருத்தம் செய்வது தொடர்பாக நிதியின் உறுப்பினர்களின் ஒப்புதலை பெற 24.08.2023 தேதியில் நடைபெற்ற இயக்குநர் அவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதியின் பதிவு அலுவலகம் தற்போது 145, பெரிய தெரு, கும்பகோணம் என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. அக்கட்டிடம் மிகவும் பழமையானதாக உள்ளதால் நிறுவனத்தின் செயல்பாட்டு திறனை அதிகரிக்க பதிவு அலுவலகத்தை 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம் என்ற விலாசத்திற்கு மாற்றுவதற்கு 24.08.2023 தேதியில் நடைபெற்ற இயக்குநர் அவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் தற்போது பதிவு அலுவலகம் அமைந்துள்ள கும்பகோணம் நகர எல்லைக்குள்ளாக ஒரே ஊரிலேயே, ஒரே மாநிலத்திலேயே மாற்றப்பட உள்ளது.

நிதியின் பதிவு அலுவலகத்தை இடமாற்றம் செய்வதற்கு சென்னை கம்பெனிகள் பதிவாளர் அவர்களிடமிருந்து ஒப்புதல் கிடைக்கும் நிலையில், மேற்படி மெமோராண்டம் ஆஃப் அசோசியேஷன்-ல் (MoA) திருத்தம் செய்யப்பட்டதற்கு பங்குதாரர்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

நிதியின் (MoA)-ல் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்ட மேற்கண்ட தீர்மான விபரங்கள் இந்த அறிவிப்பு அனுப்பப்படும் நாள்முதல் வாக்குப்பதிவு நாளான 29.09.2023 வரை நிதியின் பதிவு அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பரிசோதித்து கொள்ளலாம்.

மேற்படி தீர்மானத்தை சிறப்பு தீர்மானமாக நிறைவேற்ற உறுப்பினர்களின் ஒப்புதல் கோரி இயக்குநர் அவையால் பரிந்துரைக்கப்பட்டு கூட்டப்பொருள் எண் 5-ல் சேர்க்கப்பட்டுள்ளது.

பொருள் எண் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் நிதியின் இயக்குநர்களுக்கோ, முக்கிய நிர்வாக பணியாளர்களுக்கோ எந்தவித தனிப்பட்ட விருப்பமும் இல்லை.

## 2023 மார்ச் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான இயக்குநர்களின் ஆண்டு அறிக்கை

**கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு:**

நமது நிதி நிறுவனத்தில் நடந்த வர்த்தகம் மற்றும் செயல்பாடுகள் பற்றிய 119-வது ஆண்டு அறிக்கை மற்றும் 2023 மார்ச் 31 அன்று வரை முடிந்த நிதி ஆண்டிற்கான தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்ட நிதி நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிப்பதில் நிதியின் இயக்குநர்கள் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

**1. 2023 மார்ச் 31 அன்று வரை முடிந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி ரீதியான முக்கிய அம்சங்கள்**

(ரூ.லட்சங்களில்)

| விபரங்கள் | **31-03-2023** | 31-03-2022 |
|---|---|---|
| வைப்புத்தொகை | 3,50,046.03 | 3,11,972.11 |
| கடன்கள் | 3,19,884.78 | 2,88,987.26 |
| மொத்த வருமானம் | 45,686.41 | 41,247.79 |
| மொத்த செலவு | 35,502.10 | 31,920.63 |
| தேய்மானம் மற்றும் வரிகளுக்கு முந்தைய லாபம் | 10,741.68 | 9,835.97 |
| தேய்மானம் | 557.37 | 508.81 |
| விலக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வரிக்கு முந்தைய லாபம் | 10,184.31 | 9,327.16 |
| கழிக்க : விலக்கப்பட்ட பொருட்கள் | 1,262.00 | – |
| லாபம் வரிசெலுத்தப்படும் முன் | 8,922.31 | 9,327.16 |
| லாபம் வரி செலுத்திய பின் | 6,624.22 | 6,330.57 |
| விரிவான இதர வருமானம் (நிகர வரி) | 54.42 | 271.25 |
| மொத்த விரிவான வருமானம் | 6,678.64 | 6,601.82 |
| பங்காதாய விகிதம் (% p.a) | 25% | 25% |
| பங்காதாய தொகை | 752.12 | 747.92 |

**2. நிதி நிலை அறிக்கைக்கு பின் ஏற்பட்ட மாற்றங்கள்**

2023 மார்ச் 31 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட தேதிக்கும் இயக்குநர் குழு அளித்த அறிக்கையின் தேதிக்கும் இடையில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை மற்றும் நிறுவனத்தின் நிதி நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

**3. பங்கு லாபம் (Dividend)**

2023 மார்ச் 31 முடிந்த ஆண்டிற்கான பங்காதாயத்திற்கான ஆண்டு விகிதம் 25% ஆக (பங்கு வைத்துள்ள காலத்திற்கான விகித அடிப்படையில்) வரையறுக்கப்பட இயக்குநர் அவை பரிந்துரை செய்ய வேண்டப்படுகிறது. இந்த பங்காதாயத்திற்காக ரூ.752.12 லட்சங்கள் ஒதுக்கப்படுகிறது.

## 4. இயக்குநர் அவை கூட்டங்கள்

நமது நிதி நிறுவனத்தில் நடப்பு நிதியாண்டில் 2022-2023-ல் 13 இயக்குநர் அவை கூட்டங்கள் நடைபெற்றது. அதனுடைய விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு கூட்டத்திற்கும் அடுத்த கூட்டத்திற்கும் இடையேயான இடைவெளி 120 நாட்களுக்கு மிகாமல் உள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 24.04.2022 | 22.05.2022 | 29.06.2022 | 24.07.2022 | 24.08.2022 |
| 28.08.2022 | 28.09.2022 | 27.10.2022 | 26.11.2022 | 27.12.2022 |
| 25.01.2023 | 28.02.2023 | 26.03.2023 | | |

நடப்பு ஆண்டில் நிர்வாக கூட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு இயக்குநர்களின் வருகை பதிவேடு மற்றும் பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கையின் விபரங்கள்

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் | பங்கேற்ற கூட்ட விபரம் |
|---|---|---|
| 1 | திரு.S.கல்யாணசுந்தரம் - தலைவர் (DIN 00829647) | 12 |
| 2 | திரு.S.இராமலிங்கம் - துணைதலைவர் (DIN 00829529) | 13 |
| 3 | திரு.PR.P.வேலப்பன் - மேலாண் இயக்குநர் (DIN 01892661) | 13 |
| 4 | திரு.G.அன்பழகன் - இயக்குநர் (DIN 01469646) | 13 |
| 5 | திரு.S.ஹரிஹரன் - இயக்குநர் (DIN 02693765) | 13 |
| 6 | திரு.B.பிரகாசம் - இயக்குநர் (DIN 00338872) | 13 |
| 7 | திரு.G.துரைராஜ் - இயக்குநர் (DIN 03064193) | 12 |
| 8 | திருமதி.E.அம்பிகா - இயக்குநர் (DIN 09353335) | 12 |
| 9 | திரு.M.குரு பிரசாந்த் - இயக்குநர் (DIN 09359770) | 13 |

கூட்ட நடவடிக்கைக்குறித்து குறிப்புகள் நிறுவனத்தின் கூட்ட பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

## 5. பங்கு மூலதனம்

நிதி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமானது ரூ.17.71 லட்சம் அதிகரித்து, 2022 மார்ச் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு ரூ.2,998.61 லட்சங்களிலிருந்து 2023 மார்ச் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு ரூ.3,016.32 லட்சங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனத்தில் பங்குகள் வைத்துள்ள உறுப்பினர்கள் மட்டுமே நிதி நிறுவனத்தின் வணிக ரீதியான (வைப்பு நிதிகள் மற்றும் கடன்கள்) நடவடிக்கைகளில் பங்கு பெற முடியும். இந்த பங்கு ஒதுக்கீடானது நிதியின் விதிகள் 2014 படியும் மற்றும் இந்திய கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு எண் (NO.GSR 465 (E) dt., 05-06-2015) படி செயல்படுத்தப்படுகிறது.

## 6. காப்பு மற்றும் உபரி

முடிவடைந்த நிதியாண்டு 2022 மார்ச் 31-ன்படி நிதி நிறுவனத்தின் இருப்பானது ரூ.**35,760.64** லட்சங்களாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் முடிவடைந்த நிதியாண்டு 2023 மார்ச் 31-ன்படி நிதி நிறுவனத்தின் இருப்பானது ரூ.**41,636.94** லட்சங்களாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது நிதி நிறுவனத்தின் இருப்பானது கடந்த ஆண்டை காட்டிலும் ரூ.6,624.22 லட்சங்களாக உயர்ந்துள்ளது.

**7. கிளைகள்:**

நடப்பு நிதியாண்டில் நமது நிதி நிறுவனத்தில் புதிய கிளைகள் 19-01-2023 அன்று குத்தாலத்திலும் (மயிலாடுதுறை), 07-03-2023 அன்று அறந்தாங்கியிலும் திறக்கப்பட்டுள்ளது. மேலும் மண்டல இயக்குநர், மத்திய கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகம், தென்னிந்திய பிரிவு, சென்னை அவர்களின் கடிதம் vide F.NO.SRN AA1723441NDH-2/Kumbakonam/3/2023-ன் படி 32 புதிய கிளைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிதி நிறுவனத்தின் கிளைகள் அமையப்பெற உள்ள இடங்களின் விபரங்களாவன பூதலூர், செங்கிப்பட்டி, கிள்ளுக்கோட்டை, ஆலங்குடி (புதுக்கோட்டை), கறம்பக்குடி, சிவகங்கை, பேராவூரணி, சாலியமங்கலம், குடவாசல், அண்ணா நகர் - சென்னை, பந்தநல்லூர், கொல்லுமாங்குடி, காட்டுமன்னார்கோவில், லால்குடி, திட்டக்குடி, முசிறி, தா.பழூர், முத்துப்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடுவூர், வல்லம், கீரனூர், வைத்தீஸ்வரன்கோவில், ஒசூர், ஒட்டன்சத்திரம், உளுந்தூர்பேட்டை, செம்பனார்கோவில், அய்யம்பேட்டை, மேட்டுப்பாளையம், சிங்காநல்லூர் (கோயம்புத்தூர்), பெண்ணாடம் மற்றும் சேத்தியாதோப்பு.

**8. வர்த்தகம்:**

நமது நிதி நிறுவனத்தின் மிக முக்கியமான வணிக நடவடிக்கை நகை அடமான கடன் வழங்குவதாகும். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் தங்கத்தின் மதிப்பு உள்ளூர் சந்தை மற்றும் வெளிநாட்டு சந்தைகளிலும் உயர்ந்துகொண்டே போகிறது. இந்த நிலைமையை நமது நிதி நிறுவனமானது வெகு சாமர்த்தியமாகவே கையாளுகிறது. தங்கத்திற்கான சந்தை ஏற்ற இறக்கத்தை நமது நிதி நிறுவனத்தின் இயக்குநர்கள் கவனமாக கூர்ந்து கவனித்து அதற்கு ஏற்றார்போல் நிறுவனத்தின் செயல் திட்டங்களை மாற்றி அமைக்கிறார்கள். இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாகவே நமது நிதி நிறுவனம் எவ்வித விளைவுகளுமின்றி வர்த்தகம் மேன்மேலும் உயர்ந்துள்ளது.

**9. இடர் மேலாண்மை மற்றும் அதன் கொள்கைகள்**

நமது நிதி நிறுவனம் சிறப்பாக செயல்படுவதற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் முக்கிய காரணமாக செயல்படுகின்றனர். இயக்குநர்கள் எதிர்கொள்ளும் இடர்களாவன - வாராக்கடன், சுழற்சிக்கு ஏற்ப தொகை கையிருப்பு வட்டி விகிதம் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஏற்படும் பிரச்சனைகள். இத்தகைய இடர்பாடுகளை நமது இயக்குநர்கள் தகுந்த இடைவெளியில் சந்தித்து அதைபற்றி கலந்து ஆலோசித்து அதற்கான தகுந்த தீர்வுகளை சரியான நேரத்தில் முடிவு செய்து, நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் மதிப்புக்கு எந்த ஒரு பாதிப்பு ஏற்படா வண்ணம் நிறுவனத்தை சரியான பாதையில் வழி நடத்தி நிறுவனத்தை அதன் இலக்கில் தன்னிறைவு செய்ய வழி வகுக்கின்றனர்.

நமது நிதி நிறுவனத்தின் விரிவான இடர் நீக்கு மேலாண்மை வழி முறைகள் மூன்று வகைகளான அவை:

I. வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் இடர்பாடுகளை நீக்குவது குறித்து கையாளுதல்.

II. நிதி நிறுவனத்தின் செயல்பாடுகளில் ஏற்படும் பிரச்சனைகளை கையாளுதல்.

III. நிறுவனத்தின் கொள்கைகளை பின்பற்றுவது தொடர்பான கையாளுதல்.

பெரும்பாலான வணிக இடர்பாடுகள் நமது நிறுவனத்தின் தொடர்ச்சியான தணிக்கை செயல்பாடுகள் மூலம் கண்டறியப்பட்டு களையப்படுகிறது. அது தொடர்பாக ஏற்படும் இடர்பாடுகள் நிறுவனங்களுக்கிடையேயான போட்டி மற்றும் விலை ஏற்ற இறக்கத்தினால் ஏற்படுவதாகும்.

நமது நிதி நிறுவனமானது வணிக நடவடிக்கைகளில் சரியான விதிமுறைகளை பின்பற்ற ஊக்குவிக்கிறது. சட்டத்திற்கு புறம்பான மற்றும் ஒழுங்கற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கவில்லை. நமது நிதி நிறுவனம் லஞ்ச ஒழிப்பு மற்றும் தொழிலாளர் நலனுக்கான விதிமுறைகளை பின்பற்றுகிறது. நிதி நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் சட்ட விதிமுறைகள் அல்லது நடத்தை விதிமுறைகளை மீறினால் அவற்றை நிறுவனத்திடம் தெரிவிப்பதற்கு (அ) முறையிடுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## 10. நிறுவனத்தின் உள் - நிதிக்கட்டுபாடு:

நமது நிதி நிறுவனமானது உள் நிதிக்கட்டுபாடு மற்றும் இடர் மேலாண்மையில் தகுந்த கட்டமைப்பை பெற்றுள்ளது. இந்த உள் நிதிக்கட்டுபாடு மற்றும் இடர் மேலாண்மையை கையாள்வதால் நமது நிதி நிறுவனத்தின் வணிக நடவடிக்கை பொதுப்படையாகவும் அனைவராலும் எளிதில் அறியப்படும் வகையில் இருக்கின்றது. இத்தகைய உள் நிதிகட்டுப்பாட்டினால் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் மதிப்பு பாதுகாக்கப்பட்டு நம்பிக்கைக்குரிய வகையிலும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் நிறுவனத்தின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இதனால் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் மோசடி / தவறுகள் குறைக்கப்பட்டு, கணக்கு தொடர்பான ஆவணங்கள் சரியான முறையில் பின்பற்றப்பட்டு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் குறித்த நேரத்தில் தயார் செய்யப்படுகிறது. மேலும் நிதியின் தற்போதைய தலைவர் அவர்களின் அறிவுறுத்தல்கள்படி நிதியின் உள்துறை தணிக்கையானது நிதியின் ஊழியர்களால் நடத்தப்பட்டு வந்த நிலையில், 2022 அக்டோபர் மாதம் முதல் நிதியின் உள்துறை தணிக்கை (Internal Audit) பட்டயக் கணக்காளர்களை கொண்டு நடத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இத்தகைய தொடர் உள் நிதிக்கட்டுபாட்டு நடவடிக்கையினால் நமது நிதி நிறுவனத்தின் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கின்றது.

நமது நிதி நிறுவனத்தின் உள் கட்டுபாட்டு தணிக்கை குழுவானது தகுதி வாய்ந்த மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த நபர்களால் உருவாக்கப்பட்டது. இந்த உள் கட்டுபாட்டு தணிக்கை குழுவின் பணியாதெனில், நிறுவனத்தின் தணிக்கை குழுவினரால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சரியான விளக்கம் அளிப்பது மற்றும் அதன் தொடர்பான அறிக்கைகளை அளிப்பதாகும். நிறுவனத்தின் தணிக்கை குழுவானது நிதி நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை கண்காணிப்பது மற்றும் நிறுவனத்தின் உள் கட்டமைப்பு கட்டுபாடுகளை கண்காணிப்பது அவற்றை வலுவாக்குவது மற்றும் நிறுவனத்தின் தணிக்கை தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிப்பது ஆகியவற்றை மேற்கொள்கிறது.

நிறுவனச்சட்ட விதிகளின்படி நமது நிதி நிறுவனமானது எந்த ஒரு சட்ட விரோதமான / மோசடி நடவடிக்கை மற்றும் விதிமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. நடப்பு நிதியாண்டான 2022-23-ல் இத்தகைய நடவடிக்கைகளில் நமது நிதி நிறுவனம் ஈடுபடவில்லை என்று நிறுவனத்தின் சட்ட ரீதியான தணிக்கை குழு உறுதி படுத்தியுள்ளார்கள்.

மேலும் நாங்கள் தெரியப்படுத்த விரும்புகின்ற செய்தி யாதெனில் மேற்படி விசாரணையானது 2019 ஆண்டு தங்க நகை ஆபரணங்கள் தொடர்பாக நடைபெற்ற மோசடி பற்றிய விளக்கமாகும். அந்நிகழ்வு நடப்பாண்டின் உள்நிதி கட்டுபாட்டினை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என தணிக்கை அறிக்கையில் உறுதிப்படுத்துகிறது. நிறுவனத்தின் தற்போதைய மேலாண்மை இயக்குநரவை குழுவானது நவம்பர் 2021 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. எனவே தற்போதைய நிர்வாகத்திற்கு மேற்படியான நிகழ்வில் எந்த சம்பந்தமும் இல்லை.

நாங்கள், மத்திய அரசாங்கத்திற்கு தணிக்கையாளர்களால் அளிக்கப்பட்ட தேவையான அறிக்கைகளின் முயற்சிக்கு தணிக்கையாளர்களுக்கு பாராட்டை தெரிவித்துக்கொள்கின்றோம். எங்களுடைய நோக்கமானது நிறுவனத்தின் உள்கட்டுப்பாட்டு அமைப்பில் மற்றும் உள்நிதி கட்டுப்பாட்டு அமைப்பானது வலுவானதாகவும் உறுதி தன்மை உடையதாக இருப்பதையும் உறுதியளிப்பதாகும். மேலும் நாங்கள் மேற்கொண்டு தொடர்ந்து நடைபெறும் விசாரணைக்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் மற்றும் அரசாங்க விதிமுறைகளை பின்பற்றுவதிலும் முழு ஒத்துழைப்பை நல்குவோம்.

நிறுவன பங்குதாரர்களுக்கு, அவர்களின் தொடர்ந்த நம்பிக்கைக்கும் மற்றும் நல் ஆதரவிற்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

நிறுவனத்தின் முந்தைய மேலாண்மை நிர்வாகத்தில் ஏற்பட்ட மோசடி நிகழ்வை தற்போது கூற தேவையில்லை என்றாலும், நடப்பு மேலாண்மை நிர்வாகம் அதை வெளியில் கொண்டு வந்து தேவையான, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதினால் நிறுவன பங்குதாரர்கள் நிறுவனத்தின் மேல்கொண்ட நம்பிக்கையில் எந்தவித பயமும் ஐயமும் இல்லாமல் இருப்பதற்கும் மேலும் மேற்கூறிய மோசடி நடவடிக்கையினால் நிறுவனத்தின் நிதி நிலையில் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை எனவும், மேற்கூறிய நடவடிக்கைக்கான தகுந்த நீதி பெறப்பட வேண்டும் எனவும் போராடுகிறது.

**11. ஒப்பந்தங்கள் பற்றிய விபரங்கள் / நிறுவனத்தின் தொடர்புடைய நபர்களின் ஒப்பந்தங்கள்**

இந்திய கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 188 (1)-ன்படி நமது நிதி நிறுவனமானது நடப்பு நிதியாண்டில் நிறுவனத்தோடு தொடர்புடைய நபர்களோடு எந்த ஒரு ஒப்பந்தங்களோ / ஏற்பாடுகளோ/ நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை.

**12. பிரிவு 186-ன்படி கடன் / கடன் உறுதிகள் அல்லது முதலீடுகளின் விபரங்கள்**

இந்திய கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 186-ன்படி நிதி நிறுவனமானது நடப்பு நிதியாண்டில் கடன்கள் / கடன் உறுதிகள் / முதலீடுகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

**13. இயக்குநர்கள்:**

| வ.எண் | இயக்குநர்களின் பெயர் |
|---|---|
| 1 | திரு.S.கல்யாணசுந்தரம் - தலைவர் |
| 2 | திரு.S.இராமலிங்கம் - துணைதலைவர் |
| 3 | திரு.PR.P.வேலப்பன் - மேலாண் இயக்குநர் |
| 4 | திரு.G.அன்பழகன் - இயக்குநர் |
| 5 | திரு.S.ஹரிஹரன் - இயக்குநர் |
| 6 | திரு.B.பிரகாசம் - இயக்குநர் |
| 7 | திரு.G.துரைராஜ் - இயக்குநர் |
| 8 | திருமதி.E.அம்பிகா - இயக்குநர் |
| 9 | திரு.M.குரு பிரசாந்த் - இயக்குநர் |

நமது நிறுவனத்தின் செயல்முறை விளக்க குறியேட்டின் பத்தி - 68-ன்படி திரு.M.குரு பிரசாந்த் (DIN No.09359770) மற்றும் திருமதி.E.அம்பிகா (DIN No.09353335) ஆகியவர்கள் சுழற்சி முறையில் இயக்குநர்களாக நியமனம் செய்ய தகுதி இருப்பதினால் நிதி நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் மறு பதவி நியமனம் செய்வதற்கு தங்களது ஒப்புதலை வழங்குகின்றனர்.

**14. தணிக்கையாளர்கள்**

நிறுவனத்தின் தற்போதைய தணிக்கையாளர்களாக பட்டய கணக்காளர்களான M/s.சாஸ்திரி & ஷா (கூட்டாண்மை பதிவு எண்.003643S) சென்னை, பட்டய கணக்காளர்களான M/s.G.நடேசன் & கோ (கூட்டாண்மை பதிவு எண்.002424S) கும்பகோணம், பட்டய கணக்காளர்களான M/s.சண்முகம் & அசோசியேட்ஸ் (கூட்டாண்மை பதிவு எண்.006655S) கும்பகோணம் மற்றும் பட்டய கணக்காளர்களான M/s.G.S.ஸ்ரீனிவாசன் & கோ (கூட்டாண்மை பதிவு எண்.012043S) சென்னை ஆகியோரை நிதி நிறுவனத்தின் சட்டப்படியான தணிக்கையாளர்களாக நியமனம் செய்யப்பட்டது. இவர்களின் நியமனம்

நிறுவனத்தின் 28-09-2022 அன்று நடந்த 118-வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் அவர்களின் பதவி ஆண்டுகாலம் ஐந்து ஆண்டுகள் என முடிவு செய்யப்பட்டு 123-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்படுகிறது.

நிதியின் சட்டமுறை தணிக்கையாளர்கள் அளித்துள்ள இறுதி அறிக்கையில் எவ்விதமான குறைபாடுகளோ அல்லது மாறுபாடுகளோ இடம் பெறாமல் இருப்பதால் இயக்குநர்களது விளக்கம் எதுவும் தேவைப்படவில்லை. மேலும் நிதி நிலை அறிக்கையிலும், அதனுடன் அமைந்துள்ள குறிப்புகளும் தன்னிலை விளக்கம் அளிப்பதால் இயக்குநர்களது விளக்கம் அளிக்க தேவை ஏற்படவில்லை.

2019-ம் நிதியாண்டில் நிதியில் நடைபெற்ற மோசடி (Fraud) தொடர்பாக தற்போதைய நிர்வாகம் அமைத்த விசாரணைக்குழுவவின் இடைக்கால அறிக்கையில் கண்டுள்ளபடி, நடைபெற்ற முறைகேட்டினை இந்திய கம்பெனிகள் சட்டம் 2013-ல் அறிவுறுத்தியுள்ளவாறு பிரிவு 143(12)-ஐ அனுசரித்து நிதியின் சட்டமுறை தணிக்கையாளர்கள் புதுதில்லியில் அமைந்துள்ள கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகத்தில் உள்ள செயலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன் தற்போதைய சட்டமுறை தணிக்கையாளர்கள், இப்போதுள்ள நிர்வாகத்திடம் சில விளக்கங்கள் கேட்டு, அந்த விளக்கங்களுக்கு தற்போதைய நிர்வாகம் உரிய பதில்களை அளித்துள்ளது. தற்போதைய நிர்வாகம் அளித்துள்ள விளக்கங்களுடன் சட்டமுறை தணிக்கையாளர்கள் பிரிவு 143(12)-ல் கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகத்திற்கு மெற்சொன்ன மோசடியை பற்றி அவர்களது கருத்துகளை 09.08.2023 தேதியில் சமர்ப்பித்துள்ளது.

மேலும் 2019 முதல் 2021 வருடத்தில் முந்தைய நிர்வாகத்தின்கீழ் நடைபெற்ற மேற்படி மோசடியினால் நமது நிதி நிறுவனத்திற்கு முறையற்ற வகையில் நட்டம் ஏற்படுத்தி உள்ளதால் நிதியில் இருந்து தற்காலிகமாக பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள், ஓய்வு பெற்ற ஊழியர்கள், மேற்கண்ட காலத்தில் நிதி நிறுவனத்தை நிர்வகித்து வந்த இயக்குநர்கள், மேற்படி வருடங்களில் நிதியை தணிக்கை செய்த சட்டமுறை தணிக்கையாளர்கள், செயலக தணிக்கையாளர் ஆகியோர் மீது அவர்கள் செய்த முறைகேடுகள் குறித்து இந்திய தண்டனை சட்டம் பிரிவு 120(B), 408, 464, 467, 477(A) ஆகியவற்றிபன்படி குற்றம் செய்ததற்கான முகாந்திரம் இருப்பதால், மேற்படியார்கள் மீது உரிய அதிகாரிகளிடம் குற்றப்புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அப்புகார் மனுவின் நகல் மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதி நிறுவனத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்காகவும், பார்வைக்காகவும் 2023 மார்ச் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளரின் அறிக்கை இந்த ஆண்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**15. தணிக்கையாளர் அறிக்கைக்கு இயக்குநரவையின் பதில் (கருத்துக்கள்)**

31-03-2023 அன்று வரை நிறைவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் நாங்கள் நடப்பாண்டில் கண்டுபிடித்த மோசடி நடவடிக்கையின் தன்மை மற்றும் அதனால் ஏற்பட்ட பண இழப்பு ஆகியவற்றை பற்றியும் அவற்றின் மீதான தணிக்கையாளர்களால் கேட்கப்படும் வினாக்களுக்கு பதில் அளிக்கவும் மற்றும் இந்த அடகு தங்க நகை ஆபரணங்கள் மேல் வழங்கப்பட்ட கடன் தொடர்பான மோசடி நடவடிக்கைகளை பற்றிய விரிவான விபரங்கள் மற்றும் அவற்றின் மீதான தொடர் விசாரணைக்கும் தேவையான விளக்கங்களை அளிக்க கடமைப்பட்டுள்ளோம்.

தணிக்கையாளர்கள் எங்களிடம் அளித்துள்ள அறிக்கையில் மேற்கண்ட வரிசை எண் 14-ல் கண்டுள்ளபடி மோசடி பற்றி குறிப்பினை தவிர கணக்கு சம்மந்தமாக வேறு எதுவும் குறைகளோ / எதிர்மறையான கருத்துகளோ இடம் பெறவில்லை. மேலும் மேற்கண்ட வரிசை எண் 14-ல் கூறியபடி மோசடியில் தொடர்புடைய குற்றச்செயல் புரிந்தவர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக தற்போதைய இயக்குநர் அவை புகார் மனு அளித்துள்ளதோடு அல்லாமல், இந்த மோசடியினால் நட்டம் ஏற்படும் என்று சட்டமுறை தணிக்கையாளர்கள் அறிவுறுத்தியவாறு ரூ.12.62 கோடிகளை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனம், பொருளாதார குற்றப்பிரிவு (EOW), தொடர் விளக்கம் கோரும் கடிதங்களின் அடிப்படையில் நிறுவனம் தன் உள்துறை விசாரணையை தொடங்கி, மோசடி தொடர்பான சூழ்நிலையை தீவிரமாக ஆராய்ந்து, நிறுவனம் அனுபவம் மற்றும் தொழிற் திறமை வாய்ந்த தனிப்பட்ட குழு ஒன்றினை உருவாக்கியுள்ளது. இதில் தொழில் வல்லுநர்களான ஒரு வழக்கறிஞர், (Lawyer), தணிக்கையாளர் (Chartered Accountant) மற்றும் நிறுவனத்தின் ஓய்வுபெற்ற முதுநிலை பொதுமேலாளர் (SGM) ஆகியோரும் உள்ளனர். இந்த குழுவானது 03-04-2023 அன்று உருவாக்கப்பட்டது. மேலும் 20-04-2023 அன்று இந்தக்குழு இடைக்கால அறிக்கை ஒன்றை வழங்கியுள்ளது.

இந்த குழு அளித்த இடைக்கால அறிக்கையின்படி நிறுவனம், இந்த மோசடியில் ஈடுபட்ட பணியாளர்களை இடைநீக்கம் செய்ததோடு இவர்களின் மீது குற்றவியல் வழக்கையும் பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் முந்தைய நிர்வாகத்தில் இந்த மோசடி நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்த அப்பொழுது பணியாற்றிக்கொண்டிருந்த பணியாளர்கள், ஓய்வுபெற்ற பணியாளர்கள், அப்போது இருந்த இயக்குநர் அவை, சட்டப்படியான தணிக்கையாளர்கள் மற்றும் நிறுவன செயலக தணிக்கையாளர் மற்றும் நிறுவன செயலாளர் ஆகியோரும் அடங்குவர். அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டு முக்கியமாக சொல்லப்படுவது என்னவென்றால் நடைபெற்ற மோசடி நடவடிக்கைகள் யாவும் நிறுவனத்தின் முந்தைய நிர்வாகத்தில் நடைபெற்றதாகும்.

**16. செயலாளர் முறை தணிக்கை:**

இந்திய கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 204-ன் படியும் நிறுவனம் (நியமனம் மற்றும் மேலாண்மை பணியாளர்கள் ஊதியக்குழு) விதி 9-ன்படியும், விதி 14-ன்படியும் நமது நிதி நிறுவனத்தின் செயல் முறை தணிக்கையாளர்களாக M/s.R & R.J. அசோசியேட்ஸ் நிறுவன செயலாளர், சென்னை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 2023 மார்ச் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிறுவனத்தின் செயலக முறை தணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு அறிக்கை அளிக்கப்பட வேண்டும். இந்த செயலாக்க முறை தணிக்கை அறிக்கையானது Form MR-3 வடிவத்தில் அறிக்கையின் பின்குறிப்பு A-வுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்திய பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகம் மற்றும் சேம்பர் ஆப் நிதி ஆகியவற்றின் மூலமாக நமது நிதி நிறுவனத்தில் உரிமைகோரப்படாத பங்கு மூலதனத்தை IEPF-க்கு மாற்றுவதிலிருந்து விலக்கு கோரப்பட்டுள்ளது.

**17. சட்டப்படியான பின்இணைப்புகள்**

நிறுவன (நியமனம் மற்றும் மேலாண்மை பணியாளர்கள் ஊதியக்குழு) விதிகள் 2014 விதி 5 (2)-ன்படி நமது நிதி நிறுவனத்தில் எந்த ஒரு பணியாளர்களும் தங்களுக்கு விதிக்கப்பட்ட ஊதிய வரன்முறையை தாண்டி ஊதியம் பெறப்படவில்லை. நிறுவன (நியமனம் மற்றும் மேலாண்மை பணியாளர்கள் ஊதியக்குழு) விதிகள் 2014 விதி 5 (3)-ன்படி நமது நிதி நிறுவனத்தில் வழங்கப்பட்ட ஊதிய விபரக்குழு 31-03-2023 வரை பட்டியல் இடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊழியரின் பெயர் மற்றும் பணி எண் திரு. | பதவி | பணியில் சேர்ந்த தேதி பணியின் தன்மை | கல்வி தகுதி | வயது | ஊதியம் * (லட்சங்களில்) | வைத்துள்ள பங்குகள் | இயக்குநர் களுடனான தொடர்பு | முந்தைய பணியின் விபரம் மற்றும் பதவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | R.சுபாஷ் 170 | GM | 16.03.1987 நிரந்தரம் | B.Com., | 57 | 20.13 | 0.000 | இல்லை | Nil |
| 2 | B.சக்கரபாணி★ 442 | DGM & CFO | 05.11.1992 | B.A., | 52 | 20.38 | 0.006 | இல்லை | Nil |
| 3 | S.கோபாலகிருஷ்ணன்★ 275 | A.G.M | 01.11.1990 | B.Sc., | 56 | 17.27 | 0.005 | இல்லை | Nil |
| 4 | V.கணேசன் 654 | Mgr (Sys) | 03.11.1994 நிரந்தரம் | M.Sc., | 53 | 18.24 | 0.000 | இல்லை | Nil |
| 5 | P.குமார் 206 | B.M | 21.09.1988 நிரந்தரம் | B.Sc., | 56 | 16.30 | 0.008 | இல்லை | Nil |
| 6 | S.பாலசுப்ரமணியன் 173 | Officer | 18.03.1987 நிரந்தரம் | B.Com., | 57 | 16.37 | 0.009 | இல்லை | Nil |
| 7 | V.ஸ்ரீதர் 198 | B.M | 10.10.1988 நிரந்தரம் | B.Com., | 56 | 17.08 | 0.008 | இல்லை | Nil |
| 8 | R.ராதாகிருஷ்ணகுமார் 337 | B.M | 03.05.1991 நிரந்தரம் | B.Sc., | 57 | 16.55 | 0.004 | இல்லை | Nil |
| 9 | G.சுதர்சன் 409 | S.M | 22.06.1992 நிரந்தரம் | B.Com., | 54 | 16.53 | 0.005 | இல்லை | Nil |
| 10 | K.வெங்கடரமணன் 202 | B.M | 17.10.1988 நிரந்தரம் | B.A., | 56 | 16.23 | 0.008 | இல்லை | Nil |

★ தற்போது பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

* மேற்கூறிய ஊதிய விபரங்கள், வருமானவரிச்சட்டம் 1961-ன்படி சம்பளம் மற்றும் இதர பலன்களை உள்ளடக்கியதாகும்.

இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 134 (3) (M)-ன்படி எரிபொருள் சிக்கனம், தகவல் தொழில்நுட்ப பிரிவு, அந்நிய செலாவணி மாற்றம் ஆகிய நடவடிக்கைகள் நமது நிதி நிறுவனத்தின் நடவடிக்கைகளில் சேராதவையாகும்.

**18. இயக்குநர்களின் பொறுப்பு தொடர்பான அறிக்கை:**

இந்திய நிறுவன சட்டம் 2013-பிரிவு 134(5)-ன்படி இயக்குநர் அவை, அவர்களின் கவனத்திற்கு கீழ்கண்ட விபரங்களை உறுதிபடுத்துகின்றனர்.

a) நிதி நிறுவனத்தின் வருடாந்திர நிதி நிலை அறிக்கையை தயார் செய்யும்பொழுது தகுந்த கணக்கியல் தர நிலைகளைப் பின்பற்றியும், தகுந்த விளக்க குறியேட்டுகளுடனும் உண்மை நிலவரத்தை எடுத்துரைப்பதாகவும் தயார் செய்யப்பட்டுள்ளது.

b) நிதி நிறுவனத்திற்கேற்ற கணக்கியல் தரநிலை மற்றும் விதிகளை, தொடர்ந்து பின்பற்றி அவற்றின் வழியே முடிவுகள் மற்றும் தேவையான ஆதாரங்களை முறையாக பின்பற்றி வருவதினால் மட்டுமே உண்மை மற்றும் நேர்மையான நிதிநிலை அறிக்கையை தயார் செய்ய முடிகிறது. இவ்வாறே நிதி நிறுவனத்தின் நிறைவடைந்த நிதியாண்டு 2022-23 நிதியாண்டிற்கும் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

c) இந்திய நிறுவன சட்டம் 2013 விதிகளின்படியும் சரியான மற்றும் தகுந்த கணக்கியல் பதிவுகள் மற்றும் பதிவேடுகளை முறையே பின்பற்றியும் அவற்றை முறையாக பராமரிப்பு செய்வதினாலும் நிதி நிறுவனத்தின் சொத்துக்களுக்கு எந்த பாதிப்பு ஏற்படாமலும், மேலும் மோசடி நிகழ்வுகள்

மற்றும் முறைகேடுகள் நிகழா வண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

d) நிதி நிறுவனத்தின் வருடாந்திர கணக்குகள் நிறுவனம் தொடர்ந்து செயல்படும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தயார் செய்யப்படுகிறது.

e) இயக்குநர்கள் பல்வேறு சரியான அமைப்பு முறைகளை பெற்றிருக்கிறது. மேலும் இயக்குநர்களால் நிதி நிறுவனத்திற்கு ஏற்ற தகுந்த மற்றும் பொருந்தக்கூடிய விதிகளையும் மற்றும் நிறுவன அமைப்பு முறையையும் தேவையான மற்றும் சரியானதாக இயங்கக்கூடிய தன்மையையும் பெற்றிருப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

**19. நிறுவனத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கை:**

பாதுகாப்பு, தடுப்பு மற்றும் காத்தல் ஆகிய விதிகளின்படி நிதி நிறுவனத்தில் பணிபுரியும் பெண்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு (நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த மற்றும் பயிற்சி பெறுபவர்) எவ்வித பாலியல் துன்புறுத்தல்களும் ஏற்படாமல் தடுப்பதற்கான அனைத்து தகுந்த விதிமுறைகளும் பின்பற்றப்பட்டு கடுமையாக கண்காணிக்கப்படுகிறது. நிறைவடைந்த நிதியாண்டில் இவ்வாறான புகார்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. மேலும் 2023 மார்ச் 31 ஆம் ஆண்டு வரை மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இவ்வாறான தீர்க்கப்படாத புகார்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**20. வருடாந்திர நிதிநிலை தாக்கல்**

இந்திய நிறுவன சட்டம் 2013 பிரிவு 92 (3)-ன்படியும் மற்றும் விதி 12 (1)-ன் படியும் நிறுவன (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள் 2014-ன்படியும் நிதி நிறுவனத்தின் வருடாந்திர வருமான தாக்கல் மற்றும் இதர தாக்கல்கள் நிதி நிறுவனத்தின் பதிவு வலைதளத்தில் வெளியிடப்பட வேண்டும். நிதி நிறுவனத்தின் நிறைவடைந்த நிதியாண்டு 2021-22-ன் வருடாந்திர தாக்கல்கள் http://www.kmbf.co என்ற வலைதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. இதேபோலவே 2022-23 ஆண்டிற்கான வருடாந்திர தாக்கல் பற்றிய விவரங்களை மேற்கண்ட வலைதள முகவரியில், 119-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நிறைவடைந்த பின்னர் வெளியிடும்.

**21. இயக்குநரவை குழுக்கள்**

இந்திய நிறுவன சட்டம் 2013 பிரிவு 177 & 178-ன் படியும் மற்றும் நிறுவன (குழு கூட்டங்கள் மற்றும் அதன் அதிகாரங்கள்) விதிகள் 2014-ன் படியும் கூறியுள்ள விதிமுறைகளை இயக்குநர் அவைக்குழு பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறு பின்பற்ற வேண்டிய விபரங்களாவன,

நடப்பு நிதியாண்டில் மேற்கொண்ட ஆய்வின்படி உங்களது நிதி நிறுவனமானது, தன்னிச்சையான தணிக்கை குழு (3 முறை), நிறுவன பங்கு முதலீட்டாளர்களின் நலக்குழு (பங்கு ஒதுக்கீட்டு குழு) (12 முறை), சமுதாய சேவைக்குழு (1 முறை) மற்றும் நியமனம் மற்றும் ஊதிய குழு (1 முறை) ஆகிய குழுக்களை கொண்டிருக்கிறது. திரு.S.கல்யாணசுந்தரம் அவர்கள் பெருநிறுவன சமுதாய பொறுப்புக்குழு தலைவராகவும் மற்றும் திரு.S.இராமலிங்கம் அவர்கள் நியமனம் மற்றும் ஊதியக்குழுவின் தலைவராகவும் உள்ளனர்.

**22. பெருநிறுவன சமூகப்பொறுப்புகள் : (CSR)**

நிதி நிறுவனமானது சமுதாயத்தில் பல்வேறு நலிவடைந்த நபர்களுக்கு உதவும் விதமாக நடவடிக்கைகளிலும், தேவையான நன்கொடைகளையும் பெரு நிறுவன சமூக பொறுப்பு விதிகளின் கீழ் செய்து வருகிறது. அவ்வாறே நிதியாண்டு 2022-2023-ல் நிறுவனம் ரூ.155.09 லட்சங்களை பெருநிறுவன சமூக பொறுப்புகளுக்குள்ள வரம்புகளுக்கு அதிகமாகவே கீழ் உள்ள நடவடிக்கைகளில் செலவுகள் செய்துள்ளது. ரூ.153.40 லட்சங்களை இந்திய நிறுவன சட்டம் 2013 விதி 135-ன் படி செலவுகள் செய்துள்ளது. மேலும் இந்த நடவடிக்கைகளின் தேவைகளுக்கு பிரிவு 135-ன்படி விதிமுறைகளை பின்பற்றி நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

நிறுவன சட்டம் 2013-ன்படி இந்த கார்ப்பரேட் சமூக பொறுப்பு நடவடிக்கைகள், தொகுப்பு அறிக்கையாக தயார் செய்து தேவையான பின் இணைப்புகளுடன் (Annexure-B) இந்த ஆண்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட் சமூக பொறுப்பு நடவடிக்கையின் கொள்கை விபரங்கள் நிறுவன வலைதள முகவரியான www.kmbf.co-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**23. நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பாளர்கள்**

நடப்பு நிதியாண்டின் ஆய்வின்படி Ms. நேகா சஞ்செட்டி (ICSI Membership No.A65976) அவர்கள் 26-11-2022 அன்றிலிருந்து நிறுவன அமைப்பு செயலாளர் பதவியிலிருந்து விலகினார். மேலும் திரு.V. விஜயகுமார் (ICSI Membership No.69164) அவர்கள் நிறுவன அமைப்பு செயலாளராக 2023 ஜனவரி 1-ம் தேதியிலிருந்து பணியமர்த்தப்பட்டுள்ளார். திரு.B.சக்கரபாணி (பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்) அவர்கள் தலைமை நிதி அதிகாரி பொறுப்பிலிருந்து 2023 மே 5-ம் தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக திரு.R.சுபாஷ் அவர்கள் 2023 ஆகஸ்ட் 1-ம் தேதியிலிருந்து தலைமை நிதி அதிகாரியாக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

**24. தன்னிச்சையான இயக்குநர்கள்:**

நிதி நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்கு ஏற்றார்போலும், நிறுவன விதிமுறைகளை பின்பற்றி நடப்பதற்கும் தகுந்த திறமை வாய்ந்த தேவையான அறிவு நெறிமுறைகளை கொண்ட எந்த சூழ்நிலைகளிலும் சரியான மற்றும் தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய எவ்வித சவாலான நேரத்திலும் அனைத்தையும் எதிர்கொள்ளக்கூடிய நபர்களை நிறுவன மனித வள மேம்பாட்டுக்குழு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ஊதியக்குழு ஆகிய குழுக்கள் நிறுவனத்தின் தன்னிச்சையான இயக்குநர்களாக பணியமர்த்தப்படுகின்றனர். இக்குழுக்கள் மேலும் பணியாளர்களின் கல்வி தகுதி நேர்மறை எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகள், பணி அமர்த்தப்பட வேண்டிய பணியின் தன்மை, திறமை மற்றும் அனுபவம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு பணியமர்த்தப்படுகின்றனர். மேலும் தன்னிச்சையான இயக்குநர்கள் வேறு எத்தனை நிறுவன மற்றும் குழுக்களில் இயக்குநராக அல்லது உறுப்பினராக உள்ளனர். அவ்வாறு இருப்பின் அதை நிதி நிறுவன விதிமுறைகளுக்கு உட்பட்டு உள்ளனவா என ஆராய்ந்து அவர்களை இயக்குநர் அவைக்குழு தன்னிச்சையான இயக்குநராக பணி அமர்த்துகின்றனர். நிறுவன இயக்குநர் அவை மேற்கண்ட குழுக்களின் இறுதி முடிவை கேட்ட பின்னரே இயக்குநர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

எந்த ஒரு தன்னிச்சையான இயக்குநரும் தனது முதல் குழு கூட்டத்தில் இயக்குநராகவே பங்கேற்று கொள்கின்றனர். அதன் பின்னர் ஒவ்வொரு நிதி ஆண்டின் முதல் குழு கூட்டத்தில் அவர்கள் தங்களது தனித்தன்மையை நிறுவன விதிமுறைகளுக்கு உட்பட்டு உறுதி செய்ய வேண்டும்.

**25. தன்னிச்சையான இயக்குநரின் உறுதிமொழி அறிக்கை**

இந்திய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 149(6) மற்றும் (7)-ன்படி விதிமுறைகளின்படி தன்னிச்சையான இயக்குநரிடம் உறுதி மொழி அறிக்கையை நிதி நிறுவனம் பெறப்பட்டுள்ளது.

**26. இயக்குநரின் நியமனம் மற்றும் ஊதிய விபரங்களில் நிறுவன கொள்கை:**

நிறுவனம், இயக்குநர் அவையில் இயக்குநர்களை நியமிப்பதில் கூட்டான பொறுப்பைக் கொண்டிருக்கின்றனர். பரிந்துரைக்கப்பட்ட ஊதியக்குழு நிதி நிறுவனத்தின் இயக்குநர் அவையின் இயக்குநர்களை தேர்ந்தெடுப்பதில் தேவையான மற்றும் முறையான அளவுகோள்களை பின்பற்றி சரியான நபர்களை கண்டறிந்து, பரிசோதித்து அவர்களை இயக்குநராக பணி அமர்த்த சிபாரிசு செய்கின்றனர்.

**27. முறையான வருடாந்திர மதிப்பீடு:**

நிறுவன சட்டம் 2013-ன் கட்டாய விதிகளின்படி நடப்பு நிதி ஆண்டில் ஆராய்ந்து பார்க்கும்போது நிறுவனத்தின் இயக்குநர் அவையில் உள்ள இயக்குநர்களின் நடவடிக்கைகளின் மதிப்பீடு, குழுவின் மதிப்பீடு தலைவரின் மதிப்பீடு, தன்னிச்சையான இயக்குநர்களின் மதிப்பீடு, தனிப்பட்ட இயக்குநர்களின் மதிப்பீடு ஆகியவற்றை மதிப்பீடு செய்து நிறுவனத்திடம் அளிக்கப்பட வேண்டும். மேலும் இயக்குநர் அவை இம்மதிப்பீட்டின் மூலம் தன்னிறைவும் நிறுவன நடவடிக்கைகளில் குழுக்களின் (ம) தன்னிச்சையான இயக்குநர்களின் பங்களிப்பினையும் பெற வேண்டும்

**28. செயலக தரநிலை** (Secretarial Standard)

நிதி நிறுவனமானது நிறுவனத்தின் பொருந்தகூடிய செயலக தரநிலைகளான 1 & 2 - னை பின்பற்ற வேண்டும்.

**29. எதிர்வரும் காலங்களில் நிதி நிறுவனத்தின் தொடர்ந்து நடைபெறும் என்ற கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய ஒழுங்கு முறை நடவடிக்கையை மேற்கொள்ளும் கட்டுப்பாட்டாளர்கள் (அ) நீதிமன்றம் (அ) தீர்ப்பாயத்தின் முடிவுகள்**

நடப்பு நிதி ஆண்டின் ஆய்வின்படி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, கட்டுப்பாட்டாளர்கள் (அ) நீதிமன்றம் (அ) தீர்ப்பாயங்களால் எந்தவித முடிவுகளும் ஆணைகளும் பிறப்பிக்கப்படவில்லை. இதனால் நிறுவன வணிக தொடர்நிலைக்கு எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை.

**30. இந்திய நிறுவன சட்டம் 2013 பிரிவு 148 (1)-ன் பின்பற்றி பராமரிக்க வேண்டிய செலவு குறிப்பேடுகளின் பின் இணைப்புகள்:**

கம்பெனிகள் சட்ட பிரிவு 148-ன்படி மத்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் செலவு பதிவேடுகள் பராமரிக்க வேண்டிய விதிமுறைகள் நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது.

**31. திவால் மற்றும் திவால் குறியீடு** (2016):

திவால் மற்றும் திவால் குறியீடு 2016-ன்படி நடப்பு நிதியாண்டில் எவ்வித திவால் நிலை விண்ணப்பமும் நிதி நிறுவனம் பெறவில்லை.

**32. வங்கி அல்லது வங்கி சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் (ம) அவற்றின் தீர்வுகள்**

நடப்பு நிதி ஆண்டில் நிதி நிறுவனம் வங்கி (அ) நிதி நிறுவனங்களிடமிருந்து எந்த ஒரு கடன்களையும் பெறவில்லை. மேலும் கடன்கள் திரும்ப அளிக்கப்படவில்லை மற்றும் கடனுக்கான எந்த ஒரு சொத்து மதிப்பீடும் நடைபெறவில்லை.

**33. டெபாசிட்டுகள்**

நிறுவன (சேமிப்புகள்) விதிகள் 2014 விதி 2(1) (C) (xiv)- ன் வரையறையின்படி நிதி நிறுவன சேமிப்புகள், சேமிப்புகள் என்ற கோட்பாட்டின் கீழ்வராது. மேலும் நிறுவனச்சட்டம் 2013-ன் கீழ் வரையறுக்கப்பட்ட கோட்பாட்டிற்குள்ளும் வராது. நிதி நிறுவனத்தின் சேமிப்புகள், நிதியின் விதிகள் 2014-ன் கீழ் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளையே பின்பற்றி கொண்டிருப்பதாகும். இவ்விதிகள் நடைமுறை மாற்றத்திற்கேற்ப மாற்றங்களையும் கொண்டிருக்கும்.

**34. பயணம்**

நமது நிதி நிறுவனமானது 1903-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தனது பயணத்தை தொடர்ந்து 119 வருடங்களை கடந்துள்ளது. நமது நிதி நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கை நகைக்கடன்களுக்கு பெயர்போனதாகும். தமிழ்நாட்டில் எங்கெங்கிலும் நமது நிறுவனத்தின் வெற்றிமுழக்கமாக

"நகைக்கடனுக்கு நம்பிக்கை KMBF மட்டுமே" என ஒலிக்கின்றது. இந்த சாதனையானது எல்லாம் வல்ல இறைவனாலும் நமது நிறுவனத்தின் தோற்றுவிப்பாளரான ஸ்ரீ ராவ் பகதூர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களின் ஆசிர்வாதத்தாலும் மேலும் அயராது உழைத்த பணியாளர்களாலும் மட்டுமே சாத்தியமாகும். நிதி நிறுவன தொழிலகங்களில் நமது நிதி நிறுவனம் முன்னோடியான மற்றும் சிறப்புகள் வாய்ந்த நிறுவனம் என பெருமையாக சொல்லிக்கொள்ள முடியும். மேலும் தமிழ்நாட்டிலுள்ள நிதிகளில் நமது நிதி நிறுவனம் மட்டுமே பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகத்திடமிருந்து NDH-4 என்ற சான்றிதழை பெற்றிருக்கிறது என்றும் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

**35. ஒப்புகைகள்**

நிதி நிறுவனத்தின் இயக்குநர்கள் இந்திய அரசாங்கத்திற்கும் மத்திய கம்பெனிகள் விவகாரத்துறைக்கும் மற்றும் தமிழக அரசாங்கத்திற்கும் தங்களது மனமார்ந்த நன்றியுணர்வை எடுத்துரைக்க ஒரு நல்ல வாய்ப்பாக தங்களது பணியை மேற்கொள்கின்றனர். மேலும் இயக்குநர்கள் நிதி நிறுவனத்தின் பங்கு முதலீட்டாளர்களுக்கும், சேமிப்பாளர்களுக்கும் மற்றும் இதர வாடிக்கையாளர்களுக்கும் தொடர்ந்து தங்களது நல் ஆதரவை நல்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் தனது நன்றியை தெரிவிக்கின்றனர்.

மேலும் நிதி நிறுவன இயக்குநர்கள், நிதியின் வர்த்தகசபை, வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், வருமான வரி, சரக்கு (ம) சேவை வரித்துறை ஆகியோருக்கும் அவர்களின் தொடர்ந்த ஆதரவுக்கும் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றனர்.

இயக்குநர்கள் நிதி நிறுவனத்தில் பணிபுரியும் எல்லா தர நிலையிலுள்ள நேர்மையாக, உண்மையாக மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் தங்களது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றனர்.

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்
இயக்குநர் அவைக்காக
S.கல்யாணசுந்தரம் MP
தலைவர்

இடம் : கும்பகோணம்
நாள் : 24-08-2023

**இணைப்பு: A**

Form No. MR – 3

**செயலக தணிக்கை அறிக்கை**

**நிறைவடைந்த நிதியாண்டு 31 மார்ச் 2023**

(நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 204 (1) மற்றும் நிறுவனங்களின் விதி எண் 9 மற்றும் (நியமனம் மற்றும் நிர்வாக பணியாளர் ஊதியம்) விதிகள் 2014-ன் படியும்)

பெறுநர்
உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
145, பெரிய தெரு,
கும்பகோணம் - 612 001.

நான் மேற்கொண்ட செயலக தணிக்கை ஆய்வில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் (இதன் பிறகு நிதி என்று அழைக்கப்படும்) நிறுவனம் அனைத்து சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும் தகுந்த (ம) முறையான, பொருந்தக்கூடிய அனைத்து சட்ட விதிமுறைகள் (ம) நடவடிக்கைகளை சரியான முறையில் கையாண்டு அவற்றின் வழி நடத்தப்படுகிறது. செயலக தணிக்கை ஆய்வானது சரியான முறையிலும், நிறுவன நடத்தை விதிமுறைகளுக்கு (ம) சட்டபூர்வமான விதிகளை கையாண்டும் எனது மனப்பூர்வமான அறிக்கையை அளிக்கிறேன்.

நிதி நிறுவனத்தின் கணக்கேடுகள், குறிப்புகள், நிகழ்ச்சி பதிவேடுகள், படிவங்கள் மற்றும் வரி தாக்கல்கள் மற்றும் இதர பதிவேடுகளை நிதி நிறுவனம் சரியான முறையில் தயார் செய்து பராமரித்து வருவதால் இக்கோப்புகளின் மூலமே நிதியின் செயலக தணிக்கை ஆய்வினை என்னால் மேற்கொள்ள முடிந்தது. மேலும் இந்த செயலக தணிக்கை ஆய்வின்போது நிதியில் பணிபுரியும் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து எனது பணிக்கு தேவையான விளக்கங்களும் மற்றும் விபர குறிப்புகளும் பெறப்பட்டன. இதன் மூலம் நான் அளிக்கும் அறிக்கை யாதெனில் நிறைவடைந்த நிதி ஆண்டான 2023 மார்ச் 31-ம் ஆண்டில், நிதி நிறுவனமானது நிறுவனத்திற்கு பொருந்த கூடிய அனைத்து சட்டபடியான விதிமுறைகளுக்கு உட்பட்டே செயல்படுகிறது. மேலும் நிதியானது சரியான இயக்குநர் அவை செயல்பாடுகள் மற்றும் சட்ட ரீதியான நெறிமுறைகளை கடைபிடித்து நடைபெறுகிறது என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மேற்கொண்ட செயலக தணிக்கை ஆய்வில் நிறைவடைந்த நிதியாண்டான 2023 மார்ச் 31-ன்படி நிதியின் கணக்கேடுகள், குறிப்பேடுகள், நிகழ்ச்சி பதிவேடுகள் மற்றும் முறையாக பராமரிக்கப்பட்ட பதிவேடுகள் ஆகியவை கீழ்கண்ட பொருந்தக்கூடிய சட்ட விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்டதாகும்.

1. இந்திய நிறுவன சட்டம் 2013 மற்றும் அதற்குள் அடங்கிய விதிகள்
2. நிதியின் விதிகள் 2014

இதை தவிர வேறு சட்ட விதிகள் நமது நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது. மேலும் நான் எனது செயலக தரநிலைகளுக்கு உட்பட்டே நிதியின் செயலக தணிக்கை ஆய்வினை மேற்கொண்டேன். இந்த செயலக தர நிலைகளானது இந்திய கம்பெனிகள் செயலாளர் நிறுவனத்தின் (ICSI) மூலம் வடிவமைக்கப்பட்டதாகும்.

நிதியின் செயலக தணிக்கை ஆய்வின்போது மேற்கூறிய பொருந்தக்கூடிய சட்ட விதிகளுக்கு உட்பட்டே தணிக்கை செய்யப்பட்டது. இந்த தணிக்கையில் நிறுவன சட்டம் 2013 பிரிவு 124 (6) -ன் படியும் மேற்படி நிறுவன IEPF (கணக்கியல், தணிக்கையியல் பங்குகள், மாற்றம் (ம) திரும்ப அளித்தல்) விதிகள் 2016-ன்படி நிதியின் உரிமை கோரப்படாத பங்கு மூலதனங்கள் IEPF-க்கு பங்கு மாற்றம் செய்வதிலிருந்து, நிதி நிறுவனமானது பெரு வர்த்தக நிர்வாக அமைச்சகத்திடமிருந்து நிதியின் நிர்வாக அலுவலர்கள் விலக்கு அளிக்க கோரி அனுமதி கோரியுள்ளனர். இந்த கோரிக்கையானது இன்னும் அமைச்சகத்தின் பரிசீலனையிலேயே உள்ளது. இதனால் நிதியானது மேற்கூறிய (IEPF-க்கு பங்கு மாற்றம்) சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளாமலேயே இருக்கிறது. மேலும் நிதியின் இயக்குநர் அவையானது முற்றிலும் சரியான முறையில், தகுதி வாய்ந்த நிர்வாகிகள் (ம) அதிகாரிகள் (ம) தன்னிச்சையான இயக்குநர்களால் உருவாக்கப்பட்டது என சான்றளிக்கிறேன். நிதியின் இயக்குநர் அவையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தும் சரியான சட்ட விதிகளுக்கு உட்பட்டே நிகழ்ந்தவை என இந்த செயலக தணிக்கை ஆய்வின் மூலம் உறுதி அளிக்கின்றேன்.

மேலும் நிதியின் இயக்குநர் அவையானது முற்றிலும் சரியான முறையில், தகுதி வாய்ந்த நிர்வாகிகள், அதிகாரிகள் மற்றும் தன்னிச்சையான இயக்குநர்களால் உருவாக்கப்பட்டது என சான்றளிக்கிறேன்.

கம்பெனிகள் (இயக்குநர்கள் நியமனம் மற்றும் தகுதி), விதிகள் 2014-ஐ அனுசரித்து கம்பெனிகள் சட்டம் 149(1)-ன்படி கடந்த 08.11.2021 முதல் பெண் இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நிறுவனத்தின் அனைத்துவித கூட்டங்களுக்கும் கூட்டங்களின் அட்டவணை, நிகழ்ச்சி நிரல்கள், நிகழ்ச்சி குறிப்புகள் முறையான அறிவிப்பாக தயார் செய்து கூட்டங்களுக்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அனைத்து இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்டு, மேலும் நிகழ்ச்சி நிரலில் ஏதேனும் மாற்றங்கள், தேவையான செய்திகள் (அ) திருத்தங்கள் (அ) விளக்கங்கள் இருப்பின் அவைகள் கூட்டம் நடப்பதற்கு முன்பே சரிசெய்யப்படுகிறது. இதனால் நடத்தப்படும் கூட்டங்கள் யாவும் சரியானதாகவும், முறையாகவும், தகுந்த பொருளடக்கங்களை கொண்டதாகவும் நடைபெறுகிறது. இக்காரணங்களாலேயே கூட்ட முடிவுகள் இயக்குநர்கள் அனைவரின் ஒருமனதாக நிறைவேற்றப்படுகிறது. நடப்பாண்டில் மேற்கொண்ட செயலக தணிக்கையில் எந்த ஒரு கருத்து வேறுபாடு கொண்ட முடிவுகளும் கூட்டங்களில் நிறைவேற்றப்படவில்லை.

நான் மேற்கொண்ட ஆய்வில் நிறுவன அமைப்புகள் மற்றும் நடவடிக்கைகள் நிதியின் பொருந்தக்கூடிய அனைத்து விதிகள் மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி சட்டம் (ம) பணியாளர் மாநில காப்பீட்டு சட்டம் (ம) இதர பணியாளர் நல விதிகள் (ம) இதர மாநிலச் சட்டங்களுக்கு உட்பட்டும், அவற்றை பின்பற்றியுமே செயல்படுகிறது. மேலும் நிதியின் நிர்வாக அமைப்புகள் (ம) செயல்பாடுகள் அனைத்தும் நிதியின் விதிகளுக்கு கட்டுப்பட்டு அதன் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மேலும் நிதியின் விதிகள் நிர்வாக செயல்பாடுகளை கட்டுப்படுத்தி நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறது. நிதியின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொருந்தக்கூடிய விதிகள், சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் சரியாகவே பின்பற்றப்படுகின்றன.

மேலும் நடப்பு செயலக தணிக்கை ஆய்வில் கீழ்கண்ட செயல்பாடுகள் நடைபெறவில்லை என அறிக்கை அளிக்கின்றேன்.

1. பொது / உரிமை / முன்னுரிமை பங்குகள் / கடனீட்டு பத்திரங்கள்/ பணியாளர் பங்குகள் ஆகியவை வெளியிடப்படவில்லை.
2. பங்குகள் மீட்பு/பங்குகள் திரும்ப பெறுதல்
3. நிறுவனங்கள்இணைத்தல்/ஒருங்கிணைத்தல்/மாற்றியமைத்தல்

4. வெளிநாட்டு தொழில்நுட்ப ஒன்றிணைப்பு

எனினும் இந்திய நிறுவன சட்டம் 2013 பிரிவு (180)-ன்படி நிறுவனத்தின் கடன் வாங்கும் அளவுகோளை அதிகரிக்க நிறுவன உறுப்பினர்களால் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நாங்கள் அளிக்கும் அறிக்கையானது,

a) சில சூழ்நிலைகளில், நிறுவனம் சட்டப்படியான படிவங்கள்/ MCA-வில் தொடர்புடைய விதிமுறைகளின்படி சட்டப்படியான தாக்கல்களும் காலதாமதமாக அல்லது தாக்கல் செய்யாமலும் உள்ளது.

b) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி 2019-ம் ஆண்டு நிறுவனத்தில் நகைக்கடன்கள் தொடர்பாக குற்றங்கள், மோசடி நடைபெற்றுள்ளது குறித்தும், மேற்படி மோசடி தொடர்பாக மாண்பமை மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் 11/2019 நிலுவையில் உள்ள விபரமும் மற்றும் சென்னை, அசோக்நகர், பொருளாதார குற்றப்பிரிவு காவல் அலுவலகத்தில் FIR No.151/2019 நிலுவையில் உள்ள விபரமும் நிதியின் சட்டமுறை தணிக்கையாளர்களால் கம்பெனிகள் சட்டம் 143(12)-ஐ அனுசரித்து அளித்த அறிக்கை மூலம் அறிய வருகிறது.

c) நடப்பாண்டின் ஆய்வின்படி நிறுவனம் தேசிய நிதியியல் அறிக்கையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தின்படி (NFRA) விதிகள் 2018-ன்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகளை நிறுவனம் கடைபிடிக்கவில்லை. நிறுவனம் இந்த NFRA விதிமுறைகள் மற்றும் இதன் தொடர்பான பொருந்தக்கூடிய விதிகளை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.

**R & R J** அசோசியேட்டிற்காக

நிறுவன செயலாளர்

| | |
|---|---|
| CS.**K.R.**ஜெகநாதன் | CS.**S.**ராஜபாண்டியன் |
| பங்குதாரர் | பங்குதாரர் |
| Membership No.39636 | Membership No.44502 |
| Certificate of Practice No. 14698 | Certificate of Practice No. 20953 |
| UDIN : A039636E000857585 | UDIN : A044502E000857633 |

இடம் : சென்னை

நாள் : 24-08-2023

**இணைப்பு: A**

பெறுநர்
உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
145, பெரிய தெரு,
கும்பகோணம் - 612 001.

நாளது தேதியில் அளிக்கப்பட்ட எனது தணிக்கை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள துணை குறிப்பேடுகளையும் சேர்த்து படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. செயலாளர் பதிவேடுகளை பராமரிக்க வேண்டிய பொறுப்பானது நிர்வாக மேலாண்மை அலுவலர்களின் பொறுப்பாகும். இதில் எனக்கு அளிக்கப்பட்ட செயலாளர் பதிவேடுகளின் பதிவுகளை பின்பற்றியே ஆய்வு மேற்கொண்டு எனது அறிக்கையை கொடுப்பதே என்னுடைய கடமையாகும்.
2. நான் எனது செயலக தணிக்கை ஆய்வை தணிக்கை முறைகள் மற்றும் வழிகளை பின்பற்றியும் செயலக பதிவேடுகளின் உண்மை தன்மையை சரியான வழிகாட்டுதல்கள் மற்றும் நியாயமான உத்திரவாதத்தின் அடிப்படையிலேயே மேற்கொண்டுள்ளேன். எனது ஆய்வானது கொடுக்கப்பட்ட செயலக பதிவேடுகளில் சோதனை அடிப்படை முறையின் மூலமே உண்மை தன்மையை சோதித்து உள்ளேன். நிதி நிறுவனம் முறையான மற்றும் சரியான நடவடிக்கைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுகிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எனது செயலக தணிக்கையை மேற்கொண்டு எனது அறிக்கையை அளித்துள்ளேன்.
3. நான் நிதியின் நிதி நிலை கணக்கு பதிவேடுகளின் உண்மை தன்மை மற்றும் நம்பகத்தன்மையை தணிக்கை செய்யவில்லை.
4. எனது தணிக்கையில் தேவையானபொழுது மேலாண்மை பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரிகளிடம் நிதியின் விதிகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் தேவையான நிகழ்வுகளில் அவை பின்பற்றியுள்ளனவா என்ற விபரங்களை பெற்றுக்கொண்டேன்.
5. நிறுவனத்தின் நடவடிக்கைகள் பொருந்தக்கூடிய மற்றும் சரியான பெரு நிறுவன மற்றும் அதன் தொடர்புடைய இதர விதிகள், விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை பின்பற்றுகின்றனவா என கண்டறிந்து ஆராய வேண்டியது நிதியின் மேலாண்மை அதிகாரிகளின் பொறுப்பாகும். என்னுடைய தணிக்கையானது சோதனை முறையில், நடைமுறை கோட்பாடுகளை சரிபார்ப்பதே ஆகும்.
6. நிதியின் எதிர்கால தன்மைக்கு உறுதி அளிப்பது மற்றும் நிறுவனம் தனது நிர்வாக விவகாரங்களை நடத்தியது குறித்த செயல்திறன் மற்றும் விளைவுகள் குறித்த விபரங்களை செயலக தணிக்கை அறிக்கையானது கொண்டிருப்பது இல்லை.

**R & R J** அசோசியேட்டிற்காக

நிறுவன செயலாளர்

CS.**K.R.**ஜெகநாதன்
பங்குதாரர்
Membership No.39636
Certificate of Practice No. 14698
UDIN : A039636E000857585

CS.**S.**ராஜபாண்டியன்
பங்குதாரர்
Membership No.44502
Certificate of Practice No. 20953
UDIN : A044502E000857633

இடம் : சென்னை
நாள் : 24-08-2023

**இணைப்பு: B**

**இயக்குநர் அவை அறிக்கை**

நிதியாண்டு 2022-23 ஆண்டிற்கான பெரு நிறுவன சமூக பொறுப்பு நடவடிக்கைகள் குறித்த வருடாந்திர அறிக்கை

**1. நிறுவன சமூக பொறுப்புணர்வு குறித்த விளக்க உரை:**

நிதி நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூக பொறுப்பு கொள்கை என்பது சமூகத்தில் நடைமுறையில் உள்ள விதியாகும். இதனால் சமூகத்தின் பொருளாதார உயர்நிலை, சுற்றுச்சூழல் நிலை தன்மையை சாதித்தல் போன்றவையோடு, சமூகத்தில் உள்ள குடிமகன் பொறுப்புள்ள மனிதனாக கருதப்படுகிறான். அதற்கு இணங்க நிதியாண்டு 2022-23-ல் நிதி நிறுவனம் பெருமளவு விலங்குகள் நல வாரியம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், கல்வி நிலை உயர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்களின் முன்னேற்றம், நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் நீர்நிலை ஆதாரங்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. நிறுவனச்சட்டம் 2013 அட்டவணை-VII-ன்படி நிறுவனத்தின் சமூக பொறுப்பு நடவடிக்கைகள குறித்த திட்டங்கள் மற்றும் திட்ட அமைப்புகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த விபரங்கள் நிதியின் வலைதள முகவரியான (www.kmbf.co)-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**2. நிறுவன சமூக பொறுப்புணர்வு குழுவின் அமைப்புகள்**

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் | பதவி/பதவியின் தன்மை 01-04-2022 முதல் 31-03-2023 வரை | CSR குழுவின் கூட்ட எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | 01-04-2022 முதல் 31-03-2023 வரை நடைபெற்ற கூட்டங்கள் | பங்கேற்பு |
| 1 | திரு.S.கல்யாணசுந்தரம் | தலைவர் | 1 | 1 |
| 2 | திரு.S.இராமலிங்கம் | துணை தலைவர் | 1 | 1 |
| 3 | திரு.PR.P.வேலப்பன் | மேலாண் இயக்குநர் | 1 | 1 |
| 4 | திரு.G.அன்பழகன் | இயக்குநர் | 1 | 1 |
| 5 | திரு.M.குரு பிரசாந்த் | இயக்குநர் | 1 | விடுப்பு |

| | | |
|---|---|---|
| 3 | கார்ப்பரேட் சமூக பொறுப்பு கொள்கை குழு பற்றிய விபரங்கள், அதன் கொள்கைகள் அதன் செயல்பாடுகள் இயக்குநர் அவையால் அனுமதிக்கப்பட்ட சமூக பொறுப்பு செயல் திட்டங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ள நிறுவன வலைதள முகவரி | www.kmbf.co |
| 4 | நிறுவனங்கள் (கார்ப்பரேட் சமூக பொறுப்பு கொள்கைகள் விதிகள் 2014 பிரிவு 8-ன்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகள் நிறுவன சமூக பொறுப்பு நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா | பொருந்தாது |
| 5 | நிறுவனங்கள் (கார்ப்பரேட் சமூக பொறுப்பு கொள்கைகள்) விதிகள் 2014 விதி 7 உட்பிரிவு 3-ன்படி நிதி ஆண்டுகளில் தீர்க்கப்படாத அல்லது கொடுக்கப்பட வேண்டிய சமூக பொறுப்பு திட்டங்களுக்கான தொகை உள்ளனவா | பொருந்தாது |
| 6 | பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபம் | ரூ.7672.19 லட்சம் |
| 7 | a) பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து 2% | ரூ.153.44 லட்சம் |
| | b) முந்தைய நிதி ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட சமூக பொறுப்பு திட்டங்களில் ஏதேனும் உபரி உள்ளதா | இல்லை |

| | | |
|---|---|---|
| | c) முந்தைய நிதி ஆண்டுகளின் சமூக பொறுப்பு திட்டங்களில் கொடுபட வேண்டிய நிலுவைத்தொகை ஏதேனும் உள்ளதா | இல்லை |
| | d) நடப்பு நிதியாண்டின் சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களுக்கான மொத்த தொகை (7a+7b-7c) | ரூ.153.44 லட்சம் |
| 8 | பெரு நிறுவன சமூக பொறுப்பு கொள்கைக்காக செலவு செய்யப்பட்ட தொகை விவரங்கள் | |
| | a) இந்த திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ.155.09 லட்சம் |
| | b) எதிர்கால சமூக நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் விபரம் | இல்லை |

c. நடப்பு நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட எதிர்கால சமூக நடவடிக்கைகள் அல்லாத தொகையின் விபரங்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | திட்ட பெயர்கள் அல்லது செயல்பாடுகளின் அடையாளங்கள் | அட்டவணை VII-ல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் | உள்ளூர் ஆம்/ இல்லை | திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இடங்கள் | திட்டங்களுக் காக செலவு செய்யப்பட்ட தொகைகள் ரூ. | நேரடியாக நடைமுறைப் படுத்தப்பட்டதா ஆம்/இல்லை | வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப் பட்டதா |
| 1 | உள்ளூர் நிர்வாகம் | வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 77,200 | ஆம் | இல்லை |
| 2 | உள்ளூர் நிர்வாகம் | சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 10,93,275 | ஆம் | இல்லை |
| 3 | உள்ளூர் நிர்வாகம் | கல்வி தகுதியை / சுகாதாரத்தை ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 56,31,000 | ஆம் | இல்லை |
| 4 | உள்ளூர் நிர்வாகம் | பின்தங்கிய பகுதிகளில் விளையாட்டு தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 42,816 | ஆம் | இல்லை |
| 5 | உள்ளூர் நிர்வாகம் | கல்வி சேவையை ஊக்குவித்தல் / வகுப்பறைகளை புனரமைத்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 86,66,000 | ஆம் | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| | (d) இந்த திட்டத்தில் நிர்வாக செலவுகளுக்காக செய்யப்பட்ட தொகை | | - |
| | (e) தக்க மதிப்பீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை, தேவையிருந்தால் | | - |
| | (f) இந்த நிதியாண்டில் இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த தொகை (8b+8c+8d+8e) | | Rs.155.09 லட்சம் |
| | (g) கொடுக்கப்பட வேண்டியதில் உபரி தொகை ஏதேனும் உள்ளதா | | |
| வ.எண் | விபரங்கள் | தொகை | |
| 1 | பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து 2% | ரூ.153.44 லட்சம் | |
| 2 | நடப்பு நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட மொத்த தொகை | ரூ.155.09 லட்சம் | |
| | நடப்பு நிதியாண்டில் உபரியாக செலவு செய்யப்பட்ட தொகை (2-1) | ரூ.1.65 லட்சம் | |
| 3 | முந்தைய நிதி ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களில் உபரி தொகை ஏதேனும் உள்ளதா | இல்லை | |
| 4 | எதிர்வரும் நிதியாண்டின் சமூகபொறுப்பு கொள்கை திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை | ரூ.1.65 லட்சம் | |

| | | |
|---|---|---|
| 9 | (a) முந்தைய மூன்று நிதியாண்டுகளில் சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் செலவழிக்கப்படாத தொகையின் விபரங்கள் | பொருந்தாது |
| | (b) நடப்பு நிதியாண்டில் முந்தைய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகையின் விபரங்கள் | பொருந்தாது |
| 10 | நடப்பு நிதியாண்டில் சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மூலதன சொத்துக்கள் உருவாக்கப்பட்டது அல்லது வாங்கப்பட்டனவா | பொருந்தாது |

ஒ-ம். xxxxxxx
**PR.P.வேலப்பன்**
மேலாண் இயக்குநர்

ஒ-ம். xxxxxxx
**S.கல்யாணசுந்தரம்** MP
தலைவர்
பெரு நிறுவன சமுதாய பொறுப்பு குழு
திட்ட தலைவர்

இடம் : கும்பகோணம்

நாள் : 24-08-2023

# தணிக்கையாளர் சான்றிதழ்

அனுப்புநர்

M/s.G.நடேசன் & கோ
M/s.சண்முகம் & அஸோசியேட்ஸ்
M/s.சாஸ்த்ரி & ஷா
M/s.G.S.ஸ்ரீனிவாசன் & கோ
பட்டய கணக்காளர்கள்

பெறுநர்

**உறுப்பினர்கள்,**
**கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,**
**கும்பகோணம்.**

இதனால் நாங்கள் சான்றளிப்பது என்னவென்றால், கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட், கும்பகோணம் (நிறுவனம்) நிறுவனத்தின் 31-03-2023 அன்று வரை நிறைவடைந்த நிதியாண்டிற்கான கணக்குகளை நாங்கள் தணிக்கை செய்து இச்சான்றிதழை வழங்குகிறோம். இந்த நிறுவனம் சட்ட நிதி அமைச்சகம் மற்றும் செயலக அமைச்சகம் மற்றும் அதனுடைய நடத்தை விதிகளின் அறிவிப்பு எண் GSR 258(E) Dt.31.03.2014 மற்றும் இதை தொடர்ந்து வரும் அறிவிப்பு விதிகளை முறையாக பின்பற்றி நடந்து வருகிறது. இந்நிறுவனம் எந்தவொரு விதிமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மேலும் கணக்கியல் விதிமுறைகளை பின்பற்றி நிறுவனத்தின் கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் தயார் செய்து பராமரிக்கப்படுகிறது.

நிதி நிறுவனம் நடப்பு நிதியாண்டில் மேற்கூறிய அறிவிப்பு எண் GSR 258(E) Dt.31.03.2014 (காலத்திற்கேற்ப மாற்றங்களை உள்ளடக்கிய) விதியின்படி தன்னுடைய செயல்பாடுகளில் தன்னிறைவோடும் தம் நிறுவன சேமிப்புகள் மற்றும் நிகர சொந்த நிதியிலும் வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

M/s. **G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 23218556BGPMGM1437
பங்குதாரர்

M/s. **சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 23203423BGWFFY7854
பங்குதாரர்

M/s. **சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. C.R.குமார்
உறுப்பினர் எண்.026143
UDIN : 23026143BGZEEL6141
பங்குதாரர்

M/s. **G.S.ஸ்ரீனிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 23218935BGTLZL6502
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 24-08-2023

# தன்னிச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

பெறுநர்

உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
கும்பகோணம்.

**கருத்துரை:**

தணிக்கையாளர்களான எங்களால் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் (நிறுவனம்) நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளான, 31.03.2023-ம் ஆண்டுடன் நிறைவடைந்த நிதியாண்டிற்கான இருப்பு நிலை குறிப்பு, இலாபம் மற்றும் நட்ட கணக்கேடு மற்றும் பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பண வரவு செலவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இதனுடன் தேவையான பின்குறிப்புகள் மற்றும் பின் இணைப்புகள் ஆகியவற்றின் அறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டன. இந்த நிதி நிலை அறிக்கைகள் முறையான கணக்கியல் விதிமுறைகள் மற்றும் முறையான விளக்க உரைகளையும் கொண்டுள்ளது.

எங்களின் கருத்துரையானது எங்களிடம் அளிக்கப்பட்ட, இந்திய நிறுவன சட்டம் 2013 (இதன் பிறகு சட்டம்)-ன் படி தயாரிக்கப்பட்ட மேற்கூறிய நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளின் படியும் மேலும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் செய்திகள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் எங்களுடைய அனுபவத்தை கொண்டு வழங்கப்பட்டதாகும். நிதி நிறுவனத்தின் 31.03.2023 அன்றுடன் நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கைகள் இந்திய கணக்கியல் தரநிலைகள் சட்ட விதிகளின் பிரிவு 133-ன் படியும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015 (Ind AS) சட்ட விதிகளின் படியும் மற்றும் இந்தியாவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிமுறைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதாகும். மேலும் நிறுவனத்தின் அரசாங்க விவகாரங்கள், இலாபம் மற்றும் நிறுவனத்தின் வருமானம் குறித்த விபரங்கள் மற்றும் பங்கு மூலதனம் மற்றும் பணவரவு மற்றும் செலவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை பின் இணைக்கப்பட்டுள்ளன.

**கருத்துரை அடிப்படையில்:**

தணிக்கையியல் தரவிதிகள் (SAs) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 143(10)-ன் படி கூறியுள்ள விதிமுறைகளின் அடிப்படையிலேயே எங்களது தணிக்கையானது நிறுவனத்தில் நடைபெற்றது. எங்களது தணிக்கையியல் பொறுப்பு என்பது தணிக்கையியல் தரவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நிதி நிலை அறிக்கை தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்பு" அவற்றின்படியே குறிப்பதாகும். இந்திய பட்டய கணக்கறிஞர்கள் கழகம் (ICAI) வெளியிட்டுள்ள மரபு நெறிபாடுகளின் படி நாங்கள் தன்னிச்சையானவர்கள். (நிறுவனத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாதவர்கள்) மேற்கூறிய நிறுவனம் கூறியுள்ள சட்ட நடத்தை விதிமுறைகளின் படியே நிதி நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கையானது எங்களால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும் நாங்கள் இந்திய பட்டய கணக்கறிஞர்கள் கழகம் கூறியுள்ள நெறிமுறை பொறுப்புகளை கடைப்பிடித்து இத்தணிக்கையை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் தணிக்கைக்கான முறையான சான்றுகளை பெற்று நிறைவான மற்றும் சரியான முறையில் நிதி நிலை அறிக்கைகளை தணிக்கை செய்துள்ளோம் என்று நம்புகிறோம்.

**முக்கிய தணிக்கை விபரங்கள்:**

நடப்பு நிதியாண்டில் நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையில் மிகவும் முக்கியமான தணிக்கை விபரங்களாக குறிப்பிடப்படுபவை எங்களின் தொழில் அனுபவத்தால் குறிப்பிடப்படுவதாகும். இந்த முக்கிய தணிக்கை விபரங்கள் நிதி நிலை அறிக்கையின் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்தும். மேலும் எங்களின் கருத்துரையானது எங்கள் அனைவரின் ஒருமித்த கருத்தாகும். இதை தவிர இந்த முக்கிய தணிக்கை விபரங்களில் எங்களுடைய தனிப்பட்ட கருத்தினை தெரிவிக்கவில்லை. முக்கிய தணிக்கை விபரங்களாக தீர்மானிக்கப்பட்ட கருத்துக்கள் கீழ்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது. இக்கருத்துகள் எங்களுடைய தணிக்கை அறிக்கையோடு தொடர்புடையதாகும்.

| முக்கிய தணிக்கை விபரங்கள் | எங்களது தணிக்கையில் முக்கிய விபரங்களாக கருதப்பட்ட காரணம் |
|---|---|
| **குறை மதிப்பீட்டு கடன்கள்:**<br>செலவு: INR 13.91லட்சங்கள் 31 மார்ச் 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு<br>ஒதுக்கீடு: INR 849.24 லட்சங்கள் 31 மார்ச் 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு<br>Ind AS 109-ன்படி நிதியியல் ஆதாரங்கள், பலன்கள் மீதான கடன் நட்டங்கள் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பீடு கணக்கீட்டு முறை (ECL) மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த ECL முறையானது நிதியியல் ஆதாரங்களின் மீதான முக்கிய முடிவுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் கணக்கிடப்படுகிறது. இந்த முக்கிய பகுதிகள் குறித்த முடிவுகள் நிறுவனத்தின் முக்கிய மேலாண்மை அதிகாரத்தால் முடிவு செய்யப்பட்டு அதன் பிறகு நிறுவனத்தின் ECL முறை மூலமான கணக்கீட்டில் அதிகரித்த தணிக்கையை கவனப்படுத்தும் நிலைகளாவன<br>● தகவல்களை உள்ளிடுதல் - இந்த ECL முறையை செயல்படுத்துவதில் தேவையான பல தகவல்களை உள்ளிடுதல் அவசியமாகிறது. இம்முறையானது முழுமைப்படுத்துதல் தொடர்பான இடர்பாடு மற்றும் தகவல்களின் துல்லிய தன்மையை அறிவதற்கு சில அனுமானங்களை உருவாக்க வேண்டியதாகிறது.<br>● மாதிரி மதிப்பீடுகள் இயல்பாக முடிவுகளின் மாதிரிகள் ECL முறை மதிப்பீட்டின் முறையே உபயோகப்படுத்தப் படுகிறது. தவறு நடப்பதற்கான தகவமைப்புகள் (PD), தவறுகளினால் ஏற்படும் நட்டங்கள் (LGD), மற்றும் தவறுகளினால் ஏற்படும் விளைவுகள் இவற்றில் அடங்கும். ECL மதிப்பு முறையை கணக்கீடு செய்வதில் ஏற்படும் சிக்கல்களின் முக்கிய காரணிகளாக PD மற்றும் LGD ஆகியவை உள்ளன மற்றும் இதன் மூலமாக ஏற்படும் விளைவுகள் நிறுவனத்தின் மாதிரிகளின் அணுகுமுறையை பின்பற்றுவதில் முக்கிய முடிவாக உள்ளது.<br>● பொருளாதார சூழ்நிலைகள் - Ind AS 109-ன் தேவைப்படி நிறுவனம் இந்த ECLs முறை மூலம் அளவீடு செய்வதில், எதிர்கால பொருளாதார நிபந்தனைகளை பிரதிபலிக்கும் வகையில் பாரபட்சமற்ற மற்றும் எதிர்நோக்கும் வகையில் | **தொடக்க தணிக்கை நடவடிக்கைகள்**<br>எங்களால் செய்யப்பட்ட நடைமுறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.<br>நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் தொடக்கம் முதல் இறுதி வரை செயல்பாடுகளை ஆராய்ந்த வகையில், ECL முறையை பின்பற்றுவதில் உள்ள பயன்பாடு மற்றும் கட்டுப்பாடுகளை அடையாளம் காணுதல் முக்கிய பயன்பாட்டு முறையாக உள்ளது. மேலும் எங்களது சோதனையில் ECL முறையில் பயன்படுத்தப்படும் தேவையான கையேடுகள் (Spread Sheet Controls) உள்ளடக்கி மற்றும் பொதுவான தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் பயன்பாடுகளை சோதித்தல்.<br>எங்களது சோதனை கட்டுப்பாடுகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு<br>● முக்கிய தகவல் உள்ளீடுகளின் அமைப்பு மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முழுமைத்தன்மை மற்றும் உண்மைத்தன்மை குறித்த முக்கிய கட்டுப்பாடுகள் மற்றும் Ind AS 109-ன்படி குறை மதிப்பீட்டு மாதிரிகளின் அனுமானங்கள் ஆகியவற்றை சோதித்தல்.<br>● நிர்வாக கட்டமைப்பின் கட்டுப்பாடுகளை சரிபார்த்தல், செயல்படுத்துதல் மற்றும் சட்டபடியான விதிமுறைகளை பின்பற்றி மாதிரிகளை கண்காணித்தல் ஆகிய நடவடிக்கைகளை சோதித்தல்.<br>● நிர்வாகத்தின் முக்கிய கட்டுப்பாடுகள் குறித்த தேர்ந்தெடுத்தல் அதை செயல்படுத்தல் ஆகியவற்றால் அகன்ற பொருளாதாரத்தின் மாறுபாடுகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்த சூழ்நிலைகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான சாத்திய கூறுகளை சோதித்தல்.<br>● நிறுவன நிர்வாகத்தின் அங்கீகாரத்தன்மை மற்றும் சரிகட்டுதல்களுக்கான பிந்தைய மாதிரிகளின் கணக்கீடுகள் மற்றும் நிர்வாகத்தின் மேல் அடுக்குகள் குறித்த கட்டுப்பாடுகளை சோதித்தல். |

| முக்கிய தணிக்கை விபரங்கள் | எங்களது தணிக்கையில் முக்கிய விபரங்களாக கருதுப்பட்ட காரணம் |
|---|---|
| அளவீடு செய்ய வேண்டும். நிறுவனத்தின் முக்கிய முடிவுகளின் மூலம் நிறுவனத்தின் பொருளாதார சூழ்நிலைகளை முடிவுசெய்து மற்றும் அவற்றை பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்த வேண்டும்.<br>● முறையான சரிகட்டல்கள் - இந்த மாதிரிகளை சரிகட்டல்கள் செய்தபின் பின்பற்றுவதால் ஏற்படும் விளைவுகளை நிர்வாகம் கவனித்து அதை குறைபட்ட மாதிரிகளின் வரம்புகள் அல்லது அத்துடன் இடர்பாடுகள் ஏற்படாத மாதிரிகளின் போக்குகளாக வெளிப்படுகிறது. இந்த சரிகட்டல்கள் யாவும் இயல்பாகவே நிச்சயமற்ற மற்றும் முக்கிய நிர்வாக முடிவுகளை உள்ளடக்கி நிறுவனத்தின் உள்ளார்ந்த மதிப்பீடுகளை மற்றும் எதிர்நோக்கிய பொருளாதார காரணிகளை மற்றும் அதன் தொடர்பான நிச்சயமற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது. | ● நிறுவன நிர்வாகத்தின் Ind AS 109-ன் படி ECL முறை பின் இணைப்புகள் தொடர்பான விதிகளை பின்பற்றுவதில் உள்ள கட்டுப்பாடுகளை சோதித்தல்.<br>**விபரங்களின் சோதனை:**<br>எங்களது சோதனையில் உள்ளடக்கிய முக்கிய அம்சங்கள்<br>● முக்கிய உள்ளீடுகள், தகவல்கள் மற்றும் அனுமானங்களினால் ECL முறையை பினபற்றுவதில் உள்ள முழுமை தன்மை, உண்மைத் தன்மை மற்றும் பொருத்தமான தகவல்கள் மற்றும் நியாயமான பொருளாதார முன் கணித்தல், எடைகள் மற்றும் மாதிரிகளின் அனுமானங்களை உபயோகப்படுத்துதல் ஆகிய தகவல்களில் மாதிரி சோதனையை உபயோகப்படுத்தியுள்ளோம்.<br>மாதிரி கணக்கீட்டில் சாத்தியமுள்ள இடங்களில் மறுசீரமைப்பின் மூலம் சோதனை செய்துள்ளோம்.<br>● சரிகட்டுதல்களுக்கு பிந்தைய மாதிரிகளின் விபரங்களையும் நிறுவனத்தின் அளவு மற்றும் நிர்வாக மேலடுக்குகள் பெரிய பொருளாதாரம் தொடர்பான மேல் அடுக்குகளில் செய்யும் கவனத்தன்மையை கருத்தில் கொண்டும் சரிகட்டுதல்களின் நியாயமான சவால்கள் நிறைந்த முக்கிய அனுமானங்களையும் கணக்கீட்டு முறையை ஆய்வு செய்தும் மற்றும் ஆதார தகவல்களுக்காக பயன்படுத்தப்படும் தகவல்களில் மாதிரியை கண்டறிந்தும் அவற்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.<br>**பின்இணைப்புகளை மதிப்பீடு செய்தல்:**<br>ECL முறையை கணக்கீடு செய்யும்போது ஏற்படும் நிலையில்லா தன்மையை கண்டறிந்து அவற்றிற்கான சரியான பின் இணைப்புகளை முறையாக செய்யப்பட்டுள்ளனவா என எங்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. இதனுடன் முக்கிய முடிவுகள் மற்றும் அனுமானங்கள் ஆகியவை தேவையான அளவு தயாரிக்கப்பட்டு தெளிவாக பின் இணைக்கப்பட்டுள்ளதா என எங்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. |
| **தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் கட்டுப்பாடுகள்**<br>நிதி நிறுவனத்தினுடைய முக்கிய நிதி கணக்கியல் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கும் நடவடிக்கைகளில் பெரிதும் நவீன தொழில்நுட்பம் மற்றும் அதன் கட்டுப்பாடுகளையே நம்பி உள்ளது. தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடு சூழ்நிலையில் ஏற்பட்ட இடைவெளியின் விளைவாக நிறுவனத்தின் நிதி கணக்கியல் மற்றும் அது தொடர்பான அறிக்கை பதிவேடுகளின் விபரங்கள் தவறான அறிக்கைகளாக வெளிப்பட்டுள்ளன.<br>பொதுவான தகவல் தொழில்நுட்பம் அதன் பயன்பாடுகளின் கட்டுப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களினால், சரியான தகவல் தொழில் நுட்ப பயன்பாடுகள் மற்றும் அது தொடர்பான தகவல்கள்யாவும் | எங்களது தணிக்கை நடவடிக்கையின்போது நாங்கள் பயனாளிகளின் பயன்பாட்டு நிர்வாகத்தையும் மாற்றமுடைய நிர்வாகத்தையும், பணிகளை வகைப் படுத்துதல், தொழில்நுட்பத்தை மாற்றியமைத்தலில் உள்ள கட்டுப்பாடு தொழில்நுட்ப பயன்பாட்டில் உள்ள கட்டுப்பாடு நிதி கணக்கியல் மற்றும் அறிக்கைகள் தொடர்பான தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றில் எங்களது கண்காணிப்பு நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.<br>எங்களால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை நடவடிக்கையின் அளவுகள் கீழ்வருமாறு<br>● வட்டி கணக்கீடுகள் மற்றும் முதிர்வடையும் தேதிகளை தேர்வு செய்து மறுமதிப்பீடு செய்வது |

| முக்கிய தணிக்கை விபரங்கள் | எங்களது தணிக்கையில் முக்கிய விபரங்களாக கருதப்பட்ட காரணம் |
|---|---|
| சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வதில் சிக்கல்கள் உள்ளன.<br>தகவல் நுட்ப பயன்பாடு மற்றும் தகவல்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக ஏற்படும் மோசடி அல்லது பிழைகள் தொடர்பான இடர்பாடுகளை தேவையான கட்டுப்பாடுகளின் மூலம் குறைக்கவும் உதவுகிறது. பரவலான தன்மை காரணத்தினால் நிதி அறிக்கைகளில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு, எங்களது தொடக்க இடர்பாடுகளை கண்டறிதல் ஆகிய காரணங்களினால் நாங்கள் தகவல் தொழில் நுட்பத்தினால் ஏற்படும் தவறான தகவல்களினால் ஏற்படும் இடர்பாடுகளை கண்டறிவதை எங்களது தணிக்கையில் முக்கிய விபரங்களாக கருதியுள்ளோம். | ● மூலதன தகவல்களை புதுப்பித்தல், முடிவு அறிக்கைகளின் இடையீடு ஆகியவற்றை தேர்வு செய்து மறுமதிப்பீடு செய்வது.<br>● தகவல் தொழில்நுட்ப படி உருவாக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் கைமுறையாக ஏற்படுத்தப்பட்ட கணக்கியல் பதிவுகள் மற்றும் அதன் தொடர்பான நிதி அறிக்கைகள் ஆகியவற்றை சோதித்தல் (i.e Verification around the computer system)<br>● அமைப்பு, செயல்படுத்துதல், முக்கிய கணக்குகள் தொடர்பான தகவல் தொழில்நுட்ப நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளின் நடைமுறை செயல்திறன்கள், இவை கணினி கணக்கீட்டின் துல்லிய தன்மை மற்றும் தகவல்களை பரிமாற்றம் செய்வதில் உள்ள நிலைத்தன்மை ஆகியவற்றையும் மறுமதிப்பீடு செய்வது .<br>● தன்னிச்சையாக கணக்கீடு செய்வதில் சேர்ந்துள்ள கடவுச்சொல் கொள்கைகள், கணினி கட்டமைப்பு, கணினிகளுக் கிடையேயான கட்டுப்பாடு, கணினி பயன்பாடு மற்றும் தகவல்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த கட்டுப்பாடுகள் ஆகிய இதர பகுதிகளை மதிப்பீடு செய்துள்ளோம். |

**நிதி நிலை அறிக்கைகள் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கைக்கு அப்பாற்பட்ட தகவல்கள்:**

நிறுவனத்தின் இதர தகவல்களுக்கு நிறுவன இயக்குநர் அவையே பொறுப்பாகும். இதர தகவல்களானது நிறுவன நிதி நிலை சிறப்பம்சங்கள், இயக்குநர் அவையின் அறிக்கை, நிறுவன நிர்வாக அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஆனால் நிதி நிலை அறிக்கைகள் (ம) எங்களது தணிக்கை பற்றிய விபரங்கள் இவற்றில் உள் அடங்காது. நிறுவன வருடாந்திர அறிக்கையானது எங்களது தணிக்கை அறிக்கையை அளித்தவுடன் அவற்றுடன் சேர்த்து உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவன நிதி நிலை அறிக்கைகளின் மேலான எங்களது தனிப்பட்ட கருத்தானது இதர தகவல்களை உள்ளடக்கி இருக்காது. மேலும் இதர தகவல்களின் மேல் எவ்வித உறுதியான முடிவுகளும் எங்களால் வெளியிடப்படமாட்டாது.

நிதி நிலை அறிக்கைகளின் எங்களது தணிக்கையின்போது இதர விபரங்கள்/தகவல்களை படித்து அதனுடைய சாராம்சங்களை தெரிந்துகொண்டு அவற்றை கருத்தில்கொண்டு அவை உண்மையாகவே நிதி நிலை அறிக்கைகளில் பொருளாதார சீரற்ற தன்மைகளை கொண்டிருக்கிறதா (அ) எங்களது தணிக்கையின் செயல்பாடுகளுக்கு தேவையானதாக உள்ளதா (அ) ஏதேனும் தவறான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என ஆராய்ந்து பார்த்து அறிவது எங்களது பொறுப்பாகும்.

நிறுவன வருடாந்திர அறிக்கையின்போது பொருளாதார/பொருள் மீதான தவறான அறிக்கை இருப்பின் அவற்றை தணிக்கை தரநிலை விதி 720-ல் கூறப்பட்டுள்ள இதர தகவல்கள் மீதான தணிக்கையாளரின் பொறுப்புகளின் படி தகுந்த விளக்கங்களோடு மேலாண்மைக்கு எடுத்துரைக்கப்பட வேண்டும். இவ்வாண்டில் இவ்வித அறிக்கை ஏதும் எங்களால் அளிக்கப்படவில்லை.

**நிர்வாகத்தின் பொறுப்புகள் (ம) நிதி நிலை அறிக்கைகளில் தொடர்புடைய பொறுப்பானவர்கள்**

சட்டப்பிரிவு 134 (5)-ன்படி கூறியுள்ள விபரங்களின்படி இயக்குநர் அவையே நிதி நிறுவனத்தின் அறிக்கைகளின் தயாரிப்புகளில் நிறுவனத்தின் உண்மைத்தன்மை, நியாயமான நிதி நிலை மற்றும் செயல்திறன் ஆகியவற்றை அறிவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர்கள் ஆவர். இவை இந்தியாவில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரவிதிகளின் விதி பிரிவு 133 உடன் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தர விதிகள்) விதிகள் 2015-ன் படியும் கூறியுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் இந்த பொறுப்பு நடவடிக்கையானது நிறுவன கணக்கு பதிவேடுகளை சட்ட விதிகளுக்கு ஏற்ப பராமரிப்பது. இதனால் நிறுவன சொத்துக்களானது பாதுகாக்கப்பட்டு மோசடி நடவடிக்கைகளை குறைக்கவும், இதர ஒழுங்கற்ற செயல்பாடுகளிலிருந்து காக்கவும், சரியான (ம) முறையான கணக்கியல் கொள்கைகளை தேர்ந்தெடுத்து அவற்றை செயல்படுத்துதல், நியாயமான விவேகமான முடிவுகள் (ம) மதிப்பீடுகள், நிறுவனத்தின் உள்பொருளாதார கட்டுப்பாடுகளை வடிவமைத்து, செயல்படுத்தி, பராமரித்தல் இவையாவும் நிறுவனத்தின் நடைமுறை செயல்திறனை ஊக்குவித்து கணக்கியல் பதிவேடுகளின் உண்மை (ம) முழுமையான பதிவினை உருவாக்குகிறது. மேலும் இவை நிதி நிலை அறிக்கைகள் தயாரிப்பதிலும் அவற்றை வெளியிடுவதிலும் உண்மை (ம) நேர்மை தன்மையை வெளிக்காட்டுகிறது. இதனால் தவறான பொருள் அறிக்கை (ம) பிழை (அ) தவறுகள் அல்லாத நிதி நிலை அறிக்கையாக காண்பிக்கப்படுகிறது.

இந்த நிதி நிலை அறிக்கைகளை தயார் செய்யும்போது மேலாண்மையின் பொறுப்பானது நிறுவனத்தின் தொடர்ந்து நடைபெறக்கூடிய தன்மையை அளவீடு செய்வது, தேவையான பின் இணைப்புக்களை உருவாக்குவது, தொடர்ந்து நடைபெறும் என்ற கருத்துக்கு இணையான கணக்கியல் பதிவேடுகளை உருவாக்குவது.

இயக்குநர் அவையில் உள்ள உறுப்பினர்கள் யாவரும் நிறுவன நிதி நிலை அறிக்கையை உருவாக்கும் பணிக்கான பொறுப்பானவர்கள் ஆவர்.

**நிதி நிலை அறிக்கைகளை தணிக்கை செய்வது தணிக்கையாளர்களின் பொறுப்பு:**

நிதி நிலை அறிக்கைகளை தணிக்கை செய்யும்முன் தணிக்கையாளர்கள் நிறுவனத்திடம் நிதி நிலை அறிக்கைகள் குறித்த உண்மைத் தன்மையும், மேலும் நிதி நிறுவன நிதி நிலை அறிக்கைகளில் எவ்வித தவறான பொருள் அறிக்கைகளும் இல்லை என்றும் எவ்வித தவறுகளும் அல்லது பிழைகளும் இல்லை என்ற உறுதி தன்மையை பெற்ற பிறகே தங்களது கருத்துக்களை தெரிவிக்கின்றனர். நியாயமான உறுதிமொழியானது உயர்நிலை உறுதி தன்மையாக கருதப்படுகிறது. ஆனால் தணிக்கை தரவியலின் படி மேற்கொள்ளும் தணிக்கைக்கு இவ்வுறுதிமொழியானது நம்பிக்கை அளிக்கப்படமாட்டாது என்பதால் ஏதேனும் தவறுகள் அல்லது பிழைகள் அல்லது பொருள் மீதான தவறான கருத்துக்கள் இருப்பின் அவை கண்டறியப்படும். தவறான அறிக்கைகள், பிழைகள் அல்லது தவறுகளின் மூலம் ஏற்படலாம் அல்லது தனிப்பட்ட (அ) கூட்டான நபர்களால் தெரிந்தே செய்யப்படும் தவறினால் உருவாக்கப்படுகிறது. இந்த தவறான மற்றும் பிழையான நடவடிக்கைகளினால் நிதி நிலை அறிக்கைகளில் தவறான முடிவுகள் எடுப்பதற்கு காரணிகளாக அமைகின்றன.

தணிக்கை தரவியல் விதிகளின்படி எங்களது தணிக்கை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக எங்களுடைய பணியின் தன்மைகள் மற்றும் அனுபவம் பணியில் நாங்கள் சந்தித்த சந்தேகிக்கும் காரணிகள் கொண்டு எங்களது தணிக்கை நடவடிக்கை நடைபெறும். மேலும் நாங்கள்

- எங்களது தணிக்கை நடவடிக்கைகளில் தவறான கருத்துக்கள் பிழைகள் மற்றும் தவறுகளினால் உருவாக்கப்படும் நிதி நிலை அறிக்கைகளால் ஏற்படக்கூடிய பாதகங்களை கண்டறிந்து அவை உண்மையாகவே தெரிந்தோ அல்லது தெரியாமலோ உருவாக்கப்பட்டதா என்றும் அதற்கான சரியான காரணிகளை கேட்டறிந்து அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைப்பது எங்களது கடமையாகும். இவ்வாறான இடர்பாடுகளை நீக்காவிடில் ஏற்படக்கூடிய பாதகங்களாவன: மோசடி மூலம் இவை நிகழ்ந்திருப்பின் அவை சதி, போலி, திட்டமிட்டே விடுவிப்பது, தவறான விளக்கங்கள் அளிப்பது அல்லது நிறுவன உள்கட்டமைப்புகளை மீறி செயல்படுவது ஆகிய நடவடிக்கைகளுக்கு காரணிகளாக மாறிவிடும்.
- நிறுவன உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகளை அறிந்துகொண்டு அவை தணிக்கை செயல்பாட்டிற்கு எவ்வாறு உதவும் என்றறிந்து தணிக்கை நடவடிக்கையை எந்த சூழ்நிலைக்கும் பொருந்துமாறு வடிவமைப்பது. சட்ட விதி 143 (3) (i) படி நிறுவனம் தேவையான உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகளை கொண்டுள்ளதா எனவும் அவை சரியாக மற்றும் முறையாக வடிவமைக்கப்பட்டு செயல்திறனோடு நடைபெறுகிறதா எனவும் கருத்து தெரிவிப்பது தணிக்கையாளரின் பொறுப்பாகும்.
- நிறுவன இயக்குநர் அவையினால் உருவாக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் அவற்றின் தொடர்பான பின் இணைப்புகளின் உண்மை தன்மையை பரிசோதிப்பது.
- நிறுவனத்தின் தொடர்ந்து நடைபெறும் என்ற கருத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அவற்றின் வழி உருவாக்கப்பட்ட கணக்கியல் தொடர்பான பதிவேடுகளை பெற்று அவற்றின் தணிக்கைக்கு உதவும் ஆதாரங்களை பெற்று அவை உண்மைத் தன்மையை கொண்டுள்ளதா என்றும் மேலும் நிறுவனம் தொடர்ந்து நடைபெறும் என்ற கருத்திற்கு ஏற்ப திறனமைப்பை கொண்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அவற்றிற்கான முடிவுகளை சொல்வது. இவற்றில் உண்மைத் தன்மை இல்லாதபட்சத்தில் தணிக்கை நடவடிக்கையில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து நிதி நிலை அறிக்கையோடு பின்குறிப்பாக பின் இணைக்கப்பட வேண்டும். இந்த பின் இணைப்புக்களும் போதுமான கருத்துக்களை கொண்டு இல்லாதபோது எங்களுடைய அறிக்கை தன்மையானது

மாறுபடும் முடிவாக எங்களது தணிக்கை அறிக்கை அளிக்கப்படும் தேதிக்கு முன்பாக வரை தணிக்கைக்கு தேவையான ஆதாரங்களை பெற்று அவற்றின் வழியே எங்களது தணிக்கை நடவடிக்கை நடைபெறும். இதற்கு அப்பாற்பட்டு நடைபெறும் செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் யாவும் நிறுவனத்தில் தொடர்ந்து நடைபெறும் இந்த கருத்தை பாதிக்கக்கூடிய வாய்ப்புகளை கொண்டிருக்கும்.

- நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளின் எல்லாவித தயாரிப்புகள், அமைப்பு முறைகள் மற்றும் அவற்றின் உள்ளடக்கங்கள் இவற்றுடன் இவை தொடர்பான பின் இணைப்புகளையும் மற்றும் அந்த பின் இணைப்புகள் நிதி நிலை அறிக்கைக்கு எவ்வாறு பொருந்துகின்றன மற்றும் எந்த அறிக்கையில் உருவாக்கப்பட்டது என்பது பற்றியும் மேலும் இவை எந்த வகையில் நிதி நிலை அறிக்கையின் உண்மை தன்மையை எடுத்துரைக்கிறது ஆகியவற்றை மதிப்பீடு செய்வது.

நிறுவன நிதி நிலை அறிக்கையை தனிப்பட்ட அல்லது கூட்டாகவோ உபயோகித்து இதன் மூலம் பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளும் பயனாளர்களுக்கு நிதி நிலை அறிக்கையின் உண்மை தன்மை அளவுகோளானது மிக முக்கியமானதாகும். இதில் ஏதேனும் தவறான தகவல்கள் அடங்கியிருந்தால் அவை தவறான முடிவிற்கு வழி வகுக்கும். எங்களது தணிக்கை நடவடிக்கையில் இந்த உண்மைத் தன்மையின் அளவுகோல் மற்றும் தரமான தகவல்களின் அடிப்படையை ஆராய்ந்து கூறுவது கீழ்கண்ட நடவடிக்கைளின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

(i) தணிக்கை செயல்பாடுகளின் நோக்கத்தை முன்கூட்டியே திட்டமிடுவது மற்றும் தணிக்கை நடவடிக்கையின் முடிவுகளை மதிப்பீடு செய்வது.

(ii) நிதி நிலை அறிக்கைகளில் காணப்படுகின்ற தவறான விவரங்களை கண்டறிந்து அவற்றின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.

எங்களது தணிக்கை செயல்பாடுகளில் இதர தகவல்கள் குறித்த விபரங்கள், தணிக்கை முடிவுகள், நிறுவனத்தின் உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றை குறித்த தகவல்களை நிறுவனத்தின் தொடர்புடைய மேலாண்மை இயக்ககத்திற்கு தெரிவித்தல்.

மேலும் நிறுவன மேலாண்மை இயக்ககத்திடம் எங்களது தணிக்கை நடவடிக்கைகளில் எங்களது சுதந்திர தன்மையையும், நிதி நிலை அறிக்கைகள் அல்லாத இதர தகவல்களில் எங்களது சுதந்திர தன்மையையும், பாதுகாப்பு தன்மையையும் உறுதி செய்வது குறித்த தகவல்களை அறிவிப்பது.

31-03-2023 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கைகளை தணிக்கை செய்வதன் முக்கியத்துவத்தையும் அவற்றின் முக்கிய செயல்பாட்டினையும் குறித்த தகவல்களை மேலாண்மை இயக்ககத்திற்கு எடுத்துரைப்பது மற்றும் இவைகள் குறித்த விளக்கங்களையும் தணிக்கையின் முக்கிய காரணிகளாக கருதப்படுகிறது.

எங்களது தணிக்கை அறிக்கையில் விதிகள் (ம) ஒழுங்குமுறை நடவடிக்கைகளை பற்றிய எதிர்மறை கருத்துக்களானது மிகவும் அசாதாரண சூழ்நிலையில் நடந்திருந்தால் மட்டுமே வெளிப்படும். ஏனெனில் எதிர்மறை விளக்கங்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி நிறுவனத்தின் நம்பகத்தன்மைக்கு களங்கத்தை உண்டாக்குவதால் இம்மாதிரியான கருத்துக்களை தொடர்புடைய நபர்களிடம் எடுத்துரைப்பதில்லை.

**இதர சட்டப்பூர்வமான (ம) ஒழுங்குமுறை தேவைகள் குறித்த அறிக்கைகள்**

1. நிறுவனங்கள் (தணிக்கையாளரின் அறிக்கை) உத்தரவு, 2020 (இதன் பிறகு உத்தரவு)-ன்படி வெளியிடப்பட்ட விதிகளின்படி இந்திய மத்திய அரசாங்கத்தின் விதிமுறைகளின்படி பிரிவு 143 (11) -ன் படியும் உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்கு பதிவேடுகள் (ம) குறிப்பேடுகள் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் (ம) விளக்கங்களுக்கேற்ப நிதி நிலை அறிக்கையின் உண்மை (ம) நேர்மைத் தன்மையை குறித்து அறிக்கையை "Annexure A" ஆக இந்த அறிக்கையுடன் இணைத்துள்ளோம். இது குறித்த தகவல்கள் பத்திகள் 3 (4)-ன் பொருந்தக்கூடிய உத்தரவாக உள்ளது.

2. எங்களது தணிக்கை அறிக்கையின்படி சட்ட விதிகள் பிரிவு 143 (3)-ன்படி தேவைப்படும் விபரங்களாவன :

a) தணிக்கை நடவடிக்கைக்கு தேவையான எல்லா தகவல்கள்(ம) விளக்கங்களும் முறையே கேட்கப்பட்டு, பெறப்பட்டு அவற்றின் மூலம் தணிக்கை நடைபெற்றது.

b) எங்களது கருத்தின்படி நிறுவனம் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நிறுவன கணக்கு (ம) இதர பதிவேடுகள் பாதுகாக்கப்படுவதால் எங்களது தணிக்கை நடவடிக்கை சிறப்பாக நடைபெற்றது.

c) நிறுவனத்தின் இருப்புநிலை குறிப்பு மற்றும் லாப நட்ட கணக்கு அறிக்கையுடன் இதர விரிவான வருமான அறிக்கை மற்றும் பங்கு மூலதன (ம) பண வரவு செலவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை குறித்த விபரங்கள் இந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

d) எங்களது கருத்தின்படி மேற்கூறிய நிதி நிலை அறிக்கை (ம) இதர அறிக்கைகள் யாவும் கணக்கியல் தரநிலை(Ind AS)-ல் குறிப்பிட்டுள்ள சட்ட பிரிவு 133-ன் படியும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலை) விதிகள் 2015-ல் கூறிய விதிமுறைகளை பின்பற்றியுள்ளது.

e) நிறுவன சட்ட விதி பிரிவு 164(2)-ன்படி நிறைவடைந்த நிதி ஆண்டான 31 மார்ச் 2023 அன்று வரை எந்த ஒரு இயக்குநரும் தகுதி நீக்கம் செய்யப்படவில்லை என இயக்குநரவை குழுவில் உள்ள இயக்குநர்களிடம் எழுத்து வடிவ ஆவணம் பெறப்பட்டுள்ளது.

f) நிறுவனத்தின் தேவையான உள் கட்டமைப்பு கட்டுப்பாடுகள், நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கை தயாரிப்பில் எவ்விதம் செயல்பட்டது எனவும் அவற்றின் நடைமுறை செயல்திறன் எவ்விதம் இருந்தது எனவும் “Annexure B” -ல் தனியான அறிக்கையாக பின் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் எங்களது கருத்தானது மாற்றம் நிகழா வண்ணம் கூடிய அறிக்கையாக கொண்டுள்ளது.

g) எங்களிடம் அளிக்கப்பட்ட தகவல்கள் (ம) விளக்கங்களின் அடிப்படையில் நடப்பாண்டில் சட்ட பிரிவு 197-ன் படியே நிறுவனம் அதன் இயக்குநர்களுக்கான ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்கங்கள் “Annexure A” -ல் உள்ள Note -37-ல் உள்ளது.

h) இந்திய நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள் 2014 விதி 11-ன் படி தயாரிக்கப்பட்ட தணிக்கையாளர் அறிக்கையில் கூறியுள்ள தகவல்கள் யாதெனில் எங்களது தணிக்கை நடவடிக்கையானது எங்களிடம் அளிக்கப்பட்ட தகவல்கள் (ம) விளக்கங்களின் அடிப்படையிலேயே நடைபெற்றதாகும்.

i. நிறுவனத்தின் தீர்க்கப்படாத வழக்குகளால் ஏற்படும் விளைவுகளை, நிதி நிறுவனத்தின் நிதி நிலைமையை எவ்வாறு பாதித்துள்ளது என நிதி நிலை அறிக்கையுடன் பின் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்கங்கள் Note 36-ல் உள்ளது.

ii. நிதி நிறுவனம் எதிர்பாரா நட்டங்களை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்தங்களிலும் (ம) வழித்தோன்றல் ஒப்பந்தங்களிலும் ஈடுபடவில்லை.

iii. நடப்பாண்டில் விலக்கு அளிக்கப்பட்ட சில மூலதன தொகையினை தவிர, இதர மாற்ற வேண்டிய தொகைகள் முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்றம் செய்வதில் எவ்வித கால தாமதமும் ஏற்படுத்தவில்லை.

| | |
|---|---|
| பங்குகள் | ரூ.35.44 லட்சம் |
| பங்கு லாபம் | இல்லை |
| காலங்கடந்த வைப்புத்தொகை | ரூ.110.22 லட்சம் |

iv) a) நிறுவனம் அளிக்கும் ஒப்புதலின்படி, நிறுவனத்தின் நம்பிக்கை (ம) கவனத்திற்கு உட்பட்டும், நிறுவனமானது தனது நிதியிலிருந்து முன்கூட்டியோ (அ) கடனாகவோ (அ) முதலீடாகவோ வாங்கிய கடன் தொகையிலிருந்து (அ) ஷேர் பிரிமியம் (அ) இதர நிதி ஆதாரம் (அ) இதர நிதிகளிலிருந்து பிற நிறுவனங்களுக்கு (அ) இதர தனிப்பட்ட நபர்களுக்கு (அ) இதர தொழிலகங்களுக்கு (அ) அந்நிய நிறுவனங்களுக்கு (இடைத்தரகர்களாக) உடன்படிக்கையாக. எழுத்து பூர்வமாக (அ) இதர வழிகளிலோ நேரடியாகவோ (அ) இடைத்தரகர்கள் மூலம் (அ) வேறு நபர்கள் மூலமாகவோ, தருவதாக எவ்வித நடவடிக்கையும் நடைபெறவில்லை.

b) நிறுவனம் அளிக்கும் ஒப்புதலின்படி, நிறுவனத்தின் நம்பிக்கை (ம) கவனத்திற்கு உட்பட்டும், நிறுவனமானது முன்கூட்டியோ பிற நிறுவனங்களிடமிருந்து (அ) இதர தனிப்பட்ட நபர்களிடமிருந்து (அ) இதர தொழிலகங்களிடமிருந்து (அ) அந்நிய நிறுவனங்களிடமிருந்து (நிதி உதவி அளிப்பவர்கள்) உடன்படிக்கையாகவோ (அ) எழுத்து பூர்வமாக (அ) இதர வழிகளிலோ நேரடியாகவோ (அ) இடைத்தரகர்கள் மூலம் (அ) வேறு நபர்கள் மூலமாகவோ, எந்த ஒரு தொகையையும் நிதி உதவியாக பெறவில்லை.

c) எங்களது தணிக்கை நடவடிக்கைகளில் நிறுவனம் எந்த சூழ்நிலையிலும் மேற்கூறிய நடவடிக்கைகளான a & b ஆகியவற்றில் ஈடுபடவில்லை எனவும் மேலும் இவற்றினால் எந்த ஒரு தவறான பொருள் சார்ந்த விளைவுகளும் ஏற்படவில்லை எனவும் கருதப்படுகிறது.

v. நிதி நிறுவனத்தின் இயக்குநர் அவைக்குழு நிறுவனத்தின் இறுதி நடப்பாண்டிற்கான பங்காதாயம் குறித்த விபரங்களை ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக வெளியிடும். சட்ட பிரிவு 123-ன்படி உள்ள விதிமுறைகளை பின்பற்றி பங்காதாயம் குறித்த தகவல்கள் வெளியிடப்படுகிறது.

i) நிறுவனங்கள் (கணக்கியல்) விதிகள் 2014 விதி 3 (1)-ன்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகள் w.e.f 01 ஏப்ரல் 2023 அன்று வெளியிட்டதாகும். எனவே இவ்விதிகள் நிறுவனத்தின் நிறைவடைந்த ஆண்டிற்கான அறிக்கைக்கு பொருந்தாது.

M/s. **G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 23218556BGPMGM1437
பங்குதாரர்

M/s. **சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 23203423BGWFFY7854
பங்குதாரர்

M/s. **சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. C.R.குமார்
உறுப்பினர் எண்.026143
UDIN : 23026143BGZEEL6141
பங்குதாரர்

M/s. **G.S.ஸ்ரீனிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 23218935BGTLZL6502
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 24-08-2023

### தன்னிச்சையான தணிக்கையாளர்களின் அறிக்கை - இணைப்பு-A

"இதர சட்டம் மற்றும் ஒழுங்கு முறை தேவைகள்"- ன்படி பத்தி 1-ல் விவரிக்கப்பட்டுள்ள செய்திகள் இந்திய மத்திய அரசால் வெளியிடப்பட்ட நிறுவனங்கள் (தணிக்கையாளரின் அறிக்கை) உத்தரவு 2020, (இதன் பிறகு உத்தரவு) - ன் பிரிவு 143 (11)-ன் விதிமுறைகளின், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் (ம) விளக்கங்களின்படி நாங்கள் அளிக்கும் அறிக்கையானது, உத்தரவு பத்தி 3 மற்றும் 4-ல் விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

1. (a) நிறுவனம் தனது கணக்கு (ம) இதர பதிவேடுகளை சரியாகவும், முழுமையான பதிவுகளையும் கொண்டு தயாரித்து பாதுகாத்துள்ளது. இப்பதிவேடுகள் முழுமையான முறையில் மற்றும் நிறுவன சொத்துக்கள் அதன் அமைவிடங்கள் (ம) இயந்திரங்கள் மற்றும் நிறுவன இதர அசையா சொத்துக்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியது.

   (b) நிறுவனம் தனது சொத்துக்கள், ஆலை (ம) இயந்திரங்கள் (PPE) நேரிடையாக சரிபார்த்து அவற்றை மதிப்பீடு செய்கிறது. எல்லா PPE சொத்துக்களும் சரியான முறையில் சரிபார்க்கப்பட்டது. எங்களது கருத்துக்களின்படி நிறுவன சொத்துக்களை நேரடியாக சரிபார்க்கும் நடவடிக்கைகளின் ஏற்றுக்கொள்ளக்கூடிய கால இடைவெளி நிறுவனங்களின் அளவுகளுக்கு ஏற்ப அவற்றின் சொத்துக்கள், தன்மையை பொருத்தும், ஆலை மற்றும் இயந்திரங்கள் தன்மையை பொருத்ததாகும். நடப்பாண்டில் மேற்கூறிய நடவடிக்கைகளின் திட்டங்கள்படி நிறுவனம் அதன் சில சொத்துக்கள மற்றும் இயந்திரங்கள் ஆகிய சொத்துக்களை சரிபார்த்துள்ளது. இதில் எவ்வித முரண்பாடான பதிவுகளும் இடம்பெறவில்லை.

   (c) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் விளக்கங்களின்படியும் நாங்கள் மேற்கொண்ட நிறுவன பதிவேடுகளின் ஆய்வின்படி நிறுவனத்தின் அசையா சொத்துக்கள் யாவும் (குத்தகை பத்திரத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களில் நிறுவனம் குத்தகைதாரராக இருப்பதை தவிர) சொத்துக்கள் யாவும் நிறுவனத்தின் பெயரிலேயே இன்றளவும் உள்ளது. இவற்றிற்கான விளக்கங்கள் நிதி நிலை அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

   (d) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் விளக்கங்களின்படியும் நாங்கள் மேற்கொண்ட நிறுவன பதிவேடுகளின் ஆய்வின்படி நிறுவனம் தனது சொத்துக்கள், ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் முதலீட்டு சொத்துக்கள் (சொத்து பயன்படுத்துவதற்கான உரிமை உட்பட) அல்லது இதர அசையா சொத்துக்கள் யாவும் மறுமதிப்பீடு செய்யப்படவில்லை.

   (e) 1. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும் நாங்கள் மேற்கொண்ட நிறுவன பதிவேடுகளின் ஆய்வின்படி "அந்நிய செலாவணி தடை சட்டம் (பினாமி)" 1988-ன் படி அதன் தொடர்புடைய விதிகளின்படியும் அந்நிய செலாவணி சொத்துக்கள் தொடர்பான எந்த ஒரு நடவடிக்கையும் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவில்லை.

   2. நிறுவனமானது தொடக்கத்திலிருந்தே நிதி நிறுவனம் ஆகும். இதனால் நிறுவனத்திற்கு மூலப்பொருட்களின் இருப்பு மற்றும் இறுதி பொருட்களின் இருப்பு பதிவேடுகள் இருப்பதில்லை. எழுதுபொருட்களின் இருப்புகளை நிறுவன இருப்பு பதிவேட்டுடன் ஒப்புநோக்கி நேரடியாக சரிபார்க்கும்போது எந்த ஒரு பொருட்கள் முரண்பாடும் காணப்படவில்லை. இதனால் பத்தி 3 (ii) (a)-ன் உத்தரவுபடி இந்த நடவடிக்கை நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது.

3. இந்திய நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 189-ன்படி பராமரிக்கப்படும் பதிவேடுகளின்படி நிறுவனம், எந்த ஒரு நிறுவனங்களுக்கும், கூட்டாண்மை நிறுவனங்கள் அல்லது இதர நபர்களுக்கும் எந்த ஒரு கடன்கள், பிணைய அல்லது பிணையமற்ற கடன்களும் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இதன் விளைவாக உத்தரவு சட்டபிரிவுகளின் பிரிவுகள் iii (a),iii (b), iii (c), iii (d), iii (e), iii (f) தேவைகளின்படி இந்த நடவடிக்கை நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது.
4. இந்த நிதி நிறுவனத்திற்கு அறிக்கை எண் G.S.R 465 (E) 05-06-2015 பிரிவு 185-ல் கூறப்பட்டுள்ள விவரங்கள் பொருந்தாது. மேலும் எங்களிடம் அளிக்கப்பட்ட விளக்கங்களின்படி நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 186-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி எவ்வித கடன்களும், முதலீடுகளும், உத்திரவாதங்கள் மற்றும் பத்திரங்கள் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. உத்தரவு சட்டபிரிவுகளின் பிரிவு 3 (iv) தேவைகளின்படி இந்த நடவடிக்கை நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது.
5. இது ஒரு நிதி நிறுவனம் ஆகும். உறுப்பினர்களிடமிருந்து சேமிப்புகளை வாங்குவதற்கு இதற்கு அதிகாரம் உண்டு. சட்டபிரிவு எண். 73 முதல் 76 வரை கூறப்பட்டுள்ள விதிமுறைகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது. உத்தரவு சட்டபிரிவுகளின் பிரிவு 3 (v) தேவைகளின்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.
6. எங்களது கருத்தானது எங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 148 (1)-ல் கூறியுள்ளபடி செலவு தணிக்கை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது. உத்தரவு சட்டபிரிவுகளின் பிரிவு 3 (vi) தேவைகளின்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.
| நிதி சொத்துக்களின் கூடுதல் | **39,451.26** | **15,891.46** | **2,81,421.43** | **15,100.35** | **289.53** | **3,52,154.03** |
| நிதி பொறுப்புகள் | | | | | | |
| வைப்புகள் | 63,142.36 | 40,279.90 | 2,07,813.71 | 736.14 | - | 3,11,972.11 |
| இதர நிதி பொறுப்புகள் | 886.68 | 67.96 | 322.08 | 990.65 | 491.14 | 2,758.51 |
| நிதி பொறுப்புகளின் கூடுதல் | **64,029.04** | **40,347.86** | **2,08,135.79** | **1,726.79** | **491.14** | **3,14,730.62** |

**சந்தை இடர்பாடு**

சந்தை இடர்பாடு, நியாயமான மதிப்பு அல்லது நிதி ஆதாரங்களில் சந்தை காரணிகளால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களினால் வரும் எதிர்வரும் பண வரவு செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். இந்த மாற்றங்கள் நிதி ஆதாரங்களின் மதிப்பீடு வட்டி விகிதம், கடன், பணமாக மாற்றுதல் மற்றும் இதர சந்தை மாற்றங்களை உள்ளடக்கியதாகும். நிறுவனம் இரண்டு வகையான சந்தை இடர்பாடுகளை சந்திக்கிறது. அவை

**வட்டி விகித இடர்பாடு**

வட்டி விகித இடர்பாடு, நிதி ஆதாரங்களில் சந்தை காரணிகளால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களினால் பண வரவு செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். நிறுவனத்தினுடைய கடன்களின் வட்டி நிலையான வட்டி விகிதத்தை கொண்டிருக்கிறது. இந்த வட்டி விகிதம் குறைக்கப்பட்ட செலவுகள் மற்றும் வட்டி விகித இடர்பாட்டில் அளவீடு செய்யப்படுவதில்லை, கொண்டிருக்கும் மதிப்பும் இல்லை மற்றும் எதிர்வரும் காலங்களில் சந்தை வட்டி விகித மாற்றத்தால் ஏற்படும் மாற்றங்கள் விளைவுகளும் ஏற்படுவதில்லை.

**விலை இடர்பாடு**

நிறுவனம் விலை தொடர்பான இடர்பாடுகளை அளவிட சாத்தியமில்லை.

**நடைமுறை மற்றும் வணிக இடர்பாடு**

நடைமுறை இடர்பாடு நிறுவனத்தின் நடைமுறை நடவடிக்கைகளில் தொழில்நுட்பங்களில் ஏற்படும் பிரச்சனைகள்/தோல்விகள், நபர்களால் செய்யப்படும் தவறு, பிழைகள் அல்லது இதர வெளிகாரணிகளால் ஏற்படும் இடர்பாடுகளினால் தோன்றும் நட்டமாகும். நிறுவன நடைமுறைகளில் திறம்பட செயல்முறைபடுத்துவதில் உள்ள கட்டுப்பாட்டு முறையில் ஏற்படும் பிரச்சனைகள்/தோல்விகளால் ஏற்படும் நடைமுறை இடர்பாடுகள் நிறுவனத்தின் நன்மதிப்பினை குறைக்கும் வகையில் சட்ட மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கும் அல்லது நிதியியல் தொடர்பான நட்டங்களையும் ஏற்படுத்தும் காரணிகளாக அமைகிறது. நிறுவனம் இந்த நடைமுறை உள்ள எல்லா இடர்பாடுகளையும் தவிர்க்க முடியாது. ஆனால் இவ்வாறான இடர்பாடுகள் ஏற்படும்பொழுது அவற்றை எதிர்கொள்ளவும் அவற்றை ஏற்படா வண்ணம் தடுக்கும் வகையில் நிறுவன நடவடிக்கைகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த கட்டுப்பாடு நடவடிக்கையானது பணிகளை பிரித்தமைத்தலில் உள்ள திறமைகள், பணியாற்றுதல், அங்கீகரித்தல் மற்றும் சரிகட்டல்கள் நடவடிக்கைகள் மற்றும் பணியாளர்களின் கல்வி தகுதி நிலை மற்றும் மதிப்பீடு நடவடிக்கைகள் ஆகியவை உள்ளடங்கும். இவை அனைத்தும் நிறுவனத்தின் உள்தணிக்கை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுகிறது.

**NOTE 42 : அந்நிய செலாவணி நடவடிக்கைகளின் செலவினங்கள்**

நிறுவனம் நடப்பாண்டில் அந்நிய செலாவணி நடவடிக்கைகளின் மூலம் செலவினங்கள் மற்றும் வருமானங்களை பெறவில்லை.

**NOTE 43 : தவறுகள்/மோசடிகள்**

நடப்பாண்டில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் எந்த மோசடி நடவடிக்கையும் நிகழவில்லை.

**NOTE 44 : அறிக்கைகளின் பிரிவு (பிரிவு அறிக்கைகள்)**

நிறுவனம் ஒரே நடைமுறை பிரிவை கொண்டுள்ளது. Ind AS 108-ன்படி நிறுவனம் தனது தற்போதைய விபரங்களில் பிரிவு அறிக்கையை மேற்கொள்ளவில்லை. இதன்படி Ind AS 108-ன்படியான நிறுவனத்தின் பின் இணைப்புக்கள் பின்வருமாறு.

**a) சரக்கு மற்றும் சேவைகளின் அடிப்படையிலான அறிக்கை**

நிறுவனத்தின் முதன்மையான மற்றும் ஒரே வகையான சேவை நடவடிக்கை - நகைக்கடன் வழங்குதல் நிறுவனத்தின் மிக முக்கியமான வருவாயின் மூலதனம் இந்த நகைக்கடன் வழங்குதல் ஆகும். அவற்றின் விபரம் பின்வருமாறு.

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2023 | 31-03-2022 |
|---|---|---|
| தங்க நகைகள் மற்றும் சொந்த டெபாசிட் மீதான கடன் | 41,059.38 | 38,171.96 |

**b) புவியியல் வகைபாடு**

நிதி நிறுவனம் இந்தியாவில் மட்டுமே செயல்படுகிறது. அதன்படி இந்நிறுவனத்தின் உருவாக்கும் மொத்த வருமானமும் இந்தியாவில் இருந்து வருகிறது. எனவே, இந்த வகைபாட்டின் கீழ் தேவைகள் எழவில்லை.

**c) முக்கியமான வாடிக்கையாளர்**

நிறுவனத்தின் வணிக நடவடிக்கையின் தன்மையை கருத்தில்கொண்டு நிறுவனத்தின் மொத்த வருவாயில் 10%-க்கும் மேல் எந்த ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் உரிமையை கொண்டிருக்கமாட்டார்கள்.

**NOTE 45 : வருவாய் மாற்றியமைத்தல் மற்றும் செயல்படாத சொத்துக்களுக்கான ஒதுக்கீடு**

செயல்படுத்தப்படாத சொத்துக்கள் மற்றும் வருமானத்தை திருப்பி மாற்றியமைத்தலுக்கான ஒதுக்கீடு தற்போதுள்ள நிதியின் விதிகளின்படி நிறுவனம் அதனுடைய நகைக்கடனுக்கான திரும்ப செலுத்துதலின் நிலுவை தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அக்கடன்களுக்கான தொகையை மீட்க அல்லது அக்கடன்களை புதுப்பிக்க வேண்டும். இதன்படி நிறுவனம் எல்லா கடன்களையும் மேற்கூறிய காலக்கெடுவிற்குள் திரும்ப பெறுகிறது. அதன்படி, செயல்படாத சொத்துகளுக்கு நிறுவனம் இதற்கான எந்த ஒதுக்கீடும் செய்யவில்லை.

மேலும் மேற்கூறிய விதிகளின் விரிவாக்கபடி மேற்கூறிய கடன்களிலிருந்து எவ்வித வருமானமும் மேற்கூறிய காலக்கெடுவுக்குள் அங்கீகரிக்கப்படமாட்டாது. ஏதாவது வருமானம் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனில் இக்கடன்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டும். மேற்கூறிய விதிமுறைகளின்படி நிறுவனம் கடன்களின் தவணை நிலுவை தேதியிலிருந்து 15 மாதங்களுக்கு மேலான வருமானத்தை அங்கீகரிக்காது. இதனால் நிறுவனம் வருமானம் திருப்பி அளித்தலில் எவ்வித ஒதுக்கீடையும் உருவாக்கவில்லை.

**NOTE 46 : விதிவிலக்கான பொருட்கள்:**

நிறுவனத்தின் முந்தைய மேலாண்மை நிர்வாகத்தில் (FY 2017 – 2019) ஒரு மோசடி நிகழ்ந்துள்ளது. அந்த மோசடியை தற்போதுள்ள மேலாண்மை நிர்வாகம் கண்டுபிடித்து அந்த மோசடியின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட நபர்களின் மேலான விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தது. அதில் ஏப்ரல் 2019 அன்று நீதிமன்றத்தால் திவாலானவர் என உத்தரவிடப்பட்ட நபர் மற்றும் அந்த நபரின் கூட்டாளிகளுடன் நிறுவனத்தின் முந்தைய மேலாண்மை நிர்வாகத்திலிருந்தவர்கள் கூட்டுவைத்துக்கொண்டு மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டது தெரிய வந்தது. அந்த மோசடி நடவடிக்கையானது நிறுவன விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிராகவும் அவற்றை மீறியும் குறிப்பாக நகைக்கடன்களின் அடிப்படை கொள்கையான அடையாள ஆவணங்களின் பொருட்டு பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் (KYC Compliance) மற்றும் அவற்றை ஏலம் விடுவதற்கான ஏல அறிவிப்புக்களை வெளியிடுதல், நகைகளின் மீதான கடன்கள் வழங்குவதற்கான உச்ச வரம்பு மற்றும் நகைகளை

திருப்பி அளிப்பது தொடர்பான விதிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் விதிமுறைகளை மீறி வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேண்டுமென்றே செய்யப்பட்ட மோசடி நடவடிக்கையினால் மேற்கூறிய நபரின் திவால் நிலையை ரத்து செய்யக்கோரி நிறுவனத்தின் தற்போதுள்ள நிர்வாகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரராக ஆஜராகி வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கானது சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மாண்பமை நீதிமன்றம் இந்த மோசடி தொடர்பாக தமிழ்நாடு பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் விசாரணையை மேற்கொண்டு உண்மை நிலையை அறிய இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது. தற்போதுள்ள நிர்வாகம் இந்த உத்தரவை ஏற்று தமிழ்நாடு பொருளாதார குற்றப்பிரிவின் விசாரணை அதிகாரிகள் மற்றும் அதன் தொடர்புடையவர்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்கியுள்ளது. இந்த மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின மேல் குற்றவியல் புகாரை அளித்துள்ளது. தற்போதுள்ள நிர்வாகம் Ind AS -ன் ”அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்” -ன் விதிமுறைகளின்படி இந்த மோசடி தொடர்பாக ஏற்பட்ட நட்டங்களுக்கு ரூ.12.62 கோடிகளை இந்த நிதியாண்டு 2022-23-ன் லாபத்தில் ஒதுக்கீடுகளாக கணக்கீடு செய்து வைத்துள்ளது. இந்த செலவானது லாப நட்ட கணக்கின் விதி விலக்கு பொருட்கள் குறிப்பாக பின் இணைக்கப்பட்டுள்ளது.

**NOTE 47 : முந்தைய ஆண்டின் தொகைகள்**

முந்தைய ஆண்டின் தொகைகள், மறு குழுக்களாகவும் மறு வகையீடு செய்து தேவையான இடங்களில் நடப்பாண்டின் வகைப்படுத்துதலில் சேர்க்கப்பட்டுள்ளது.

**31-மார்ச் 2023 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் பகுதியான குறிப்புகள்:**

**1 பெருநிறுவனத் தகவல்கள்**

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் (நிறுவனம்) (CIN U65991TN1903PLN001246) இந்தியாவில் நிறுவப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஆகும். 1903 ஆண்டு நிறுவனச்சட்டம் 1882 (ம) இந்திய நிறுவனச்சட்டம் 1956 பிரிவு 620 A-ன் விதிமுறைகளின்படி நிதி நிறுவனமாக உருவாக்கப்பட்டது. நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தின் முகவரி, எண் 145, பெரியதெரு, கும்பகோணம், தஞ்சாவூர் - 612 001 இந்த நிறுவனத்தின் முதன்மையான பணியின் நோக்கம் சிக்கனம் மற்றும் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதும் மற்றும் தனது நிறுவனத்தின் உறுப்பினர்களிடமிருந்து நீண்ட கால மற்றும் குறுகிய நிரந்தர வைப்பீடுகள் மற்றும் சேமிப்பு கணக்குகள் தொடர் சேமிப்பு கணக்குகள் ஆகியவற்றை பெறுவதும் மற்றும் நிறுவனத்தின் விதிகளுக்குட்பட்டு தன்னுடைய உறுப்பினர்களுக்கு பிணைய கடன்கள் அல்லது அட்வான்ஸ் தொகை ஆகியவை வழங்குகிறது. நிறுவனத்தின் மிக முக்கிய நடவடிக்கையாக நகைக்கு ஈடாக கடன்கள் வழங்குதல் கருதப்படுகிறது. நிறுவனத்தின் சொற்றொடரான "நகைக்கடனுக்கு நம்பிக்கை **KMBF**" என்ற வாக்கியம் உறுப்பினர்களின் நம்பிக்கையை குறிக்கிறது. நிறுவன விவகாரத்துறை அமைச்சகத்தின் காலத்திற்கேற்ற மாறும் அறிவிப்புகளின்படி நிறுவனம் சட்ட விதிமுறைகளை பின்பற்றி வருகிறது.

**2. நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளை தயார் செய்வது மற்றும் விளக்கப்படுத்துவதின் அடிப்படை விபரங்கள்**

**2.1 விதிமுறைகளின்படி அறிக்கைகள்:**

நிறுவனச்சட்டம் 2013 பிரிவு (133)-ன் படியும், நிறுவன விவகாரத்ததுறை அமைச்சகம் (MCA) வெளியிட்டுள்ள நிறுவனங்கள் (இந்திய கணக்கு தரவியல்) விதிகள் 2015-ன்படியும், நிறுவனங்கள் (இந்திய கணக்கு தரவியல்) மாற்றியமைக்கப்பட்ட விதிகள் 2016-ன் படியும் மற்றும் இந்திய கணக்கு தரவியல் - Ind AS-ன் விதிமுறைகளின்படி நிறுவனம் தொடர்ந்து நடைபெறும் என்ற கருத்திற்கேற்ப நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன. இதனுடன் இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் (ICAI) வெளியிட்டுள்ள வழிகாட்டி குறிப்புகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றையும் சேர்த்து உள்ளடக்கியுள்ளது. இதர சட்ட விதிமுறைகள் இதை தவிர நிறுவனத்தின் மற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**2.2 கணக்கியல் மரபு**

நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தயாரிக்கும்போது சில கடினமான கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றின் விளைவாக நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய எதிர்பார்க்கப்படாத பொறுப்புகள் ஆகியவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கையோடு பின் இணைக்கப்பட்ட குறிப்புகளில் Note-3 "கணக்கியல் முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் முக்கியத்துவம்" என்ற குறிப்பு நிறுவன கணக்கீடுகள் தொடர்பான பகுதிகளில் எடுக்கப்படும் முடிவுகள் மற்றும் சிக்கல்களின் அல்லது அனுமானங்களின் முக்கியத்துவத்தின் உயர் மதிப்பை எடுத்துரைக்கிறது.

**2.3 அளவீடுகளின் அடிப்படை**

சில நிதியியல் ஆதாரங்கள் மற்றும் நிலை சொத்துக்கள் மட்டும் நியாயமான மதிப்பு முறையீட்டில் உருவாக்கப்படுவதை தவிர நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் ஒவ்வொரு அறிக்கையாண்டும் மரபியல் வழி மதிப்பீட்டிலேயே உருவாக்கப்படுகிறது.

**2.4 நிதி நிலை அறிக்கைகளை விளக்கப்படுத்துதல்**

நிறுவன விவகாரத்துறை அமைச்சகம் (MCA) அறிவிக்கப்பட்டுள்ள நிறுவனச்சட்டம் 2013 அட்டவணை III (Division III)-ன் படி பொருந்தக்கூடிய வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFCs)-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் விளக்கப்படுத்தப்படுகின்றன. நிறுவனத்தின் நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் யாவும் பொதுவாக அறிவிக்கப்பட்ட மொத்தத்தின் (Gross) அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. எதிர்கால நிகழ்வுகளின் மீதான நடைபெறும் நிகழ்வாக இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட

தொகைகளை ஈடுசெய்ய நிபந்தனையற்ற சட்டப்பூர்வமாக செயல்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் நிலை மற்றும் அதன் தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகை ஆகியவை மட்டும் கீழ்வரும் சூழ்நிலைகளில் நிகரத்தின் (Net) அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

2.4.1 அன்றாட வணிக நடவடிக்கைகள்

2.4.2 பிழைகள் ஏற்படக்கூடிய நிகழ்வு

2.4.3 நிறுவனம் மற்றும் அதனுடைய எதிர்தரப்பினரின் நொடிப்பு நிலை மற்றும் திவால் நிலை ஏற்படக்கூடிய நிகழ்வு.

**2.5 நாணயத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் விளக்கப்படுத்துதல்**

நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் யாவும் இந்திய ரூபாய் (INR) மதிப்பிலேயே தயாரிக்கப்படுகிறது. அதன் செயல்பாடுகள் யாவும் இந்திய ரூபாய் மதிப்பிலேயே அளவிடப்படுகிறது. இதனுடைய மதிப்புகள் லட்சத்திற்கு பக்கமாக சுருக்கி அமைக்கப்படுகிறது.

**3 கணக்கியல் கொள்கைகளின் முக்கியத்துவம்**

**3.1 நிறுவன நடவடிக்கைகளின் மூலம் உருவாகும் வருவாய்**

**3.1.1 வட்டி வருமானம்**

நிறுவனத்தின் நிதி சொத்துக்களில் FVTPL மூலம் மதிப்பிடப்படும் சில நிதி சொத்துக்கள் மற்றும் குறை மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் ஆகியவை அல்லாமல் மொத்த மதிப்பை கொண்ட நிதி சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் ஆற்றல்மிகு வட்டி விகிதத்தின் (EIR) அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

**நிதி சொத்துக்களில் EIR மூலம் மதிப்பிடப்படும் முறை**

a) மொத்த மதிப்பை கொண்ட நிதி சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் கால அளவிற்கு ஏற்றவாறும் அதனுடைய எதிர்வரும் காலத்தின் ரொக்க வருமானத்தின் மதிப்பீட்டு அடிப்படையிலும் அவற்றின் மேல் தள்ளுபடி விகிதத்தை பயன்படுத்துகிறது.

b) நிதியியல் ஆதாரங்களின் விரிவான விதிமுறைகளை கருத்தில் கொண்டு அவற்றின் ரொக்க பணப்புழக்கங்கள் மதிப்பீடு செய்யப்படுகிறது ; மற்றும்

c) ஒப்பந்தத்தில் ஈடுபடும் அனைத்து நபர்களுக்கிடையே வாங்கப்படும் எல்லா கட்டணங்களும் இவற்றுள் பொருந்தும். இவற்றுடன் ஒருங்கிணைந்த பகுதியாக ஆற்றல் மிகுந்த வட்டி விகிதம் நடவடிக்கைகளின் செலவுகள் மற்றும் இதர அதிகப்படியும் மற்றும் தள்ளுபடியும் ஆகியவை உள்ளடங்கியது.

இதில் ஏதாவது எதிர்வரும் மாற்றங்கள் இருப்பின் இவற்றால் ஏற்படும் எதிர்வரும் பணப்புழக்கங்களின் மதிப்பீடுகளால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானம், சொத்துக்களின் மேல் தொடர்ந்து எடுத்து வரப்படும் தொகையில் சரியான முறையில் சரிகட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

**3.1.2 கட்டணங்கள் மற்றும் கமிஷன் வருமானம்**

கட்டணங்கள் மற்றும் கமிஷன்கள் வருமானம் என்பது நிறுவனம் தனது நடவடிக்கை பொறுப்புகளின் நியாயமான மதிப்பு முறை மூலம் வருமானத்தை பெற்றது அல்லது பெறப்போகின்ற நடவடிக்கையானது கீழ்வரும் ஐந்து படிநிலைகளின் வழியாக விளக்கப்படுகிறது. இவை அல்லாமல் மற்றவை ஆற்றல் மிகுந்த வட்டி விகிதத்தின் அடிப்படையிலேயே வட்டி வருமானம் கணக்கிடப்படுகிறது.

**படி-1: உறுப்பினர்களுடனான ஒப்பந்தத்தை அடையாளம் காணுதல்:**

ஒரு ஒப்பந்தம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே அமுல்படுத்த தக்க உரிமைகளையும் கட்டுப்பாடுகளையும் மற்றும் பொறுப்புகளையும் உருவாக்கும் உடன்படிக்கையாகும். சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வேறுபடும் ஒப்பந்தங்களின் தன்மைகளை நிச்சயமாக அடையாளம் காண வேண்டும்.

**படி-2: ஒப்பந்தத்தின் நடவடிக்கை பொறுப்புகளை அடையாளம் காணுதல்:**

ஒப்பந்தத்தின் நடவடிக்கை பொறுப்புகள் என்பது உறுப்பினர்களுடனான ஒப்பந்தத்தில் உறுப்பினர்களுக்கான பொருட்கள் அல்லது சேவையை மாற்றம் செய்வதற்கான வாக்குறுதியாகும்.

**படி-3:நடவடிக்கையின் விலையை நிர்ணயம் செய்தல் :**

நடவடிக்கையின் விலை என்பது நிறுவனம் தனது ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை மாற்றம் செய்தபின் அவற்றிற்கு ஈடாக வாங்கப்படும் தொகையாகும். இதில் ஒப்பந்தத்தில் ஈடுபடாத நபர்களிடமிருந்து வாங்கப்படும் தொகைகள் சேராது.

**படி-4 : ஒப்பந்தத்தின் நடவடிக்கை பொறுப்புகளுக்காக நடவடிக்கைகளின் விலைகளை ஒதுக்கீடு செய்தல்:**

ஒரு ஒப்பந்தத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நடவடிக்கைகள் ஈடுபடுத்தப்படுகிறது. அவற்றின் அளவீடுகளுக்கு ஏற்றவாறு நடவடிக்கை விலைகளை ஒவ்வொரு ஒப்பந்த பொறுப்புகளுக்கும் ஒதுக்கீடு செய்கிறது.

**படி-5 : நடைமுறை ஒப்பந்தங்களின் வருமானங்கள் அங்கீகரிக்கப்படும் சூழ்நிலை:**

நிறுவனத்தின் வருமானம் ஒப்பந்த வாக்குறுதியின்படி உறுப்பினர்களுக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றம் செய்தபின் ஒப்பந்த விதிமுறைகளின்படி அந்த நடவடிக்கைகளுக்கான விலையை பெறுகின்றது. நிறுவனம் அதனுடைய நடவடிக்கை பொறுப்புக்களை சந்திக்கும் சூழ்நிலைகளால் ஏற்பட்ட சேவைகளின் மூலம் ஏற்பட்ட வருமானத்தை வருமானமாக அங்கீகரிக்கின்றது. இந்த நடவடிக்கையின் விலைகள் ஒவ்வொரு நடவடிக்கை பொறுப்புகளுக்காக தனித்த விற்பனை விலையின் மூலம் ஒதுக்கீடு செய்கின்றது.

### 3.1.3 நியாயமான மதிப்பீட்டின் மாற்றங்களினால் ஏற்படும் நிகர வருமானம் :

நிறுவனத்தின் இருப்பு நிலைக்குறிப்பின் தேதியின்போது லாப நட்ட கணக்கின் மூலமான நியாயமான மதிப்பீட்டின் வகையான நிதி சொத்துக்கள் மற்றும் நிதி சொத்துக்களின் நியாயமான மதிப்பீடு இவற்றிற்கு இடையேயான வித்தியாசங்கள் பெறப்படாத வருமானம் / நட்டம் என அங்கீகரிக்கப்படுகிறது. இவற்றின் நிகர வருமானம் (நியாயமான மதிப்பீட்டு முறையின் வருமானத்தின் நிகரம்) நடவடிக்கைகளின் மூலமாக வருமானம் என அங்கீகரிக்கப்பட்டு மற்றும் இவற்றின் நிகர நட்டங்கள் மேற்கூறியவாறே நடவடிக்கைகளின் மூலமான நட்டம் என லாப நட்ட கணக்கில் வெளிப்படுத்தப்படுகிறது.

இதைப்போலவே நிதியியல் ஆதாரங்களை FVTPL மூலம் மதிப்பீடு செய்து விற்பதன் மூலமும் மற்றும் கடன் ஆதாரங்களை FBOCI மூலம் மதிப்பீடு செய்து செலுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய ஏதாவது பெறுவதற்கான வருமானங்கள் அல்லது நட்டங்கள் நியாயமான மதிப்பீட்டின் மாற்றங்களினால் ஏற்படும் வருமானம் அல்லது நட்டத்தின் நிகரம் என அங்கீகரிக்கப்படுகிறது. இந்த ஆண்டறிக்கையின் தேதியில் நிறுவனம் நிதியியல் ஆதாரங்களை FVTPL மூலம் மதிப்பீடும் மற்றும் கடன் ஆதாரங்களை FBOCI மூலம் மதிப்பீடும் செய்யவில்லை. இதனால் குறைக்கப்பட்ட மதிப்பில் வகைப்படுத்தப்பட்ட நிதியியல் ஆதாரங்களின நிகர வருமானம் அல்லது நட்டம் தனியாக சரியான தலைப்பின் கீழ் லாப நட்ட கணக்கில் விளக்கப்படுத்தப்படுகிறது.

### 3.1.4 வாடகை வருமானம் :

நிறுவனத்தின் முதலீட்டு சொத்துக்களிலிருந்து உருவாகும் வாடகை வருமானம் இதர வருமானங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. குத்தகை ஒப்பந்தங்களில் நிறுவனம் குத்தகைதாரர் ஆவார். குத்தகை ஒப்பந்தத்தின்படி இந்த குத்தகை நிதியியல் குத்தகை அல்லது நடைமுறை குத்தகை என வகைப்படுத்தப்படுகிறது. குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறையின்படி இடர்பாடுகள் மற்றும் அதன் விளைவுகள் குத்தகைதாரருக்கு மாற்றப்படுமேயானால் அந்த ஒப்பந்தம் நிதி குத்தகையாகும். இவை அல்லாமல் இருக்கும் அனைத்து குத்தகைகளும் நடவடிக்கை குத்தகைகளாகும்.

நடவடிக்கை குத்தகை சொத்துக்கள் நிறுவனத்தின் இருப்பு நிலைக்குறிப்பில் முதலீட்டு சொத்துக்களாக கருதப்படுகிறது.

நடைமுறை குத்தகைகளிலிருந்து உருவாகும் வருமானம் அந்த குத்தகையின் காலம் வரை நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக கருதப்படுகிறது.

**3.1.5 நிறுவனத்தின் வருவாயில் வருவாய் தகவலை பிரித்தல் :**

Ind AS 115-ன் பயன்பாட்டின் தேவை முக்கியமில்லாமல் இருப்பதால் வருமானத்தின் தன்மை, தொகை, கால சூழ்நிலைகள் ஆகியவற்றை பிரித்து காண்பிக்க அவசியமற்றதாகிறது.

**3.2 செலவினங்கள்**

**3.2.1 நிதி செலவுகள் :**

நிறுவனத்தின் நிதி செலவுகளாக நிறுவனத்தின் மொத்த மதிப்பினை கொண்ட நிதி பொறுப்புகளின் மீதான ஆற்றல் மிகு வட்டி விகிதத்தைகொண்டு கணக்கிடப்படும் வட்டி செலவுகள் நிறுவனத்தின் நிதி செலவுகளாக கருதப்படுகின்றன. இதில் FVTPL மூலம் வகைப்படுத்தப்பட்ட நிதி பொறுப்புகள் உள்ளடங்காது. நிதி பொறுப்புகள் மீதான ஆற்றல் மிகு வட்டி விகிதம் கணக்கிடப்படும் வீதம்.

a) மொத்த மதிப்பை கொண்ட நிதி பொறுப்புக்களின் எதிர்பார்க்கப்படும் கால அளவிற்கு ஏற்றவாறும் அதனுடைய எதிர்வரும் காலத்தின் ரொக்க வருமானத்தின் மதிப்பீட்டு அடிப்படையிலும் அவற்றின் மேல் தள்ளுபடி விகிதத்தை பயன்படுத்துகிறது.

b) நிதியியல் ஆதாரங்களின் விரிவான விதிமுறைகளை கருத்தில்கொண்டு அவற்றின் ரொக்க பணப்புழக்கங்கள் மதிப்பீடு செய்யப்படுகிறது மற்றும் ஒப்பந்தத்தில் ஈடுபடும் அனைத்து நபர்களுக்கு இடையே வாங்கப்படும் எல்லா கட்டணங்களும் இவற்றுள் பொருந்தும்.

c) இவற்றுடன் ஒருங்கிணைந்த பகுதியாக ஆற்றல் மிகுந்த வட்டி விகிதம் நடவடிக்கைகளின் செலவுகள் மற்றும் இதர அதிகப்படியும் மற்றும் தள்ளுபடியும் ஆகியவை உள்ளடங்கியது. இதில் எதாவது எதிர்வரும் மாற்றங்கள் இருப்பின் இவற்றால் ஏற்படும் எதிர்வரும் பணப்புழக்கங்களின் மதிப்பீடுகளால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானம், சொத்துக்களின் மேல் தொடர்ந்து எடுத்து வரப்படும் தொகையில் சரியான முறையில் சரிகட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

**3.2.2 ஓய்வூதியம் மற்றும் பணியாளர்களின் இதர நலன்கள்:**

**குறகியகால பணியாளர் நலன்கள்:**

நிறுவனத்தின் 12 மாதங்களுக்குள்ளாக திருப்பி செலுத்தப்படும் அனைத்து பணியாளர் நலன்களும் இந்த குறுகிய கால பணியாளர் நலன்களாகும். இந்த குறுகியகால பணியாளர் நலனில் வருடாந்திர விடுமுறை எடுக்காமல் இருப்பதற்காக இழப்பீடு தொகையாக வழங்கப்படும் பலன்களும் அடங்கும். அந்த ஆண்டில் பணிபுரிந்த பணியாளர்களின் முழுமையாக வழங்கப்பட்ட பணியாளர் நலன்களும் குறுகியகால பணியாளர் நல செலவுகளாக கணக்கிடப்படுகிறது. அந்த ஆண்டில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊதியம் மற்றும் இதர எதிர்பார்க்கப்பட்ட ஊக்கத்தொகை மற்றும் கருணை தொகை ஆகியவையும் இந்த குறுகியகால பணியாளர் நலனில் சேர்க்கப்படும்.

**பணியாளர் நியமனத்தின் பிந்தைய பணியாளர் நலன்கள்**

a) **வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்**

நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்களின் கீழ்வரும் தொழிலாளர் நல சேமிப்பு நிதி மற்றும் மாநில பணியாளர் காப்பீட்டு திட்டம் ஆகியவற்றின் கீழ் பலன்களை பெற உரிமை பெற்றவர் ஆகின்றனர். இந்த வரையறுக்கப்பட்ட திட்டங்களில் மாதந்தோறும் குறிப்பிட்ட விகிதத்தில் நிறுவனத்தின் பணியாளர் மற்றும் நிறுவனம் ஆகிய இருவரின் பங்களிப்பையும் தர அவசியமாகிறது. அந்த ஆண்டில் நிறுவனம், பணியாற்றிய தனது பணியாளர்களின் சேவைகளுக்காக இந்த வருடாந்திர பங்களிப்பை தவிர வேறு எந்த எதிர்நோக்கும் பலன்களின் பங்களிப்பையும் செலவினங்களாக கணக்கிடப்படாது. இந்த பலன்களுக்கான செலுத்த வேண்டிய பங்களிப்பு இருப்பு நிலை தேதிக்கு முன்னதாகவே செலுத்தப்பட்டிருப்பின் உண்மையாகவே அவர்களின் சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகையைவிட அதிகமாக செலுத்தப்பட்டிருப்பின் அவற்றின் உபரி முன்னதாகவே செலுத்தப்பட்ட செலவினங்களின் தலைப்பில் சொத்துக்களின் பகுதியிலும் காண்பித்து எதிர்வரும் பங்களிப்பின்போது இந்த செலவை கழித்து காண்பிக்க வேண்டும். இதே போல் இந்த பலன்களுக்கான செலுத்த வேண்டிய பங்களிப்பு இருப்பு நிலை தேதியின்படி

குறைவாக செலுத்தப்பட்டிருப்பின் உண்மையாகவே அவர்களின் சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகையைவிட குறைவாக செலுத்தப்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட குறைவு செலுத்தப்பட செலவினங்களின் தலைப்பில் பொறுப்புகளின் பகுதியில் காண்பிக்கப்பட வேண்டும்.

b) **வரையறுக்கப்பட்ட நலன்களின் திட்டங்கள்**

நிறுவனம் தனது எல்லா பணியாளர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நலனின் திட்டங்களின் கீழ் பணிக்கொடையை வழங்குகிறது. பணிக்கொடை செலுத்துதல் சட்டம் 1972-ன்படி பணிக்கொடை என்பது நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தங்களது பணிக்காலத்தின்போது இறக்க நேரிட்டால் அல்லது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டின் கணக்குபடி பணிபுரிந்திருந்தாலோ அவர்களின் பணிக்காலம் முடிந்த பிறகு அவர்களுக்கு வழங்கப்படும் குறிப்பிட்ட ஒரு மொத்த தொகையே ஆகும்.

இந்த பொறுப்புகள் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணப்புழக்கங்களின் நடப்பு மதிப்பில் மதிப்பிடப்படுகிறது. இருப்பு நிலை குறிப்பில் காண்பிக்கப்படும் வரையறுக்கப்பட்ட நல திட்டங்கள் தள்ளுபடி அரசு பத்திரங்களின் மீதான பலன்களின் சந்தை மதிப்பை பொறுத்தே வரைறுக்கப்பட்ட நலத்திட்டங்களின் கீழான பொறுப்புக்களின் தற்போதைய மதிப்பு தள்ளுபடி விகிதத்தை பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட நல பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் வழி உருவாகும் வரையறுக்கப்பட்ட நல பொறுப்புகளின் மீது தள்ளுபடி விகிதத்தை உபயோகப்படுத்தி அதன் மீதான நிகர வட்டி செலவானது கணக்கிடப்படுகிறது. திட்ட சொத்துக்களின் மீதான உண்மையான வருமானம் தள்ளுபடி விகிதத்திற்கு மேலாக அல்லது கீழாக ஏற்படுமாயின் அவற்றை இதர வருமானத்தின் மூலம் அவை நிகர இதர விரிவான வருமானத்தின் வழியாக வரையறுக்கப்பட்ட பொறுப்பு மற்றும் சொத்துக்களின் மறுமதிப்பீட்டின் பகுதியாக அங்கீகரிக்கப்படுகிறது. உண்மையான மதிப்பீட்டில் பல்வேறு வகையான அனுமானங்கள் உட்படுத்தப்படுகின்றன அவை எதிர்காலத்தின் உண்மையான வளர்ச்சியின் அனுமானங்களில் இருந்து வேறுபாடு கொண்டிருக்கலாம். இவையாவும் தள்ளுபடி விகித கணக்கீடு, தேய்வு விகிதம் எதிர்கால ஊதிய உயர்வு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் ஆகியவற்றின் கணக்கீடுகளை உள்ளடக்கியுள்ளது. மதிப்பீட்டில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக மற்றும் அதனுடைய தொடர்நிலை தன்மை மற்றும் இந்த பொறுப்புகளில் அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள் யாவும் மிகவும் சிக்கலானதாகும். இந்த அனைத்து அனுமானங்களும் வருடத்திற்கு ஒரு முறை மதிப்பாய்வு செய்யப்படுகிறது. நிறுவனம் முழுவதுமாக, உறுதி செய்யப்பட்ட பொறுப்புகளுக்காக Trust Bank வழி இல்லாமல் LIC-ல் பங்களிப்பு செய்கிறது. அறங்காவல் நிர்வாகிகளின் பங்களிப்புகள் யாவும் அறக்கட்டளைகள் மற்றும் அந்த பங்களிப்புகள் யாவும் IRDA -வின் வழிகாட்டுதலின்படி அங்கீகரிக்கப்பட்ட காப்பீடு நிறுவனங்களின் காப்பீடு திட்டங்களில் முதலீடு செய்யப்படுகின்றன.

மறுமதிப்பீடானது, உண்மையான வருமானங்கள் மற்றும் நட்டங்களை உள்ளடக்கி மற்றும் திட்டச்சொத்துக்களின் (மறுவரையறுக்கப்பட்ட நல பொறுப்புகளின் மீதான நிகர வருமானத்தின் தொகையை நீக்கி) , ஆகியவற்றை எந்த காலத்தில் இவை நிகழ்கிறதோ உடனடியாக இருப்பு நிலை குறிப்பில் OCI மூலமான தக்க வைத்துக்கொண்ட வருமானங்களுக்கான சரியான பற்று அல்லது வரவு குறிப்புகளுடன் அங்கீகரிக்கப்படுகிறது. மறுமதிப்பீடானது இதன் தொடர்ந்து வரும் காலங்களில் லாப நட்ட கணக்கீடாக வகைப்படுத்தப்படுகிறது.

c) **இதர நீண்டகால பணியாளர் நலன்கள்:**

நிறுவனத்தின் முந்தைய நடவடிக்கைகளின் அனுமானங்களில் ஏற்பட்ட நடவடிக்கையில் ஏற்பட்ட மாற்றங்களால் பணியாளர்களுக்கான கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடுகள் தொடர்பான பொறுப்புகள் நிறுவனத்தின் லாப நட்ட கணக்கில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகிறது. இதன் தொடர்பான ஒதுக்கீடுகள் நிறுவனத்தின் இருப்பு நிலை குறிப்பில் காண்பிக்கப்படுகிறது.

**3.2.3 குத்தகைகளை அடையாளம் காணும் வாடகை செலவுகள்:**

நிறுவனத்தின் ஒரு ஏற்பாடு குத்தகையா அல்லது குத்தகைக்கான தன்மைகளை கொண்டுள்ளதா என்பதை அந்த ஏற்பாட்டின் நடவடிக்கைகளை கொண்டே தீர்மானிக்கின்றது. சில குறிப்பிட்ட சொத்து அல்லது சொத்துக்களை சார்ந்துள்ளதா அல்லது சொத்துக்களை உபயோகப்படுத்துவதற்கான உரிமை அளிக்கப்பட்டுள்ளதா என்பதை இந்த ஏற்பாட்டின் மதிப்பீடு மற்றும் தன்மையை கொண்டு நிர்மானிக்கப்படுகிறது.

**குத்தகை தொகையை அங்கீகரிப்பது:**

வாடகை செலவுகள் நடைமுறை குத்தகைகளினால் உருவாகும் செலவினம் அந்த செலவு குத்தகையின் காலம் வரை நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக கருதப்பட்டு நிறுவனத்தின் லாப நட்ட கணக்கில் சேர்க்கப்படுகிறது. ஒரு வேளை நடைமுறை கால அளவிற்கேற்றவாறு குத்தகையின் கால அளவு அதிகப்படுமேயானால் இதனால் ஏற்படும் செலவுகள் ஒப்பந்த கால விதிமுறைகளின்படி செலவினங்களாக மதிப்பிடப்படுகிறது. நடைமுறை ஒப்பந்தங்களில் ஒப்பந்த பொருள் தொடர்பான இடர்பாடு மற்றும் பலன்கள் மட்டுமே மாற்றம் செய்யப்படும். ஒப்பந்த பொருளின் உரிமை தன்மை மாற்றம் செய்யப்படாது.

**3.2.4 இதர வருமானம் மற்றும் செலவினங்கள்**

நிறுவனத்தின் இதர வருமானங்கள் மற்றும் செலவினங்கள் அந்த ஆண்டில் நடைபெறும் நடவடிக்கைகளின் பொறுத்து அங்கீகரிக்கப்படுகிறது.

**3.2.5 குறைமதிப்பீட்டான நிதி அல்லாத சொத்துக்கள்**

இந்த குறை மதிப்பீட்டிலான நிதி அல்லாத சொத்துக்களில் ஒவ்வொரு இருப்பு நிலை குறிப்பு தேதியிலும் நிறுவனத்தின் உள் அல்லது வெளி காரணிகளால் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். இந்த சொத்துக்களின் மதிப்பு அதனுடைய திரும்ப பெறக்கூடிய மதிப்பைவிட அதிகமாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய வேறுபாடு குறைமதிப்பீட்டு நட்டமாக கணக்கிடப்படுகிறது. இந்த சொத்துக்களின் மதிப்பு அதனுடைய திரும்ப பெறக்கூடிய மதிப்பைவிட குறைவாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய வேறுபாடு குறைமதிப்பீட்டு லாபமாக கணக்கிடப்படுகிறது. இந்த விற்பனை விலையை, தேவைப்படும்பொழுது சமீபத்திய சந்தை நடவடிக்கைகளை கொண்டு நிர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு எந்த நடவடிக்கையும் நடைபெறவில்லை எனில் மதிப்பு மாதிரிகளை கொண்டு மதிப்பிடப்படுகிறது.

**3.2.6 வரிகள்**

**a) நடப்பு வரி:**

நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான நடப்பு வரியானது நடப்பாண்டு அல்லது முந்தைய ஆண்டுகளின் நடவடிக்கைகளினால் வரி அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய அல்லது பெற வேண்டிய தொகையை குறிப்பதாகும். இந்த நடப்பு வரி விகிதங்கள், நடப்பாண்டில் இயற்றப்பட்ட வரி சட்டங்கள் அல்லது மாறுதலுக்குரிய வரி சட்டங்களை கொண்டு அறிக்கையின் தேதியின்போது கணக்கிடப்படுகிறது.

நடப்பாண்டில் வெளி நடவடிக்கைகளின் மூலமான லாபம் அல்லது நட்டத்தின் மீதான வருமானவரி வெளி நடவடிக்கையின் லாபம் / நட்டத்தின் மீதான செலவினமாக கருதப்படுகிறது. (இதர விரிவான வருமானம் அல்லது பங்குகள் இவற்றில் ஏதாவது)

**b) ஒதுக்கி வைக்கப்பட்ட வரி**

நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான ஒதுக்கி வைக்கப்பட்ட வரியானது வரி அடிப்படையிலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பீடு மற்றும் அதனுடைய உண்மையான மதிப்பு இவை இரண்டிற்குமான தற்காலிக வேறுபாடு ஆகும். இந்த ஒதுக்கி வைக்கப்பட்ட வரியானது, வரி விகிதங்கள் நடப்பாண்டில் இயற்றப்பட்ட வரி சட்டங்கள் அல்லது மாறுதலுக்குரிய வரி சட்டங்களை கொண்டு அறிக்கையின் தேதியின்போது கணக்கிடப்படுகிறது. மேலும் இந்த ஒதுக்கி வைக்கப்பட்ட வரி, ஒதுக்கி வைக்கப்பட்ட வருமான வரி சொத்துக்கள் மதிப்பாக மாற்றம் செய்யப்படும்போதும் அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட வருமான வரி பொறுப்புகள் செலுத்தப்படும்போதும் பயன்படுத்தப்படும்.

ஒதுக்கீட்டு வரி சொத்துக்கள் தற்காலிக வேறுபாட்டின் காரணிகளால் அங்கீகரிக்கப்படுகிறது. பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி லாபங்கள், எதிர்காலத்தில் வரி விதிக்க தக்க தொகைகள் இந்த தற்காலிக வேறுபாடுகள் மற்றும் நட்டங்களை ஏற்படுத்த வாய்ப்பாகிறது. ஒதுக்கி வைக்கப்பட்ட நிதி சொத்துக்கள் யாவும் ஒவ்வொரு அறிக்கை தேதியின்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இதனால் ஆயுட்காலம் வரை இதை நீட்டிக்க வாய்ப்பிருக்காது. ஒதுக்கி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், எப்போது சட்டபடி செயல்படுத்தக்கூடிய உரிமையை பெறுகிறதோ அப்போது அதை நடப்பு வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாக மாற்றி அவற்றை நடப்பாண்டின் வருமானவரி கணக்கில் சேர்க்கப்படுகிறது.

**c) குறைந்தபட்ச மாற்று முறை வரி** (MAT)

இந்திய வருமான வரிச்சட்டம் 1961 சட்டப்பிரிவு 115 BAA-ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைக்கப்பட்ட வருமான வரி விகிதம் மற்றும் அதனுடைய விதிமுறைகள் நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது. மேலும் இதன் தொடர்புடைய சட்ட விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளின்படி நிறுவனம் இந்த ஆய்வு வரி சலுகையை பெற முடியாது. இதனால் நிறுவனத்தின் கணக்கு பதிவுகளில் ஆய்வு வரி சலுகைக்கான எந்த நிலுவையும் இல்லை.

**d) சரக்கு மற்றும் சேவை வரி**

சரக்கு மற்றும் சேவை வரியானது சொத்துக்களை கையகப்படுத்தும்போதும் அல்லது அதன் மீதாக ஏற்படும் செலவுகளுக்காக செலுத்தப்படும் வரியாகும். செலவுகள் மற்றும் சொத்துக்களை, சரக்கு மற்றும் சேவை வரி செலுத்திய பின் இந்த செலவுகள் மற்றும் சொத்துக்களின் நிகரம் கணக்கிடப்படுகிறது. இதில்

1. ஒரு சொத்து அல்லது சேவையை வாங்கும்போது அல்லது அதன் மேல் ஏற்படும் வரியை வரி அலுவலர்களால் மீட்கமுடியாதபோது அந்த செலுத்தப்பட்ட வரியை சொத்தை கையகப்படுத்தியதற்கான செலவின் ஒரு பகுதியாக அல்லது சேவைகளின் செலவினங்களின் ஒரு பகுதியாக இவற்றில் எது பொருந்துகிறதோ அவ்வாறாக கணக்கிடப்படுகிறது.
2. இந்த சரக்கு மற்றும் சேவை வரியின் கொடுக்கப்பட வேண்டிய அல்லது பெறப்பட வேண்டியவற்றின் வேறுபாடு சரிசெய்யப்பட்டு அதன் நிகரம் கொடுபட வேண்டியவை அல்லது பெறப்பட வேண்டியவையாக கருதப்படுகிறது.

**3.3 நிதியியல் ஆதாரங்கள்:**

**3.3.1 நிதியியல் ஆதாரங்களின் வகைபாடுகள்**

நிதி நிறுவனத்தின் நிதி சொத்துக்கள் கீழ்வரும் அளவீடுகளின் மூலம் வகைப்படுத்தப்படுகிறது.

1. குறைக்கப்பட்ட மதிப்பீட்டின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்
2. இதர வருமானங்களின் வழியாக நியாயமான மதிப்பீட்டின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்.
3. லாப நட்ட கணக்கின் வழியாக நியாயமான மதிப்பீட்டின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்.

இந்த வகைபாடானது நிறுவனத்தின் நிதி சொத்துக்களின் விரிவான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளால் ஏற்படும் பண வரவு செலவுகளில் வணிக மாதிரிகளை கொண்டு நிர்வகிக்கும் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

- நிதி சொத்துக்களின் மீதான நடவடிக்கைகளின் அறிக்கைகளை நிறுவனத்தின் முக்கிய மேலாண்மை நிர்வாக அதிகாரிகளால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- வணிக மாதிரியின் மூலம் ஏற்படும் நடவடிக்கைகளின் மீதான இடர்பாடுகள் (மற்றும் வணிக மாதிரியின் மூலமாக இருக்கும் நிதி சொத்துக்கள்) மற்றும் அதனுடைய நிர்வாகம் தொடர்பாக
- வணிகத்தின் எதிர்பார்க்கப்படும் தொடர்தன்மை, மதிப்பு மற்றும் காலம்

இந்த வணிக மாதிரியின் மதிப்பீடானது நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை பின்பற்றியுள்ளதாகும். மேலும் இவை மோசமான நிலைமை மற்றும் அழுத்தமான நிலைமை ஆகிய சூழ்நிலைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்படுவதாகும்.

மேலும் நிறுவனமானது நிதி சொத்துக்களின் ஒப்பந்தபடியான விதி முறைகளை அதனுடைய ஒப்பந்தபடியான பணப்புழக்கங்களின் குணாதிசயங்களை தனிப்பட்ட முறையில் நிலுவையில் இருக்கும் அதனுடைய அசல் மற்றும் வட்டியின் கட்டணங்களை பொறுத்து மதிப்பிடப்படுகிறது. அசல் என்பது அந்த நிதி சொத்தின் தொடக்க மதிப்பீட்டில் நியாயமான மதிப்பாகும் மற்றும் இந்த மதிப்பானது நிதி சொத்தின் ஆயுட்காலத்திற்குள் ஏதாவது மாற்றம் ஏற்படலாம் (உதாரணமாக அசலின் தொகையை செலுத்தும்போது அவற்றின் பிரீமியம்/தள்ளுபடியின் மதிப்பு குறையலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம். இந்த மதிப்பீட்டை உருவாக்கும்போது, நிறுவனம் கடன்களின் ஏற்பாடுகளின்படி உண்மையான பணப்புழக்கங்களின் நிலை தன்மையை கருத்தில்கொள்ள வேண்டும் (i.e வட்டியானது, பணத்தின் காலத்தன்மை, கடன் இடர்பாடு மற்றும் இதர அடிப்படை கடன்களுக்கான இடர்பாடுகள் மற்றும் அடிப்படை கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளின் மீதான இலாபத்தின் அளவுகோளை

கருத்தில் கொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.) ஒப்பந்தப்படியான விதிமுறைகள் யாவும் இடர்பாடுகளின் தன்மையை வெளிப்படையாக அறிமுகப்படுத்துகிறதா என்றும் அல்லது நிலையற்ற தன்மையை அடிப்படை கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளுடனான நிலையற்ற தன்மையையும், இதன் தொடர்பான நிதி சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா என்றும் அவையாவும் இலாப நட்ட கணக்கீட்டின் வழியாக நியாயமான மதிப்பீட்டில் அளவிடப்படுகின்றனவா என்றும் கண்டறிய வேண்டும்.

நிறுவனம் தனது நிதி பொறுப்புக்களை குறை மதிப்பீட்டு செலவில் வகைப்படுத்தியுள்ளதா அல்லது அவை இலாப நட்ட கணக்கீட்டின் வழியான நியாயமான மதிப்பீட்டின் மூலமாக நியமிக்கப்பட்ட பொறுப்புகளாக உள்ளனவா என்றும் அல்லது இலாப நட்ட கணக்கீட்டின் வழியான நியாயமான மதிப்பீட்டின் மூலமாக டெரிவேட்டிவ்ஸ் பொறுப்புகளாக உள்ளனவா என்றும் வகைப்படுத்தப்பட வேண்டும்.

**3.3.2 குறை மதிப்பீட்டு செலவில் அளவிடப்பட்ட நிதி சொத்துக்கள்**

இந்த நிதி சொத்துக்களானது, வங்கி இருப்புகள், கடன்கள், முதலீடுகள் மற்றும் இதர நிதி சொத்துக்களை உள்ளடக்கியதாகும்.

நிதி சொத்துக்களானது ஒப்பந்தபடியான விதிமுறைகளுடன் குறிப்பிட்ட தேதியில் பணப்புழக்கத்தை உண்டாக்குவதாகவும், மற்றும் தனிப்பட்ட முற்றிலும் செலுத்தப்படும் அசல் மற்றும் அசல் மீதான வட்டி ஆகியவற்றின் நிலுவைகளை எடுத்துரைப்பதாகவும் மற்றும் குறை மதிப்பீட்டு செலவில் அளவிடப்படும் ஒப்பந்தப்படியான பணப்புழக்கங்களை திரட்டி வைத்திருப்பதன் நோக்கத்தை அடைவது இந்த நிதி சொத்துக்கள் யாவும் தொடக்கத்தில் நியாயமான மதிப்புடன கூடுதலாக, ஏற்பட்ட நடவடிக்கை செலவுடன் கணக்கிடப்பட்டு அதன் பிறகு குறைமதிப்பீட்டு செலவில் மதிப்பிடப்படுகிறது. நடைமுறை செலவுகள் யாவும் நிதி சொத்துக்கள் அல்லது நிதி பொறுப்புகளை நேரடியாக கையகப்படுத்தும்போது, வெளியிடப்படும்போது அல்லது அகற்றும்போது ஏற்படக்கூடிய அதிகரிக்கும் செலவுகளாக கணக்கிடப்படுகிறது.

**3.3.3 இதர விரிவான வருமானத்தின் வழியாக நியாயமான மதிப்பின் மூலம் அளவிடப்படும் நிதிச்சொத்துக்கள்.**

Ind AS 109-ன் விதிமுறைகளின்படி நிறுவனம், இதர விரிவான வருமானத்தின் வழியாக நியாயமான மதிப்பின் மூலம் அளவிடப்படும் நிதியியல் ஆதாரங்களை பெற்றிருக்கவில்லை.

**3.3.4 இலாப நட்ட கணக்கின் வழியான நியாயமான மதிப்பிலான பொருட்கள் / இலாப நட்ட கணக்கினை உள்ளடக்கிய நியாயமான மதிப்பீட்டிலான பொருட்கள்**

- முதலீடுகள் ( பங்கு மூலதனம் உள்பட ) வணிகத்திற்காக உள்ளவை
- தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட லாப நட்ட கணக்கின் வழியான நியாயமான மதிப்பீட்டை உடைய குறிப்பாக நியமிக்கப்பட்ட பொருட்கள்
- முற்றிலும் செலுத்தப்படும் அசல் மற்றும் வட்டியை குறிக்காத ஒப்பந்த விதிமுறைகளுடனான கடன் ஆதாரங்கள்.

தொடக்கத்தில் நியாயமான மதிப்புடன் உள்ளடக்கி கணக்கிடப்பட்ட அதன் பிறகு லாப நட்ட கணக்கின் வழியான நியாயமான மதிப்பின் மூலமாக அளவிடப்படும் நிதியியல் ஆதாரங்களில் ஏற்படும் நடைமுறை செலவுகள் லாப நட்ட கணக்கில் காண்பிக்கப்படும். அதன் பிறகு இவைகள் நியாயமான மதிப்பில் அளவிடப்பட்டு மற்றும் இவற்றின் மூலமாக ஏற்படும் வருமானங்கள் மற்றும் நட்டங்கள் லாப நட்ட கணக்கில் காண்பிக்கப்படும்.

**வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிதியியல் ஆதாரங்கள்**

வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிதியியல் ஆதாரங்கள், விற்பனைக்கு அல்லது மறு கொள்முதல் இவற்றில் எது பொருந்துகிறதோ அல்லது இதர நிதியியல் போர்ட் போலியோவின் பகுதிகள் ஆகிய இவற்றின் நடவடிக்கைகளின் ஆதாரங்களை கொண்டு குறுகிய காலம் மேற்கொள்ளும் அல்லது நீண்ட காலமாக கையிருப்பு வைத்திருக்க அவசியம் இல்லாத டெரிவேட்டிவ்ஸ் இவற்றிற்காக கையகப்படுத்தப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட நிதி ஆதாரங்கள்ஆகும். நடப்பாண்டில் நிறுவனம் இவ்வகையான வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிதியியல் ஆதாரங்களை ஏற்படுத்தவில்லை.

### 3.3.5 கடன் பத்திரங்கள் அல்லது இதர கடன் நிதிகள்

தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட, வெளியிட்ட கடன் பத்திரங்கள் அல்லது கடன் நிதிகள் பின்பாக குறைக்கப்பட்ட மதிப்பீட்டில் அளவிடப்படுகிறது. குறைக்கப்பட்ட மதிப்பின் அளவீடானது ஏதேனும் தள்ளுபடி அல்லது பிரீமியத்தில் இந்த நிதிகள் வெளியிடப்பட்டிருப்பின் அல்லது நடவடிக்கைகள் ஏற்பட்டு இருப்பின் அவைகள் ஆற்றல் மிகு வட்டி விகிதத்தில் கணக்கீடு செய்யப்படுகிறது.

### 3.3.6 அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்

நிறுவனம் பொதுவாக வர்த்தக நாளில் தனது ஆதாரங்களின் ஒப்பந்தப்படியான ஒதுக்கீடுகளில் ஒரு நபராக இருந்து ஈடுபடும் வர்த்தக நடவடிக்கைகளின் மூலமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாக தனது இருப்புநிலை குறிப்பில் அங்கீகாரம் செய்கிறது. கடனாளர்களிடம் முன்பணமாக வாங்கப்பட்ட தொகை அல்லது செலுத்தப்பட்ட தொகை கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளாக கருதப்படுகின்றன. எல்லா நிதி சொத்துக்களும் தொடக்கத்தில், நியாயமான மதிப்பீட்டு முறையுடன் நேரடியாக கூறப்படும் பரிவர்த்தனை செலவுடன் அங்கீகரிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்கள் என்பன ஒப்பந்தப்படி ஏற்படும் பண புழக்கங்களின் மூலம் ஏற்படும் சொத்துக்களின் காலாவதி அல்லது அந்த சொத்துக்களின் உரிமையினால் ஏற்படும் பணப்புழக்கங்களிலிருந்து கணிசமான எல்லா இடர்கள் மற்றும் பலன்கள் யாவும் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவை அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்களாகின்றன. இந்த மாற்றம் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மூலம் பெறப்பட்ட வட்டியானது தனியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தலைப்பின் கீழ் காண்பிக்கப்படுகிறது. நிறுவனம் தனது பொறுப்புகளிலிருந்து வெளியேறிய பின்பு அல்லது ஒப்பந்தங்களை ரத்து செய்யும்போதும் அல்லது ஒப்பந்தங்கள் காலாவதியாகும்போதும் தனது இருப்பு நிலை குறிப்பிலிருந்து நிதியியல் பொறுப்புகளை அங்கீகரிக்கப்படாதவையாக மாற்றுகிறது.

### 3.3.7 குறை மதிப்பீட்டான நிதி சொத்துக்கள் - எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் (ECL)

Ind AS 109-ல் கூறியுள்ளவாறு தேவையான அடிப்படை கணக்கியல் மாற்றங்களால் இயல்பாக தோன்றும் இடர்பாடு ஒதுக்கீடை குறிக்கிறது. (Risk Provisioning) குறிப்பாக ஏற்படக்கூடிய நட்ட மாதிரிக்கு பதிலாக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் (ECL) மாதிரி நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளால் நிதி ஆதாரங்களில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன.

**வகை-1 : 12 மாதங்களுடைய ECL**

மாத தொடக்கத்தில் எல்லா நிதி சொத்துக்களும் வகை 1 என்று அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. இதில் உள்ள அனைத்து நிதி சொத்துக்களும் இயல்பான அளவிலான இடர்பாடுகளை கொண்டுள்ளதாகும்.

**வகை-2 : வாழ்நாள் ECL - குறைக்கப்பட்ட கடன்கள் அல்லாது**

தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட நிதி சொத்துக்களில் உள்ள இயல்பான இடர்பாடுகளின் அளவைவிட குறிப்பிடத்தக்க வகையில் அதிகமான இடர்பாடுகளை உடையது வகை 2 என பிரிக்கப்படுகிறது. இவை இயல்பான அளவிலான இடர்பாடுகளை கொண்டிருக்காது.

**வகை-3 : வாழ்நாள் ECL - குறைக்கப்பட்ட கடன்கள்**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நடவடிக்கைகளினால் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணப்புழக்கங்களின் மீதாக ஏற்படும் விளைவுகளை கணக்கீடு செய்து, அப்பொழுது அவை குறைக்கப்பட்ட கடன்களின் வெளிப்பாடுகளாக அளவிடப்படுகிறது. வெளிப்பாடுகளினால் ஏற்படும் கடன் குறைபாடுகள் வாழ்நாள் ECL ஆக அங்கீகரிக்கப்பட்டு மற்றும் அதன் வட்டி வருமானங்கள் யாவும் மொத்தமாகக் கொண்டிருக்கும் மதிப்பிற்கு மாறாக (ஒதுக்கீட்டின் நிகரப்படி) குறைக்கப்பட்ட செலவில் பயனுள்ள வட்டி விகிதத்தை உபயோகப்படுத்தி கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு அறிக்கை தேதியிலும் நிறுவனம், தேவையான உயர்ந்த அளவில் கடன் இடர்பாடுகளால் ஏற்படும் வெளிப்பாடுகளின் முக்கியத்துவத்தை அதன் தொடக்க அளவீட்டிலிருந்து அறிக்கை தேதி மற்றும் தொடக்க அளவீடு தேதி இவற்றிற்கு இடைப்பட்ட, பிழைகளினால் எதிர்பார்த்த வாழ்நாளில் ஏற்படும் இடர்பாடுகளுடன் ஒப்பீடு செய்து கணக்கீடு செய்கிறது.

நிறுவனம், தொடர்புடைய மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதரிக்கக்கூடிய தகவல்களை மற்றும் தேவையற்ற செலவு அல்லது தேவையற்ற முயற்சி ஆகியவை நீங்கலான நடவடிக்கைகளை கருத்தில்கொள்ள வேண்டும். மேலும் இவை தரமான மற்றும் அளவான தகவல்களை உள்ளடக்கி மற்றும் எதிர்நோக்கும் பகுப்பாய்வுகளை உள்ளடக்கியதாகும். இந்த வெளிப்பாடானது சொத்துக்களின் தரம் குறைவதினால் அவை ECL வகைக்கு இடம் மாறுவதன் வெளிப்பாடாக உள்ளது. இப்பொழுது அல்லது எதிர்வரும் காலத்தில் சொத்துக்களின் தரம் உயரும்பொழுதும் அல்லது முந்தைய ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்பட்ட முக்கியமான உயரும் தன்மையுடைய இடர்பாடுகள் என ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்தின் தன்மை மாறுதலினால், இவற்றின் மீதான நட்ட பயன்கள் வாழ்நாள் ECL - ல் இருந்து 12 மாத ECL -ஆக மாற்றம் செய்யப்படுகிறது.

இந்த நிதி சொத்துக்களின் மீதான நட்ட பயன்கள் யாவும் 12 மாத ECL - ன் அடிப்படையில் உள்ளது. எப்பொழுது இந்த சொத்துக்கள் சேகரிக்க முடியாத தன்மையை அடைகிறதோ இதன் தொடர்பான பயன்கள் எதிராக எழுதப்படுகிறது. சில சொத்துக்கள் திரும்ப எதிராக எழுதப்படுவை யாவும் அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மற்றும் அதன் தொடர்பான நட்டத்தொகையை கணக்கீடு செய்தும் இந்த Write Off மேற்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் இதைத்தொடர்ந்து முந்தைய காலங்களில் Write Off செய்யப்பட்ட தொகைகளில் இருந்து திரும்ப பெறப்படும் பலன்கள் லாப நட்ட கணக்கில் காண்பிக்கப்படுகிறது.

கணக்கியல் தரவியல், IndAs 109 குறிப்பாக ECL - ஐ கணக்கீடு செய்வதில் எந்த முறையையும் பரிந்துரைக்கவில்லை. எனினும், நிறுனங்கள் யாவும் சிறந்த மற்றும் சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படும் முறைகளை, அதன் தன்மைக்கு ஏற்ப மற்றும் அளவிற்கு ஏற்ப, ECL - ஐ கணக்கீடு செய்வதில் நிதியியல் நிறுவனங்களின் இடர் தொடர்பான விபரங்கள் மற்றும் அதன் சிக்கல்களுக்கு ஏற்ப தேர்வு செய்ய வேண்டும். நிறுவனம் மூன்று முக்கிய கூறுகளின் மூலம் இந்த ECL - ஐ கணக்கீடு செய்வதில் பயன்படுத்துகிறது. ஆகியவைகளாவன, இடர்பாடுகளின் வெளிபாடுகள் (EAR), பிழைகள் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் (PD), மற்றும் பிழைகளால் ஏற்படும் நட்டங்கள் (LGD). இடர்பாடுகளின் வெளிபாடுகள் (EAR) என்பது அறிக்கை தேதியன்று நிலுவையிலுள்ள அசல் தொகை மற்றும் அதன் மீது குவிந்துள்ள வட்டி இவற்றின் மொத்தம் ஆகும். பிழைகள் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் (PD) என்பது கடனாளிகள் தங்களது பொறுப்புகளின் மீது ஏற்படுத்தும் தவறு இழப்புகள் ஏற்படுத்துவதற்கான சாத்திய கூறுகள் ஆகும். பிழைகளால் ஏற்படும் நட்டங்கள் (LGD) என்பது பொருளாதார நட்டம் அவற்றின் மீதான சரிகட்டல்கள் செய்யப்படும் விகிதம், பிழைகள் ஏற்பட்ட காலத்தின்போது அவற்றின் வெளிபாடுகளின் சதவீதம். நிறுவனம், தனியாக அல்லது கூட்டத்தின் அடிப்படையில் ஏற்படும் கடன் இடர்பாடுகள் மற்றும் அவற்றின் வெளிபாடுகள் ஆகியவை உயர்ந்துள்ளனவா என்றும் அதன் முக்கியத்துவத்தினையும் கணக்கீடு செய்ய வேண்டும். இந்த குறைபாட்டின் கூட்டு மதிப்பீட்டின் பயன்பாடானது, நிதியியல் ஆதாரங்கள் யாவும் பகிரப்பட்ட கடன் இடர்பாடுகளின் குணாதிசியங்களின் அடிப்படையிலும், ஆதாரங்களின் வகைபாடுகளின் அடிப்படையிலும், கடன் இடர்பாடுகளின் அளவீடுகளின் அடிப்படையிலும் தொடக்க மதிப்பீட்டின் தேதியின் அடிப்படையிலும், முதிர்ச்சி அடைவதற்கான மீதமுள்ள காலத்தின் அடிப்படையிலும், நிறுவன வகை அடிப்படையிலும், கடனாளிகளின் புவியியல் இடத்தின் அடிப்படையிலும் மற்றும் தேவையான காரணிகளின் வழியாக குழுவாக அமைக்கப்படுகிறது.

ECL - ன் மதிப்பீடானது பராபட்சமற்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் நட்டங்களின் மதிப்பீடுகளின் நிச்சயமான சாத்தியகூறுகள் மற்றும் இதர காரணிகளின் மூலம் பெறப்பட்டது. அவை கீழ்காண்பவை.

- நிதி சொத்துக்கள், அறிக்கை தேதியன்று கடன் குறை மதிப்பீடு அல்லாதவை: நிதி சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாளில் ஏற்படும் பண குறைபாடுகள். நிறுவனம், பண உள்வரவுகள் (திரும்ப பெறப்பட்டது அல்லது ஏலத்தின் வழியாக இவற்றில் எதுவோ) 12 மாதங்களுக்கு உள்ளாக பெறப்படும் என நம்புகிறது மற்றும் இதன்படி இவற்றில் தள்ளுபடி ஏதும் பொருந்தாது. பண குறைபாடுகள், என்பது நிறுவனம் ஒப்பந்தபடியாக சந்திக்கும் பண புழக்கங்களின் நிலுவைகள் மற்றும் அவற்றின் மீதாக நிறுவனம் எதிர்பார்க்கும் வரவுகள் இவற்றிற்கு இடையேயான வேறுபாடு ஆகும். நிறுவனம் தன்னுடைய பல்வேறு வகையான நிதி சொத்துக்களை அதனுடைய ஒன்றிணைந்த கடன் இடர்பாடுகளின் குணாதிசயங்களை கொண்டு ஒரே குழுவாக ஒன்றிணைக்கிறது. இந்த குழுக்களில் மீதான பிழைகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் யாவும் வரலாற்று போக்குகளின்படி கணக்கீடு செய்து அவற்றின் மீதான சரிகட்டல்கள் எதிர்நோக்கும் காரணிகளை கொண்டு செயல்படுகிறது. இதைப்போலவே நிறுவனம் பிழைகள் ஏற்படுத்தும் நட்டங்களை அதனுடைய திரும்ப பெறும் விகிதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்கிறது.

- நிதி சொத்துக்கள் யாவும் அறிக்கை தேதியன்று கடன் குறை மதிப்பீட்டளவை கொண்டிருக்கும் மொத்த மதிப்பு தொகை மற்றும் ஆற்றல் மிகு வட்டி விகிதத்தின் மூலம் தள்ளுபடி செய்யப்படும், மதிப்பிடப்படும் எதிர்கால பணப்புழக்கங்களின் தற்போதைய மதிப்பு ஆகிய இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும்.

OCI வழியாக நியாயமான மதிப்பின் மூலம் மதிப்பிடப்படும் கடன் ஆதாரங்களின் ECL என்பது FVOCI மூலம் மதிப்பிடப்படும் கடன் ஆதாரங்களின் ECL ஆனது இருப்புநிலைக்குறிப்பில் இந்த நிதி சொத்துக்களின் கொண்டிருக்கும் மதிப்பின் தொகையை குறைக்காது, இவையாவும் நியாயமான மதிப்பிலேயே இருக்கும். இதற்கு பதிலாக குறைமதிப்பீட்டு செலவில் அளவிடப்படும் சொத்துக்களினால் ஏற்படும் பலன்களின் தொகைக்கு சமமாக OCI வழியாக குவிந்துள்ள குறைமதிப்பீட்டின் தொகையாக லாப நட்ட கணக்கில் சரியானபடி பதிவு செய்யப்படும். OCI -ன் மேல் கணக்கிடப்படும் குவிந்துள்ள நட்ட தொகையானது மறு சுழற்சியின் மூலம் லாப நட்ட கணக்கில் காண்பிக்கப்பட்டு, சொத்துக்களில் மதிப்பு குறைக்கப்படுகிறது. நிறுவனம் அறிக்கை தேதியின்போது OCI வழியாக நியாயமான மதிப்பீட்டின் மூலம் அளவிடப்பட்ட எந்த ஒரு கடன் ஆதாரங்களும் பெற்றிருக்கவில்லை.

**பிணையங்களின் மதிப்பீடு:**

நிறுவனம் கடன் தொடர்பாக தேவையாக இருக்கும் பொழுது பிணையமாக பெறும் நிதி சொத்துக்களின் இடர்பாடுகளை கணிக்கிறது. நிறுவனத்தின் முதன்மையான பிணையமாக கருதப்பட்டு பெறப்படுவது தங்கமாகும். நிறுவனம் மேலும் நிலை வைப்புகளுக்கு எதிராகவும் கடன்களை வழங்குகிறது. எனினும் பிணையங்களின் மீதான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் பிணையங்களின் மதிப்பீட்டை பாதிக்கிறது. முடிந்தவரை நிறுவனம் பிணையங்களாக பெறப்படும் நிதி சொத்துக்களின் மீது நடப்பு சந்தை மதிப்பை உபயோகித்து அவற்றின் மதிப்பை அளவீடு செய்கிறது.

**மீண்டும் கைப்பற்றப்பட்ட பிணையங்கள்**

நடைமுறை வணிக செயல்பாடுகளின்படி நிறுவனத்தில் ஏதேனும் மோசடி நடைபெறின் நிறுவனம், ஏலத்தின் மூலமாக அடமானமாக வைக்கப்பட்ட நகைகள் கைப்பற்றுதல் அல்லது ஏலம் விடுவதன் மூலம் தனது நிலுவையிலுள்ள கடன்களை எதிர்கொள்கிறது. இதில் ஏற்படும் உபரியானது வாடிக்கையாளர் அல்லது உறுப்பினர்களிடம் திருப்பி அளிக்கப்படுகிறது.

மேற்கூறியவை தவிர நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு நிலை வைப்புகள் அல்லது தொடர் வைப்புகளுக்கு எதிராக கடன்களை வழங்குகிறது. இந்த பிணையங்கள் மதிப்பு இழப்பு ஏற்படுபவையாக கருதப்படுவதில்லை. இதனால் நட்டங்கள் ஏதும் உருவாவதில்லை.

**தள்ளுபடிகள் (Write –off)**

நிறுவனம் தனது நிதி சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட மதிப்பை திரும்ப பெறுவதற்கான எந்த சாத்திய கூறுகளும் இல்லாதபோது அந்த நிதி சொத்துக்களின் மீதான முழு மதிப்பை அல்லது பகுதி மதிப்பை குறைக்கிறது. இந்த சூழ்நிலை நிறுவனத்தின் கடனாளிகள் தங்களிடம் ஏதும் சொத்துக்கள் இல்லாதபோது தங்களது கடன்களை செலுத்த போதுமான வருமானம் இல்லாதபோது இந்த சூழ்நிலை ஏற்படுகிறது. இதன் தொடர்பான ஏதேனும் தொகை திரும்ப பெறப்படின் அவை லாப நட்ட கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**நியாயமான மதிப்பின் தீர்மானம்**

நியாயமான மதிப்பு என்பது சொத்துக்களை விற்கும்போது பெறப்படும் விலை அல்லது பொறுப்புகளை மாற்றம் செய்யும்போது செலுத்திய தொகை இவை வழியே நடைபெறும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் நடவடிக்கை தேதியின்போது சந்தை நடவடிக்கையில் பங்கு கொள்பவர்களால் அந்த விலை நேரடியாக பெறப்பட்டதா அல்லது இதர மதிப்பீட்டு காரணிகளால் மதிப்பீடு செய்யப்பட்டதா என்பதை குறிப்பதாகும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதான நியாயமான மதிப்பின் கணக்கீட்டில் நிறுவனம், நடவடிக்கை தேதியில் அந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் குணாதிசயங்களை கருத்தில்கொண்டு மேலும் சந்தை நடவடிக்கையில் பங்குகொள்பவர்கள் இந்த குணாதிசயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளனவா என்றும் ஆராய்ந்து அவற்றின் விலையை நிர்ணயிக்க வேண்டும். இந்த நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அவற்றின் ரொக்கமாக மாற்றக்கூடிய தன்மையை பொறுத்து ஏறு வரிசையில் காண்பிக்கப்படுகிறது.

நியாயமான மதிப்பின் அளவீடானது மற்றும் / அல்லது நிதி அறிக்கைகளின் பின் இணைப்புகளை கணக்கீடு செய்வதில் Ind AS 102 வாய்ப்புகளின்படி, பங்கு அடிப்படையிலான செலுத்தப்பட்ட தொகை அல்லாத முறையில் கணக்கீடு செய்யப்படுகிறது. Ind AS 116 கொள்கைகளின்படி குத்தகை நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டு மற்றும் அவற்றின் அளவீடுகள் யாவும் நியாயமான மதிப்பு முறையில் உள்ள சில ஒற்றுமைகளாக உள்ளன. ஆனால் Ind AS 36 -ன் உபயோகத்தின்படியான மதிப்பு நியாயமான மதிப்ப முறை அல்லாதது ஆகும்.

நிதி அல்லாத சொத்துக்களின் நியாயமான மதிப்பு அளவீடானது, சந்தை பங்கேற்பாளர்களின் சொத்துக்களை உபயோகப்படுத்தி அதனுடைய அதிகப்படியான பொருளாதார பலன்களை உருவாக்கும் திறமை மற்றும் சிறந்த உபயோகப்படுத்தும் அல்லது இதர சந்தை பங்கேற்பாளரின் சொத்துக்கள் மற்றும் அவற்றின் அதிகமாக மற்றும் சிறப்பாக உபயோகப்படுத்துவதற்காக அவற்றை விற்பதற்கும் இந்த கணக்கீடு செய்யப்படுகிறது. வெளிப்புற மதிப்பீட்டாளர்கள் முக்கிய சொத்துக்களின் மதிப்பீடு, அவையாவன சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றின் மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்த நிதியியல் அறிக்கை தயாரிப்பில் நியாயமான மதிப்பின் கணக்கீடுகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை கீழ்வருமாறு விளக்கப்படுகிறது.

- வகை-1-ன் உள்ளீடு நடவடிக்கை தேதியில் நடப்பு செயலில் உள்ள சந்தைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் குறிப்பிடப்பட்ட விலைகள் (சரிசெய்யப்படாத)
- வகை-2-ன் உள்ளீடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கவனிக்கத்தக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் குறிப்பிடப்படாத விலைகள்
- வகை-3-ன் உள்ளீடு கவனிக்க தேவையில்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உள்ளீடுகள்

நிறுவனம் அறிக்கையின் காலத்தின்போது ஏற்படும் மாற்றங்களினால் இந்த விலைகளுக்கிடையேயான நியாயமான மதிப்பின் மாற்றத்தை மேலிருந்து கீழ்வரை கண்காணித்து வரையறை செய்கிறது. நடப்பாண்டு அறிக்கை காலத்தின்போது இவ்வகையான எவ்வித நடவடிக்கையும் நிறுவனத்தில் நடைபெறவில்லை.

**பரிவர்த்தனை விலை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொடக்க நியாயமான மதிப்பின் மதிப்பு இவற்றிற்கு இடையேயான வேறுபாடு :**

நிதியியல் ஆதாரங்களின் மீதான அங்கீகரிக்கப்பட்ட தொடக்க நியாயமான மதிப்பின் சிறந்த ஆதாரமாக பரிவர்த்தனை விலை (i.e) நியாயமான மதிப்பின் கருத்தில்கொள்ளப்பட்ட கொடுக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட தொகை) ஆகும். இதை அல்லாமல் நிதி ஆதாரங்களின் மீதான நியாயமான மதிப்பின் ஆதாரத்தை இதர கவனிக்கத்தக்க நடப்பு சந்தை நடவடிக்கைகள் உடன் ஒப்பீடு செய்து (i.e மாற்றம் செய்யப்படாத) அல்லது மதிப்பீடுகளில் கவனிக்கத்தக்க சந்தை பொருளடக்கத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதாகும். இவற்றில் எந்த காரணிகள் பொருந்துகிறதோ நிறுவனம் பரிவர்த்தனை விலை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொடக்க நியாயமான மதிப்பு இவற்றிற்கிடையேயான வேறுபாட்டை லாப நட்ட கணக்கில் காண்பிக்கப்படுகிறது.

நிதியியல் ஆதாரங்களின் பரிவர்த்தனை விலையானது, தொடக்கத்தில் மதிப்பிடப்படும் நியாயமான மதிப்பு மற்றும் சந்தை நடவடிக்கைகளில் மதிப்பீட்டு காரணிகளை உபயோகப்படுத்தி கவனிக்கத்தக்க உள்ளீடுகளின் அடிப்படையிலான நியாயமான மதிப்பு இவற்றிற்கு இடையேயான வேறுபாடு ஆகும். நிறுவனம் இந்த வேறுபாட்டின் மூலம் நியாயமான மதிப்பினால் ஏற்பட்ட மாற்றங்களினால் உண்டான நிகர லாபத்தை அங்கீகரிக்கிறது. இந்த நிகழ்வுகளில நியாயமான மதிப்பானது மாதிரிகளின் அடிப்படையில் சில உள்ளீடுகளை கவனிக்க முடியாது, பரிவர்த்தனை விலை மற்றும் நியாயமான மதிப்பு இவற்றிற்கு இடையேயான வேறுபாடானது ஒதுக்கீடு செய்யப்பட்டு மற்றும் கவனிக்கும் தன்மையை கொண்டிருக்கும் உள்ளீடுகளை மட்டும் லாப நட்ட கணக்கில் அங்கீகரிக்கப்படுகிறது அல்லது இந்த ஆதாரங்கள் அங்கீகரிக்கப்படாதவையாக கருதப்படுகிறது.

**3.4 பணம் மற்றும் பணத்திற்கு சமமானது**

பணம் மற்றும் பணத்திற்கு சமமானதாக கருதப்படுவது குறுகிய கால தொகையின் நிகரம், அதிக பணமாக்கக்கூடிய முதலீடுகள் இவை எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய தன்மையை கொண்டவை. (குறுகிய கால வைப்புகள் - 3 மாதத்திற்குள் முதிர்ச்சி அடைவது) மாற்றங்களினால் ஏற்படும் மதிப்பீட்டினால் குறைந்த அளவு இடர்பாட்டை கொண்டது, கையிருப்பில் உள்ள காசோலைகள் மற்றும் வங்கிகளில் இருக்கும் இருப்புகள்

ஆகியவை அடங்கும். இவை கையில் வைத்திருப்பதற்கான காரணங்கள் நிறுவனம் தனது குறுகிய கால ரொக்க பொறுப்புகளை எதிர்கொள்வதற்காகும். முதலீடு அல்லது இதர பொறுப்புகளை தவிர்த்து பண வரவு செலவுகளின் அறிக்கைகள், பணம் மற்றும் குறுகிய கால வைப்புகள் மற்றும் மேற்கூறியவை ஆகியவற்றின் நோக்கத்தை எடுத்துரைக்கிறது.

**3.5 சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் (PPE)**

சொத்துக்கள மற்றும் இயந்திரங்கள் யாவும் அதன் வாங்கிய விலையிலிருந்து அதன் குவிந்துள்ள தேய்மானம் மற்றும் குவிந்துள்ள குறை மதிப்பு (if any) ஆகியவற்றை கழித்து காண்பித்து மதிப்பிடப்படுகிறது. இந்த சொத்துக்களின் மொத்த வாங்கிய விலையானது அதனுடைய வாங்கிய செலவு, சரக்கு கூலி, வரிகள் மற்றும் விகிதங்கள் மற்றும் இதர ஏற்படக்கூடிய செலவினங்கள் சேர்த்து மற்றும் அந்த சொத்துக்களை நிறுவனத்தில் கொண்டு வந்து சேர்த்து அவற்றின் இயங்கும் நிலைக்கு கொண்டு வரும் வரை நிறுவனத்தால் செலவிடப்படும் அனைத்து தொகைகளும் உள்ளடக்கியதாகும். இந்த சொத்துக்களின் எதிர்பார்க்ககூடிய ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறை மதிப்பீட்டு காலம், மதிப்பிடப்படும் முறைகள் மற்றும் மாற்றங்களை கொண்ட தகுந்த மற்றும் முறையான கணக்கியல் மதிப்பீடுகள் மூலம் உருவாவதாகும்.

தேய்மானம் கணக்கிடப்படும் முறையாக படிப்படியாக மதிப்பு குறைக்கும் (Written down value) முறையின் மூலம் சொத்துக்களின் வாங்கிய விலையிலிருந்து படிப்படியாக அதன் மதிப்பு குறைக்கப்படுகிறது. அதன் எஞ்சிய மதிப்பு எதிர்பார்க்கப்படும் அதன் ஆயுட்காலம் வரை நீட்டிக்கப்படும். நிலத்திற்கு தேய்மானம் கிடையாது. மதிப்பிடப்பட்ட பயனுள்ள சொத்துக்கள் கால அளவுகளாவன கீழ் வருமாறு

| விபரங்கள் | நிறுவனத்தின் பயனுள்ள சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் கால அளவு |
|---|---|
| கணினி | |
| - இறுதி பயனர் உபகரணங்கள் | 3 வருடங்கள் |
| - சர்வர் | 6 வருடங்கள் |
| அறைகலன் மற்றும் பொருத்துதல் | |
| - பாதுகாப்பு பெட்டக அறைகள் | 60 வருடங்கள் |
| - இதர | 10 வருடங்கள் |
| கட்டிடங்கள் | 60 வருடங்கள் |
| வாகனங்கள் | 10 வருடங்கள் |
| இயந்திரங்கள் | 15 வருடங்கள் |

* நிறுவனம் மேற்கூறியவற்றின் மதிப்பிலிருந்து வேறுபாடாக ஷெட்யூல் II-ன்படி இந்த சொத்தின் மீதான எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தை நிறுவனத்தின் தொழில்நுட்ப அறிவுரையின்படி மதிப்பீடு செய்கிறது.

நிறுவன சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு, அதன் ஆயுட்காலம் மற்றும் அச்சொத்துக்களின் மீதான தேய்மானத்தை கணக்கிடும் முறைகள் ஆகியவை ஒவ்வொரு நிதியாண்டிலும் மறுகணக்கீடு செய்யப்பட்டு நிதியாண்டின் முடிவில் அந்தந்த சொத்துக்களின் மீது தேவையான சரிகட்டுதல்களுடன் இருப்பு நிலை குறிப்பில் காண்பிக்கப்படுகிறது. இச்சொத்துக்களை அகற்றுவதன் மூலம் அல்லது இவற்றின் மூலம் இச்சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பொருளாதார பலன்களாக ஏற்படும் லாபம் அல்லது நட்டத்தை அந்த சொத்துக்களை அங்கீகரிக்கப்படாத லாபம் மற்றும் நட்டமாக கருதப்பட்டு அவை இதர வருமானம் அல்லது செலவு கணக்கு தலைப்பின் கீழ் லாப நட்ட கணக்கில் சேர்க்கப்படுகிறது.

**3.6 அசையா சொத்துக்கள் அல்லது புலன் ஆகாத சொத்துக்கள்**

அசையா சொத்துக்கள் என்பது எப்பொழுது அந்த சொத்துக்கான செலவு நம்பகமான செலவாக

உணரப்பட்டு மற்றும் அதனுடைய எதிர்பார்க்கப்படும் எதிர்நோக்கிய பொருளாதார பலன்கள் யாவும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டு உதவும் வகையில் செய்யப்படுகிறதோ அவை நிறுவனத்தின் அசையா சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்த அசையா சொத்துக்கள் தொடக்கத்திலிருந்தே அதன் வாங்கிய செலவு தொகையிலேயே பதியப்படுகிறது. இதனுடன் இந்த சொத்துக்கள் தொடர்பான நேரடி செலவுகளும் மற்றும் இவற்றை நிறுவனத்தின் நடப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரும் வரை ஆக்கப்படும் செலவுகள் அனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பின்வரும் தொடக்க அங்கீகரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள் யாவும் அதன் வாங்கிய செலவிலிருந்து ஏதாவது குவிந்துள்ள குறை மதிப்பு மற்றும் ஏதாவது மதிப்பு குறைவதனால் ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றை கழித்து காண்பிக்கப்படுகிறது. இந்த குறை மதிப்பீட்டின் அளவீடானது படிப்படியாக மதிப்பு குறைக்கும் (Written down value) முறையின் மூலம் அசையா சொத்துக்களின் வாங்கிய விலையிலிருந்து படிப்படியாக குறைக்கப்பட்டு அவற்றின் எஞ்சிய மதிப்பு சொத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் வரை கொண்டு செல்லப்படுகிறது. அசையா சொத்துக்களான, கணினி மென்பொருள் 3 வருடங்களில் மதிப்பு குறைக்கப்படுகிறது.

நடப்பாண்டில் நிறுவனம் தனது நிறுவன செயல்பாட்டில் புதிய மென்பொருளின் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. (.Net) நிறுவனத்தின் முந்தைய வருடங்களுக்கான Backup பழைய மென்பொருள் (Foxpro) -லேயே பின்பற்றப்படுகிறது. நிறுவனம் இந்த பழைய மென்பொருளின் மதிப்பை குறைக்காமல் அதை அப்படியே அதன் கணக்கீடுகளில் தொடர்ந்து கொண்டு வருகிறது.

### 3.7 ஒதுக்கீடுகள்

ஒதுக்கீடுகளான, நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் விளைவுகளுக்கு நடப்பாண்டில் சந்திக்கும் பொறுப்புக்களின் (சட்டப்படியான அல்லது ஆக்கப்பூர்வமான) மதிப்பீடு ஆகும். மேலும் வெளியேறும் சொத்துக்களின் பொருளாதார பலன்களை பெற தேவையாக உள்ள பொறுப்புகளை செலுத்துவதினால் நிச்சயமாக பலன்கள் ஏற்படும் என நம்பப்படுவதாகும்.

கால சூழ்நிலைகளினால் ரொக்கத்தின் மதிப்பு மாறுபடும்போது நிறுவனம் தனது குறிப்பிட்ட பொறுப்புகளுக்காக நடப்பு வரி விகிதத்தின்படி முன்கூட்டியே பண புழக்கத்தினால் ஏற்படும் நடவடிக்கை களுக்காக வரி ஒதுக்கீடு செய்வதன் மூலம் தனது பொறுப்புகளை சந்திக்கிறது. நிறுவனத்தின் செலவினங்கள் தொடர்பான ஒதுக்கீடுகள் மற்றும் இதர திரும்ப கொடுக்கப்படும் பலன்களின் நிகரம் இவற்றை நிறுவன லாப நட்ட கணக்கில் காண்பிக்கிறது.

### 3.8 எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள்

எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள், நிறுவனத்தின் முந்தைய நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகளை நடக்கும் அல்லது நடக்காது என கூற வாய்ப்புள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவன கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நிச்சயமற்ற எதிர்கால நடவடிக்கை அல்லது நடப்பு பொறுப்புகள், நிறுவன வளங்கள் வெளியேறுவதற்கான வாய்ப்பற்ற நிலையில் நடப்பதற்கு வாய்ப்பு அற்ற பதியப்படாத நடப்பு பொறுப்புகளை செலுத்துவதற்கு தேவையாக ஏற்படுத்தப்படும் பொறுப்புகள் ஆகும். இந்த நிச்சயமற்ற பொறுப்புகள், நம்பகமாக அளவிடப்பட்டு அங்கீகரிக்கப்படாத நிலையில் முற்றிலும் அறியதாக தோன்றப்படும் பொறுப்புகள் ஆகும். நிறுவனம் இந்த எதிர்பார்க்கப்படும் பொறுப்புகளை அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆனால் நிதி நிலை அறிக்கைகளோடு இதன் விபரங்களை பின் இணைக்கிறது.

### 3.9 ஒரு பங்கிற்கான வருவாய் (EPS)

நிறுவனம், Ind AS 33-ன் "ஒரு பங்கிற்கான வருவாய்" -ன்படி அடிப்படை மற்றும் செறிவூட்டப்பட்ட ஒரு பங்கிற்கான வருவாயை கணக்கிடுகிறது. பங்குதாரர்களின் அடிப்படை EPS ஆனது நிகர லாபம் அல்லது நட்டத்தை (வரிக்கு பிந்தைய வருவாய்) அந்த ஆண்டின் சராசரியான நிலுவையிலுள்ள மூலதன பங்குகளால் வகுத்து ஒரு பங்கிற்கான EPS கணக்கிடப்படுகிறது.

### 3.10 பிரிவு அறிக்கைகள்

நிறுவனத்தின் நடைமுறை பிரிவு அறிக்கையானது நிறுவன வணிக நடவடிக்கைகளான வருமானத்தை பெறுவது மற்றும் செலவினங்களை செலுத்துவது மற்றும் இதர நிதியியல் தகவல்களின்படி ஏற்படுத்தப்படும்

அறிக்கையாகும். நிதி நிறுவனம் ஒரே ஒரு நடைமுறை பிரிவை கொண்டுள்ளது - பிணையங்களுக்கான எதிரான கடன்கள். இதனால் Ind AS 108-ன் தேவையின்படி நிறுவனம் தனது பிரிவு அறிக்கையை தயாரிக்க தேவையில்லை. எனவே நிறுவனம் தனது பிரிவு அறிக்கைக்கான விளக்கங்களை Ind AS 108-ன் தேவையின்படி பின் இணைத்துள்ளது.

### 3.11 பண புழக்கங்களின் அறிக்கைகள்

இந்த பணப்புழக்கங்களின் அறிக்கைகள் நேரடி அல்லாத முறையான வரிகளுக்கு பின்பான நிகர லாபத்திலிருந்து ரொக்கமில்லாத நடவடிக்கையின் தன்மைகள், ஒத்திவைக்கப்பட்ட அல்லது குவிந்துள்ள முந்தைய அல்லது எதிர்வரும் ரொக்க வரவுகள் அல்லது செலவினங்கள் வரிகள் மற்றும் இதர நடவடிக்கைகளின் சரிகட்டுதல்களின் பிறகு தயார் செய்யப்படுகிறது. இந்த பணப்புழக்கங்களின் அறிக்கைகள் நடைமுறைகள், முதலீடுகள் மற்றும் நிதியியல் நடவடிக்கைகள் மூலம் மூன்று வகையாக பிரிக்கப்படுகிறது.

### 4 கணக்கியல் முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் முக்கியத்துவம்

நிறுவனத்தின் நிதியியல் அறிக்கைகளை உருவாக்கும்போது Ind AS -ன் தேவையின்படி நிறுவனம் அறிக்கையின் காலத்தின்போது தெரிவிக்கப்பட்ட தொகைகளான வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் இதன் தொடர்பான பின் இணைப்புக்கள் மற்றம் நிச்சயமற்ற பொறுப்புகளின் பின் இணைப்புக்கள் மீதான சில முக்கிய முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை வெளியிடுகிறது. மதிப்பீடுகள் மற்றும் அது தொடர்பான அனுமானங்கள் நிறுவனத்தின் தொடர்ந்து எடுத்துச்செல்லப்படும் கருத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

திருத்தம் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகள் யாவும் எந்த காலத்தில் அவை திருத்தம் செய்யப்பட்டவையோ அல்லது எந்த காலத்தில் அவற்றின் மூலம் விளைவுகள் ஏற்படுகிறதோ அல்லது நடப்பாண்டிற்காக திருத்தம் செய்யப்படுகிறதா அல்லது எதிர்காலத்திற்காக திருத்தம் செய்யப்படுகிறதா இந்த திருத்தத்தின் விளைவுகள் நடப்பாண்டு அல்லது எதிர்கால நிகழ்வுகளில் பாதிக்கிறதா என்பதை கணக்கில்கொண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது என்றாலும் இந்த மதிப்பீடுகளானது நிறுவனத்தினுடைய நிகழ்கால நடவடிக்கைகள் மற்றும் செயல்களில் சிறந்த அறிவின் அடிப்படையிலும், மேற்கூறிய அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கு தேவையான சரிகட்டுதல்களை கொண்ட சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் எதிர்கால நிச்சயமற்ற தன்மையை கருத்தில்கொண்டும், மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பாக, கணக்கியல் கொள்கைகளில் மதிப்பீட்டின் முக்கியத்துவமான பகுதிகள் குறித்த தகவல்கள், நிச்சயமற்ற மற்றும் சிக்கலான முடிவுகள் யாவும் நிதியியல் அறிக்கைகளில் அங்கீகரிக்கப்படும் தொகைகளில் மிகவும் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தும் காரணிகள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கியுள்ளன.

### 4.1 வணிக முறை மதிப்பீடுகள்

நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துதல் மற்றும் அவற்றின் அளவீடுகள் SPPI-ன் முடிவின் அடிப்படையிலும் மற்றும் வணிக முறை சோதனையின் மூலம் செய்யப்படுகிறது. நிறுவனத்தின் நிதி சொத்துக்கள் எவ்வாறு தனது வணிக நடவடிக்கைகளில் முடிவுகளை ஒன்று சேர்ந்து எட்டுகின்றது என்பதை இந்த வணிக முறை நடவடிக்கைகளின் மூலம் கணிக்கின்றது. இந்த மதிப்பீடானது அனைத்து முக்கிய ஆதாரங்கள் மற்றும் நிறுவன சொத்துக்கள் எவ்வாறு தனது செயல்திறனை வெளிப்படுத்துகிறது என்பதையும், அந்த செயல் திறன்கள் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது என்பதும், அந்த செயல் திறன்களினால் ஏற்படும் இடர்பாடு எவ்வாறு நிறுவன சொத்துக்களின் நடவடிக்கைகளை பாதிக்கிறது என்பதை நிறுவனம் ஏற்று சமாளிக்கிறது என்பதனையும் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாகும். நிறுவனம் தனது நிதியியல் சொத்துக்களை தொடர்ந்து கண்காணித்து அவற்றை குறை மதிப்பீட்டு முறை அல்லது இதர விரிவான வருமானங்களின் மீதான நியாயமான மதிப்பு முறை மூலம் மதிப்பீடு செய்கிறது. இதில் முந்தைய நடவடிக்கைகளினால் அவற்றின் மீதான முதிர்ச்சி அடைதல் அல்லது அவற்றை வெளியேற்றுதல் ஆகிய காரணிகளை அங்கீகரிக்கப்படுவதில்லை. நிறுவனத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்த மதிப்பீடு என்பது வணிக முறை மதிப்பீட்டின் மூலம் நிதியியல் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு தொடர்ந்து மதிப்பேற்றம் செய்யப்படுகிறதா என்றும் இல்லையென்றால் இந்த மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மாற்றத்தினால் வருங்காலத்தில் ஏற்படும் விளைவுகளினால் இந்த சொத்துக்களை மாற்றி வகைப்படுத்தி அமைக்கப்பட வேண்டும்.

**4.2 வரையறுக்கப்பட்ட பணியாளர்களின் நல சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்**

வரையறுக்கப்பட்ட நல பணிக்கொடை திட்டம் மற்றும் நடப்பாண்டு மதிப்பான பணிக்கொடை பொறுப்புகளின் செலவானது உண்மையான மதிப்பீட்டின் மூலம் கணக்கீடு செய்யப்படுகிறது. இந்த உண்மையான மதிப்பீடு பல்வகையான அனுமானங்கள் அவை எதிர்வரும் வளர்ச்சிக்கான உண்மையான மதிப்பீட்டிலிருந்து வேறுபட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த கணக்கீடானது தள்ளுபடி விகிதம், எதிர்வரும் ஊதிய உயர்வுகள் மற்றும் இறப்பு விகிதம் ஆகிய காரணிகளை உள்ளடக்கியது. இந்த கணக்கீட்டில் அனுமானங்களினால் ஏற்படும பல சிக்கல்கள் மற்றும் நீண்டகால தன்மை, வரையறுக்கப்பட்ட நல பொறுப்புக்களில் மிகவும் இடர்பாடான நிலை போன்றவை ஏற்படுகிறது. எல்லா அனுமானங்களும் வருடத்திற்கு ஒரு முறை பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

**4.3 நியாயமான மதிப்பின் அளவீடு**

இருப்பு நிலை குறிப்பில் பதியப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் நியாயமான மதிப்பு நடப்பு சந்தையின் குறிப்பிட்ட விலையின் மதிப்பாக கணக்கிடப்படுவதில்லை. அவற்றின் நியாயமான மதிப்பு பல்வேறு வகையான மதிப்பீட்டு முறைகளை பின்பற்றி அளவீடு செய்யப்படுகிறது. இந்த பல்வேறு வகையான மதிப்பீட்டில் சாத்தியமான கவனிக்கத்தக்க சந்தை மதிப்பு முறை மூலம் மதிப்பிடப்படுகிறது. ஆனால் எப்பொழுது சாத்தியமற்றதாக இருக்கிறதோ அப்பொழுது நியாயமான மதிப்பின் மேலான நிர்வாகத்தின் முடிவுகள் தேவைப்படுகிறது. இந்த நிர்வாக முடிவுகள் பணமாக்குவதில் ஏற்படும் இடர்பாடுகள், கடன் இடர்பாடுகள் ஆகிய காரணிகளை கருத்தில்கொள்ளப்படுகிறது. இந்த அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிதியியல் ஆதாரங்களின் நியாயமான மதிப்பு முறையை பாதிக்கிறது.

**4.4 குறைபாடுடைய கடன் போர்ட் போலியோ**

குறைமதிப்புடைய நட்டங்களின் அளவீடானது எல்லா நிலையில் உள்ள நிதியியல் சொத்துக்களின் மேலான முடிவுகள் குறிப்பாக எதிர்வரும் பணப்புழக்கங்கள் மற்றும் பிணையங்களின் மதிப்பின் மீதான மதிப்பீட்டின் தொகை மற்றும் கால அளவு குறை மதிப்புடைய நட்டங்களை கணிக்கும்போது மற்றும் கடன் இடர்பாடு ஏற்படுவதற்கான முக்கியத்துவத்தை மதிப்பிடுதல். இந்த கணக்கீடானது பல்வகைப்பட்ட காரணிகளும் பலவகை படிநிலையிலுள்ள இதர பலன்களின் மீதான மாற்றங்களின் விளைவுகளையும் கொண்டுள்ளது. நிறுவனத்தின் கொள்கைகளாக இவை தொடர்ந்து பகுப்பாய்வு செய்யப்பட்டு இந்த மாதிரிகளின் விளைவாக ஏற்படும் உண்மையான நட்டத்தின் அனுபவத்தையும் கொண்டு அவை தேவைப்படும் போது சரிகட்டப்படுகிறது. Note 3.3.7-ல் இந்த கடன்கள் மற்றும் அட்வான்ஸ்கள் மீதாக ஏற்படும் குறைமதிப்பீட்டு நட்டங்கள் பற்றிய விபரங்கள் பின் இணைக்கப்பட்டுள்ளது.

**4.5 குறை மதிப்பீட்டான லோன் போர்ட் போலியோ அல்லாத நிச்சயமற்ற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்**

நிறுவனம் ஒழுங்கு மற்றும் சட்டபடியான சூழ்நிலைகளின் மூலம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் உயர்த்தப்பட்ட தன்மை மற்றும் அதன் உள்ளார்ந்த நடவடிக்கைகளில் ஏற்படும் வழக்கு தொடர்பான இடர்பாடுகள் ஆகியவற்றை சமாளித்து நிறுவன நடவடிக்கையை மேற்கொள்கிறது. இதன் விளைவாக நிறுவனத்தின் நடைமுறை வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் வழக்குகளுக்கு நிறுவனம் வழக்கு நடுவர் மன்றமாக செயல்படுகிறது. எப்பொழுது நிறுவனம் உண்மையாகவே தனது குறிப்பிட்ட சில நிகழ்வுகளின் மூலமான பொருளாதார நலன்களின் வெளியேற்றத்தின் அளவீட்டின் தொடர்பான மற்றும் நிச்சயமான சில வெளியேற்ற நடவடிக்கைகளையும் கணித்து, நிறுவனம் அதன் மீதான ஒதுக்கீட்டை அளவிடுகிறது. இந்த வெளியேற்றத்திற்கான நிகழ்தகவுகள் கணக்கீடு தொலை நோக்கான அல்லது நிகழக்கூடிய மற்றும் இந்த நிச்சயமற்ற பொறுப்புகளின் மீது இந்த உண்மையான மதிப்பீடு உருவாக்கப்படுவதில்லை. இதன் தொடர்பான கணக்கீடுகள் பின் இணைக்கப்படுகிறது.

**4.6 ஆற்றல்மிகு வட்டி விகிதமுறை** (EIR)

நிறுவனத்தின் EIR முறையானது, எதிர்பார்க்கப்பட்ட நடத்தை விதிமுறைகளின்படியான வழங்கப்படட கடன்கள் அல்லது பெறப்பட்ட கடன்களின் வட்டி வருமானம் / செலவினங்களின் மீது இந்த வட்டி விகித முறையைக்கொண்டு சிறந்த மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்படுகிறது மற்றும் பல்வேறு நிலைகளில் தேவையானபோது பல்வேறு வட்டி விகித முறையில் எது அவற்றில் எது சாத்தியமானதோ அவற்றை உபயோகப்படுத்தி மற்றும் இதர குணாதிசயங்களை கொண்ட பொருட்களின் வாழ்நாள் சுழற்சி முறையையும் கணக்கில்கொண்டு இவற்றின் மீதான வட்டி விகிதமானது கணக்கிப்படுகிறது. (முன்செலுத்தப்பட்ட தொகைகள் மற்றும் அபராத வட்டி மற்றும் இதர செலவுகள்)

### 4.7 இதர மதிப்பீடுகள்

இதர மதிப்பீடுகள் நிச்சயமற்ற பொறுப்புகள், அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் ஆயுட்காலத்தை பொறுத்தது ஆகும்.

## 5 இருப்புகளின் தன்மை மற்றும் அதன் பயன்பாடுகள்

### 5.1 பொது இருப்புகள்

முந்தைய காலத்தில் இருந்த சட்ட விதிகள் 1956-ன் கீழ் குறிப்பிடப்பட்ட பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி நிறுவனத்தின் வருடாந்திர லாபத்திலிருந்து குறிப்பிட்ட சதவிகிதம் இந்த பொது இருப்புகளுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அந்த ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட பங்காதாயத்தின் சதவிகிதம் மொத்தம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 10% -க்கு மேல் இருப்பின் கொடுப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையைவிட குறைவாக இருந்திருந்தால் அந்த வேறுபாட்டை சந்திப்பதற்கு இந்த பொது இருப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. நிறுவனச்சட்டம் 2013-ன் வெளியீட்டின் விளைவுகளால் நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகித பகுதியை பொது இருப்புகளுக்கு கட்டாயமாக மாற்றம் செய்யப்படுவது திரும்ப பெறப்பட்டது. எனவே நிறுவனச்சட்டம் 2013-ன்படி முந்தைய ஆண்டுகளில் மாற்றம் செய்யப்பட்ட பொது இருப்புகள் சட்ட விதிகளின்படி குறிப்பிட்ட தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

### 5.2 தக்கவைத்துக்கொண்ட வருவாய்

இந்த தக்க வைத்துக்கொண்ட வருவாய் என்பது பொது இருப்புகள், லாப நட்ட கணக்கின் பொதுவான தன்மை கொண்ட இருப்புகள் பற்று மற்றும் வரவு பக்கமாக காண்பிக்கப்படுகிறது. இந்த இருப்புகள் நிறுவனச்சட்டம் 2013-ன் விதிமுறைகளின்படி கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 5.3 மறுமதிப்பீட்டின் உபரி

மறுமதிப்பீட்டின் இருப்பு என்பது இருப்பு மற்றும் உபரியின் ஒரு வகையாகும். இந்த இருப்பானது நிறுவனத்தின் சொத்துக்கள் அல்லது நிகர சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யும்போது ஏற்படக்கூடிய உபரியாகும். இந்த மதிப்பீடு நிறுவன கணக்கீடுகளில் காண்பிக்கப்படும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றுத்தொகை அல்லது எதிர்பார்க்கப்பட்ட சந்தை மதிப்பு இவற்றிற்கு இடையேயான வேறுபாட்டால் ஏற்படுவது ஆகும். நிறுவன சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யும்போது அந்த சொத்துக்கள் கொண்டுள்ள தொகையைவிட மறுமதிப்பீட்டினால் அதன் மதிப்பு அதிகமாகும்போது ஏற்படக்கூடிய உபரி குவித்து பங்கு மூலதன தலைப்பின் கீழ் மறுமதிப்பீட்டு உபரியாக காண்பிக்கப்படுகிறது. இதன்பதிலாக அந்த சொத்தின் மறுமதிப்பீட்டின்போது மதிப்பு குறையும்போது ஏற்படக்கூடிய குறைவுதொகையை குவித்து பங்கு மூலதன தலைப்பின்கீழ் இருப்புகள் மற்றும் உபரியில் கழித்து காண்பிக்கப்படும்.

### 5.4 இதர விரிவான வருமானத்தின் இதர பொருட்கள்

இதர விரிவான வருமானத்தின் இதர பொருட்களாக திருப்பி கொடுக்கப்படும் நிகர வரையறுக்கப்பட்ட நலன்களின் பொறுப்புக்கள் அல்லது சொத்துக்கள் ஆகியவையாகும். இவற்றோடு இவற்றின் மீதான தொடர்புடைய வரிகளின் விளைவுகளும் உள்ளடங்கும்.

நிறுவனச்சட்டம் 2013 ஷெட்யூல் **III Division III -** ன் கீழ் தேவைப்படும்
கூடுதலான ஒழுங்குமுறை தகவல்கள்

| வ. எண் | ஷெட்யூல் III-ன் படி மாற்றியமைக்கப்பட்ட பின் இணைப்புகள் | பின் இணைக்கப்படாமையின் விளக்கங்கள் (ஏதாவது இருப்பின்) |
|---|---|---|
| 1 | நிறுவனத்தின் பெயரில் இல்லா அசையா சொத்துக்களின் மீதான உரிமை பத்திரங்கள் | அசையா சொத்துக்களின் மீதான உரிமை பத்திரங்கள் நிறுவனத்தின் பெயரில் இல்லாமல் இருத்தல் போன்ற எந்த சொத்துக்களும் இல்லை. அனைத்தும் நிறுவனத்தின் பெயரிலேயே உள்ளது. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது. |
| 2 | சொத்துக்கள் மற்றும் இயந்திரங்களின் மறு மதிப்பீடு | நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் இயந்திரங்களின் மறு மதிப்பீடு தற்போது செய்யப்படவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது. |
| 3 | அசையா சொத்துக்களின் மறு மதிப்பீடு | நிறுவனத்தின் அசையா சொத்துக்களின் மறு மதிப்பீடு தற்போது செய்யப்படவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது. |
| 4 | நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள், இயக்குநர்கள், KMPs மற்றும் இதர தொடர்புடைய நபர்களுக்கு கடன் வடிவிலாக ஏதாவது கடன்கள் அல்லது அட்வான்ஸ்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா | இல்லை |
| 5 | மூலதனம் வேலை நடந்து கொண்டிருக்கிறதா (CWIP) | உண்டு |
| 6 | ஆராய்ச்சியின் கீழ் ஏதாவது அசையா சொத்துக்கள் உள்ளதா | இல்லை |
| 7 | அந்நிய செலாவணி (பினாமி) சொத்துக்கள் ஏதேனும் உள்ளனவா | நிறுவனத்திடம் அந்நிய செலாவணி (பினாமி) சொத்துக்கள் இல்லை |
| 8 | நடப்பு சொத்துக்களை பிணையமாக வைத்து வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் பெறப்பட்டுள்ளனவா | நிறுவனத்திற்கு, வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து நடப்பு சொத்துக்களை பிணையமாக வைத்து கடன்கள் எதுவும் பெறவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது. |
| 9 | வேண்டுமென்றே கடனை செலுத்த தவறியவர் | நிறுவனம் வேண்டுமென்றே கடனை செலுத்த தவறியவர் என எந்த வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் அல்லது இதர கடனாளர்களால் அறிவிக்கப்படவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது. |
| 10 | நிறுத்தப்பட்ட நிறுவனங்களுடனான உறவு | நிறுவனம், நிறுத்தப்பட்ட நிறுவனங்களுடனான உறவு தொடர்பான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. |
| 11 | நிறுவனங்களின் பதிவாளர்களிடம் ஏதேனும் கட்டணம் பதியப்பட்டுள்ளதா | இல்லை |
| 12 | விதிகளின்படி நிறுவனத்தின் பணி நிலைகள் உள்ளனவா | நிறுவனம், எந்த உப நிறுவனங்கள்/கூட்டாண்மைகள் அல்லது கூட்டு முயற்சிகளையும் கொண்டிருக்கவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது |
| 13 | பகுப்பாய்வு விகிதங்கள் | பொருந்தாது |

| வ. எண் | ஷெட்யூல் III-ன் படி மாற்றியமைக்கப்பட்ட பின் இணைப்புகள் | பின் இணைக்கப்படாமையின் விளக்கங்கள் (ஏதாவது இருப்பின்) |
|---|---|---|
| 14 | விதிமுறைகளின் படியான அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் | நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 230 முதல் 237 வரையிலான விதிமுறைகளின்படி நிறுவனம் எந்த ஒரு ஒருங்கிணைப்புகளுக்கான திட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிப்பதற்கான நிலுவையில் உள்ள திட்டங்களிலும் ஈடுபடவில்லை. |
| 15 | கடனாக பெறப்பட்ட நிதிகள் மற்றும் பங்கு பிரீமியம் (உபரி) -ன் பயன்பாடு. | a. நிறுவனத்தின் எந்த நிதிகளும் (தனிப்பட்ட நபர்களுக்கோ அல்லது கூட்டாகவோ) அட்வான்ஸ் ஆக அல்லது கடன்களாக அல்லது கடன் நிதிகளின் முதலீடுகளாகவோ அல்லது பங்கு பிரீமியம் அல்லது இதர ஆதாரங்களாகவோ அல்லது இதர நிதி ஆதாரங்களாகவோ - நிறுவனமோ அல்லது இதர நபர்களாலோ அல்லது கூட்டாண்மையாலேயோ வெளிநாட்டு கூட்டாண்மையாலேயோ (இடைத்தரகர்கள்) - உடன் அவர்களுடன் எழுத்து வடிவிலான அல்லது இதர வடிவிலான உடன்படிக்கை நேரடியாகவோ அல்லது மறைமுகவோ கடனாக அல்லது முதலீட்டாக இதர நபர்கள் அல்லது கூட்டாண்மையின் எந்த வடிவிலும், எதுவாக இருந்தாலும் நிறுவனத்தாலேயோ அல்லது நிறுவனத்திற்கு பதிலாகவோ (இறுதி பயனாளிகள்) அல்லது எந்த உத்திரவாதத்தையும், பத்திரங்களாகவோ அல்லது இதைப்போல எதுவும் இறுதி பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை. |
| 16 | பின் இணைக்கப்படாத வருமானம் | இல்லை |
| 17 | பெரு நிறுவன சமுதாய பொறுப்புணர்வு (CSR) | Note -37 ஐ பார்க்கவும் |
| 18 | கிரிப்டோ கரன்சி அல்லது விரிச்சுவல் கரன்சி தொடர்பான தகவல்கள் | நிறுவனம் கிரிப்டோ கரன்சி அல்லது விரிச்சுவல் கரன்சி ஆகியவற்றில் வணிகம் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. எனவே இந்த பின் இணைப்புக்களின் குறிப்பு நிறுவனத்திற்கு பொருந்தாது |

## கிளை தொலைபேசி எண்கள்

| | | |
|---|---|---|
| 01. | ஆடுதுறை | 0435-2472205 |
| 02. | அம்பத்தூர் | 044-26584899 |
| 03. | அம்மாபேட்டை | 04374-232636 |
| 04. | அண்ணாநகர் – மதுரை | 0452-2532114 |
| 05. | அண்ணாநகர்–சென்னை | 044-26545119 |
| 06. | அறந்தாங்கி | 04371-223116 |
| 07. | ஆரணி | 04173-226865 |
| 08. | அரியலூர் | 04329-220990 |
| 09. | அசோக்நகர் | 044-24899584 |
| 10. | ஆவடி | 044-26554899 |
| 11. | ஆத்தூர் | 04282-250102 |
| 12. | வத்தலகுண்டு | 04543-262369 |
| 13. | செங்கல்பட்டு | 044-27429510 |
| 14. | செய்யாறு | 04182-223107 |
| 15. | சிதம்பரம் | 04144-223009 |
| 16. | சின்மையா நகர் | 044-24791217 |
| 17. | சின்னமனூர் | 04554-248149 |
| 18. | சிந்தாதிரிப்பேட்டை | 044-28456700 |
| 19. | குரோம்பேட்டை | 044-22655767 |
| 20. | கோயம்புத்தூர் | 0422-2599944 |
| 21. | கடலூர் | 04142-236753 |
| 22. | தர்மபுரி | 04342-265005 |
| 23. | திண்டுக்கல் | 0451-2433206 |
| 24. | கிழக்குதாம்பரம் | 044-22273055 |
| 25. | ஈரோடு | 0424-2264290 |
| 26. | கந்தர்வக்கோட்டை | 04322-275337 |
| 27. | கூடுவாஞ்சேரி | 044-27462001 |
| 28. | ஜெயங்கொண்டம் | 04331-250211 |
| 29. | K.புதூர், மதுரை | 0452-2564666 |
| 30. | கள்ளக்குறிச்சி | 04151-223875 |

| | | |
|---|---|---|
| 31. | காஞ்சிபுரம் | 044-27233104 |
| 32. | காங்கேயம் | 04257-220113 |
| 33. | காரைக்கால் | 04368-223294 |
| 34. | காரைக்குடி | 04565-234277 |
| 35. | கரூர் | 04324-264138 |
| 36. | கூத்தாநல்லூர் | 04367-232737 |
| 37. | கிருஷ்ணகிரி | 04343-237005 |
| 38. | குளித்தலை | 04323-222390 |
| 39. | குத்தாலம் | 04364-230115 |
| 40. | கும்பகோணம் பஜார் | 0435-2420790 |
| 41. | கும்பகோணம் பெசன்ட்ரோடு | 0435-2421041 |
| 42. | கும்பகோணம் | 0435-2431648 |
| 43. | மடிப்பாக்கம் | 044-22423130 |
| 44. | மதுக்கூர் | 04373-260252 |
| 45. | மதுரை | 0452-2344187 |
| 46. | மங்களபுரம் – தஞ்சாவூர் | 04362-246100 |
| 47. | மண்ணச்சநல்லூர் | 0431-2560879 |
| 48. | மணப்பாறை | 04332-260402 |
| 49. | மன்னார்குடி | 04367-252237 |
| 50. | மயிலாடுதுறை | 04364-223067 |
| 51. | மேலூர் | 0452-2417194 |
| 52. | மயிலாப்பூர் | 044-24981439 |
| 53. | நாச்சியார்கோவில் | 0435-2466622 |
| 54. | நாகப்பட்டினம் | 04365-240776 |
| 55. | நாகர்கோவில் | 04652-220677 |
| 56. | நாமக்கல் | 04286-223129 |
| 57. | நங்கநல்லூர் | 044-22242749 |
| 58. | நன்னிலம் | 04366-230111 |
| 59. | நீடாமங்கலம் | 04367-260202 |
| 60. | நெய்வேலி | 04142-263444 |

## கிளை தொலைபேசி எண்கள் (தொடர்ச்சி...)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61. | ஒரத்தநாடு | 04372-232446 | 91. | திருக்காட்டுப்பள்ளி | 04362-280545 |
| 62. | பழனி | 04545-243148 | 92. | திருமங்கலம் | 04549-280284 |
| 63. | பல்லாவரம் | 044-22641332 | 93. | திருப்பனந்தாள் | 0435-2456020 |
| 64. | பண்ருட்டி | 04142-242077 | 94. | திருப்புறம்பியம் | 0435-2455472 |
| 65. | பாபநாசம் | 04374-222854 | 95. | திருத்துறைப்பூண்டி | 04369-222851 |
| 66. | பட்டுக்கோட்டை | 04373-252348 | 96. | திருவையாறு | 04362-260551 |
| 67. | பேரளம் | 04366-238579 | 97. | திருவள்ளூர் | 044-27662664 |
| 68. | பெரம்பலூர் | 04328-276548 | 98. | திருவான்மியூர் | 044-24421789 |
| 69. | பெரம்பூர் | 044-25510490 | 99. | திருவாரூர் | 04366-222367 |
| 70. | பெரியகுளம் | 04546-231821 | 100. | திருவெறும்பூர் | 0431-2510197 |
| 71. | பொள்ளாச்சி | 04259-229426 | 101. | திருவொற்றியூர் | 044-25737701 |
| 72. | பொன்னேரி | 044-27973103 | 102. | தூத்துக்குடி | 0461-2323548 |
| 73. | பூவிருந்தவல்லி | 044-26495583 | 103. | துறையூர் | 04327-256109 |
| 74. | போரூர் | 044-24769124 | 104. | திண்டிவனம் | 04147-222074 |
| 75. | புதுக்கோட்டை | 04322-222154 | 105. | திருச்சிராப்பள்ளி | 0431-2419856 |
| 76. | ராஜபாளையம் | 04563-220525 | 106. | திருநெல்வேலி | 0462-2333548 |
| 77. | இராமநாதபுரம் | 04567-222101 | 107. | திருப்பத்தூர் | 04179-221006 |
| 78. | செங்குன்றம் | 044-26310117 | 108. | திருப்பூர் | 0421-2203150 |
| 79. | சைதாப்பேட்டை | 044-24340484 | 109. | திருவண்ணாமலை | 04175-223182 |
| 80. | சேலம் | 0427-2210203 | 110. | திருவல்லிக்கேணி | 044-28480609 |
| 81. | சங்கரன்கோவில் | 04636-222269 | 111. | உடுமலைப்பேட்டை | 04252-224033 |
| 82. | சீர்காழி | 04364-270985 | 112. | வலங்கைமான் | 04374-264455 |
| 83. | ஸ்ரீரங்கம் | 0431-2433158 | 113. | வந்தவாசி | 04183-226106 |
| 84. | சோழிங்கநல்லூர் | 044-24502118 | 114. | வேளச்சேரி | 044-22431109 |
| 85. | தி.நகர் (Fax :044-28144286) | 044-28141334 | 115. | வேலூர் | 0416-2222201 |
| 86. | தாம்பரம் | 044-22266043 | 116. | வில்லிவாக்கம் | 044-26171108 |
| 87. | தென்காசி | 04633-224112 | 117. | விழுப்புரம் | 04146-222956 |
| 88. | தஞ்சாவூர் | 04362-231641 | 118. | விருத்தாச்சலம் | 04143-230337 |
| 89. | தேனி | 04546-254472 | 119. | விருதுநகர் | 04562-246093 |
| 90. | திருக்கோவிலூர் | 04153-253110 | | | |

# கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம்.

CIN : U65991TN1903PLN001246

**படிவம் எண். (Form No.) - MGT - 11**

**பதிலாள் படிவம் (PROXY FORM)**

(நிறுவனச் சட்டம் 2013 - 105 (6) விதியின் படியும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன்படி 19(3) - ன் விதிகளுக்கு இணங்க)

**119-வது வருடாந்திர பேரவை கூட்டம் - 29 செப்டம்பர் 2023**

| | |
|---|---|
| உறுப்பினர்(களின்) பெயர் | |
| பதிவு முகவரி | |
| | |
| மின்னஞ்சல் | |
| போலியோ எண். | |

**நான் / நாங்கள் மேற்கூறிய நிறுவனத்தில் உறுப்பினர்(கள்)-ஆக..................... பங்குகள் வைத்துள்ளோம். இதனால் நான்/நாங்கள் நியமிக்கும்**

1. பெயர்.......................................................................................................................................
   முகவரி.....................................................................................................................................
   மின்னஞ்சல் : ................................................... கையொப்பம் ........................................................ அல்லது
   அவர்/அவள் (பதிலாக)
2. பெயர்.......................................................................................................................................
   முகவரி.....................................................................................................................................
   மின்னஞ்சல் : ................................................. கையொப்பம் ........................................................ அல்லது
   அவர்/அவள் (பதிலாக)
3. பெயர்.......................................................................................................................................
   முகவரி.....................................................................................................................................
   மின்னஞ்சல் : .................................................... கையொப்பம் ........................................................ அல்லது
   அவர்/அவள்-ஐ

எனக்கு/எங்களுக்கு பதிலாக நிறுவனத்தின் **29, செப்டம்பர் 2023, வெள்ளிக்கிழமை அன்று எண்.73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001 என்ற முகவரியில் உள்ள ராயா மஹாலில்** காலை 10.00 மணியளவில் நடைபெறவிருக்கின்ற **119-வது ஆண்டு பேரவை கூட்டத்தில்** எனது/எங்களது பதிலியாக (Proxy) கலந்துகொண்டு எனக்கு/எங்களுக்கு பதிலாக வாக்களிக்கவும் (வாக்கெடுப்பில்) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இத்தகைய தீர்மானங்கள், அவற்றின் மேலான ஒத்திவைப்பு ஆகியவற்றில் பங்கேற்க நியமிக்கின்றேன்/றோம்.

| தீர்மானம் எண் | தீர்மானங்கள் |
|---|---|
| | **சாதாரண அலுவல்கள்** |
| 1 | மார்ச் 31, 2023ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைகளையும், இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர் குழுவின் அறிக்கைகளையும் பெறுதல், பரிசீலித்தல் மற்றும் ஏற்றுக்கொள்வது. |
| 2 | 2022-23 ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத்தொகையை அறிவித்தல் |
| 3 | சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர் திரு.M.குரு பிரசாந்த் (DIN:09359770) அவர்கள் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல், இவர் மீண்டும் தேர்வு பெற தகுதியுடையவர். மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார். |
| 4 | சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர் திருமதி.E.அம்பிகா (DIN : 09353335) அவர்கள் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல், இவர் மீண்டும் தேர்வு பெற தகுதியுடையவர். மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார். |
| | **சிறப்பு அலுவல்கள்** |
| 5 | நிதியின் அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) திருத்தம் செய்தல். |

**.............................. நாளில் ..................................................................., 2023-ல் கையொப்பமிட்டார்.**

**பங்குதாரர் / களின் கையொப்பம்...........................................................................**

**பதிலி / பதிலிகளின் கையொப்பம்............................................................................**

Affix Revenue Stamp Re.1/-

குறிப்பு : 1. இந்த பதிலி படிவமானது முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்டு மற்றும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடப்பதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக அளிக்கப்பட்டால் மட்டுமே இந்த படிவம் செல்லுபடியாகும்.

2. படிவத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பாக உறுப்பினர்(கள்) அனைத்து தகவல்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

## கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம்.

CIN : U65991TN1903PLN001246. Ph : 0435-2401548

தொலை நகல் : 0435-2431682 வலைதளம் : www.kmbf.co மின்னஞ்சல் : kmbf@kmbf.co

### வருகை சீட்டு

இந்த வருகை சீட்டில் கையொப்பமிட்டு கூட்டம் நடக்கும் இடத்தின் நுழைவு வாயிலில் ஒப்படைக்கவும்.

| உறுப்பினரின் பெயர் | பதிலியின் பெயர் |
|---|---|
| திரு./திருமதி. | திரு./திருமதி. |
| பங்கு சான்றிதழ் எண் : | பதிலி ஒப்புகை எண் : |
| பங்குகளின் எண்ணிக்கை : | பங்குகளின் எண்ணிக்கை : |

நான், 73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001-ல் அமைந்துள்ள ராயா மஹாலில் 29 செப்டம்பர் 2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் நடைபெறும் நிறுவனத்தின் 119-வது வருடாந்திர பேரவை கூட்டத்திற்கு எனது வருகையை பதிவு செய்கிறேன்.

உறுப்பினர் அல்லது பதிலியின் கையொப்பம்

---

## கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம்.

### வருகை சீட்டின் ஒப்புதல் சீட்டு

**ஆண்டு பேரவை கூட்டம் : 29-09-2023 காலை 10.00 மணி**

**இடம் : ராயா மஹால், 73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001.**

| உறுப்பினரின் பெயர் | பதிலியின் பெயர் |
|---|---|
| திரு./திருமதி. | திரு./திருமதி. |
| பங்கு சான்றிதழ் எண் : | பதிலி ஒப்புகை எண் : |
| பங்குகளின் எண்ணிக்கை : | பங்குகளின் எண்ணிக்கை : |

## அறந்தாங்கி கிளை திறப்பு விழா




## செங்குன்றம் கிளை திறப்பு விழா



KMBF
NIDHI LIMITED

## சோழிங்கநல்லூர் கிளை திறப்பு விழா




## காங்கேயம் கிளை இடமாற்றம்



**செலுத்தப்பட்ட மூலதனம்** (₹ கோடிகளில்)




**காப்பு மற்றும் உபரி** (₹ கோடிகளில்)




**வைப்புகள்** (₹ கோடிகளில்)




**கடன்கள்** (₹ கோடிகளில்)




**இலாபம்** (₹ கோடிகளில்)




**பங்காதாயம்** (₹ கோடிகளில்)




## சீர்மிகு வளர்ச்சியில்...

(₹கோடிகளில்)

| வருடம் | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | 28.96 | 29.04 | 29.11 | 29.20 | 29.29 | 29.43 | 29.54 | 29.70 | 29.84 | 29.99 | 30.16 |
| காப்பு | 78.33 | 93.51 | 109.37 | 1123.69 | 140.56 | 167.55 | 203.92 | 239.12 | 294.30 | 357.61 | 416.37 |
| வைப்புகள் | 1530.46 | 1607.35 | 1570.74 | 1664.55 | 1806.63 | 1916.36 | 2206.88 | 2356.46 | 2737.74 | 3119.72 | 3500.46 |
| கடன்கள் | 1671.36 | 1339.18 | 1424.77 | 1384.52 | 1620.83 | 1739.16 | 1966.16 | 2200.70 | 2608.91 | 2889.87 | 3198.84 |
| இலாபம் | 56.40 | 40.37 | 37.67 | 35.69 | 37.37 | 49.59 | 60.39 | 63.63 | 75.15 | 93.27 | 101.84 |
| பங்காதயம் | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 25% | 25% |
| கிளைகள் எண்ணிக்கை | 99 | 99 | 103 | 107 | 107 | 108 | 109 | 112 | 113 | 114 | 116 |

* Subject to Approval of shareholders at its ensuing Annual General Meeting

நூல்-அஞ்சல்
அச்சிடப்பட்ட புத்தகம்

பெறுநர் :




பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம்.



பட்டுவாடா செய்யப்படவில்லை எனில், தயவு செய்து திருப்பி அனுப்புக

## கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 145, பெரிய தெரு, கும்பகோணம் - 612 001.
CIN : U65991TN 1903 PLN 001246. Ph : 0435 - 2401548
Fax : 0435 - 2431682 Website : www.kmbf.co e-mail : kmbf@kmbf.co

ஸ்தாபிதம் : 1903

**இந்தியாவில் NDH4 அங்கீகாரம் பெற்ற முதல் நிதி நிறுவனம்**

நாடார் பிரஸ், குடந்தை. 0435-2423112